கல்கி

KALKI
18.11.2007
ரூ.8.00
80 பக்கங்கள்

குடும்பத்துடன் படிக்க...



பதினோராவது அவதாரம்!



விண்ணை முட்டும் விளம்பர மோகம்!



MAHALAKSHMI
CATERING SERVICES
எங்களது முக்கியமான சேவைகள்
மங்கள வாத்தியம், மாலை புஷ்பம் வேண்டிய அளவு
கோலம் போடுதல், கிரஷ், வைதீக சாமான்கள், அங்குமணி சாமான்கள் டப்பாவுடன்
மண்டபம் Cleaning Materials, தாம்பூல பை (With Printing)
ஆர்த்தி பச்சைபடி ஏற்பாடுகள், காசியாத்திரை சாமான்கள், பெயருடன் பட்டுபாய், மாப்பிள்ளை சிறப்பு சீர்வகைகள்.
Sp.Tea / Coffee / Boost / Milk, உயர்தர டிபன் வகைகள், உயர்தர சாப்பாடு வகைகள், சீர்பக்ஷணங்கள் இருவீட்டாருக்கும், வெற்றிலை சீவல், ரஷீக்லால் பாக்கு, பீடா
Paper roll, Disposable Cups, Mineral Water, சீருடைப் பணியாளர்கள்.
Bridal Make-up
எங்கள் சேவை உங்கள் மகிழ்ச்சியே!
Contact: B. NAGARAJAN
52, Balamurugan Nagar, 10th Street, Keelkattalai, Chennai - 600 117.
Phone: 2247 2255, 6546 2875 Cell: 98410 13540, 98410 77397
Trichy : 98424 51975

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

18-11-2007

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

உள்ளே...

ஜாலி ஸ்டோர்ஸ்

அது!

குசும்புராஜ்

எழுத்தாளர் 'எழுச்சி நாயகன்' தீபாவளிக்கு ஒரு சிறுகதை அனுப்பியிருந்தார். அதனை தீபாவளி ஸ்பெஷலில் வெளியிட்டு, வாசகர்களின் சந்தோஷத்தைக் கெடுக்க விரும்பவில்லை. அதே சமயம், அவரது மனமும் நோகக்கூடாது என்ற எண்ணத்தில் ஒரு வாரம் கழித்து வருகிறது.

'அது' குறித்து அவருக்கும் அவனுக்குமிடையே கடுமையான விவாதம் நடந்தது. அது ஏன் அதுவாக இருக்க வேண்டும் என்ற ஆங்காரமான கோபம் அவனுக்கு. அது அப்படி அதுவாக இருப்பதன் இயல்பு குறித்த தெளிவு அவருக்கு.

''அது, அதுவாகவே இருக்க வேண்டுமென யார் நிர்ணயித்தது? அது 'இது'வாக ஏன் மாறக்கூடாது?'' என்று அவன் கேட்டான்.

''அது ஏன் இதுவாக மாற வேண்டுமென நினைக்கிறாய்? அது அதுவாக இருப்பதைக் கௌரவக் குறைவாக நினைக்கிறாய். அதனால்தான் இதுவாக மாற வேண்டுமென்கிறாய். உண்மையில் அதைக் கேவலப்படுத்துவது நீங்கள்தானே தவிர, இதைச் சேர்ந்தவர்களல்ல'' என்றார் அவர்.

அதை அவன் ஏற்கவில்லை ''இது, அது இதுவாகிவிடக் கூடாது என்பதற்காக இதுவைச் சேர்ந்தவர்கள் சாமர்த்தியமாகச் சொல்லும் வார்த்தை ஜாலம், எண்ண தந்திரம், பேச்சு ஏமாற்றல், அதுவை உயர்வுபோல் காட்டி அதுவாக வைத்திருக்கக் கையாளும் புத்திசாலித்தனம்'' என்றான்.

'அது எது? இது எது?' என்ற கேள்வி உங்களுக்குள் நீண்டு விரிந்து, பரந்து, வளர்ந்து, நகர்ந்து, அலைந்து கொண்டிருக்கிறதல்லவா?

உண்மையில் 'அது' உருவமற்றது. ஆனால், உருவங்கள் கொண்ட 'அதுகள்' உண்டு.



சமூகத்தில் அது பல பெயர்களில், பல வார்த்தைகளில், பல வகைகளில் குறிப்பிடப்படுகிறது. பல போராட்டங்களைச் சந்திக்கிறது. நிறமற்ற இரத்தத்தைச் சிந்துகிறது, சில சமயங்களில் நிறமுள்ள இரத்தத்தையும்.

ஆனால், 'அது' இரத்தம் சிந்தச் சொல்லவில்லை. அதற்குத் தவறான உருவம் கொடுத்தவர்களால், அவர்களுக்குப் பின் வந்தவர்கள் சிந்துகிறார்கள். அந்தத் தவறான உருவத்துக்கு இன்னும் தவறான அலங்காரம் செய்கிறார்கள். ஒருவேளை அவர்கள், அதற்குச் சரியான உருவம் கொடுத்திருந்தாலும் இவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமல் போயிருக்கலாம்? அதை இவர்களின் புரிதலில் ஏற்பட்ட தவறு என்றும் சொல்லலாம். புரிபடாமல் செய்த அவர்களின் தவறு என்றும் குறிப்பிடலாம். இதுகூட எனது அறிவின் புரிதலில் ஏற்பட்ட எண்ணம்தானே தவிர, முடிவான முடிவல்ல. எனது புரிதலும் தவறாகி இருக்கலாம். ஆகவே, இது சரியா? தவறா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நீங்களே.

ஒருவேளை இதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால் மகிழ்ச்சி. தவறாகப் புரிந்துகொண்டால் அது உங்களின் தவறாகவும் இருக்கலாம். தவறில்லாமலும் இருக்கலாம். ஏனெனில் எது சரி? எது தவறு? என்று சரியாகச் சொல்ல யாருமே தெளிவாக இல்லை.

''சரி, இப்போது என்னதான் சொல்கிறீர்கள்?'' என்று அவன் சற்றே இறங்கி வந்தான். தப்பு, இறங்கி வருவதுபோல் வந்தான்.

அவர் மர்மமாய்ச் சிரித்தார். ''நான் சொன்னாலும் அதை நீ ஏற்கப் போவதில்லை. ஏனெனில் 'அது' குறித்து உனக்குள் ஏற்கெனவே முடிவெடுத்து விட்டாய். இப்போது நீ கேட்பது போலியாக. வேண்டாமே இந்தப் போலித் தனம்'' என்றார்.

அதை அவன் மறுத்தான். விவாதம் நீண்டது. அது இதுவாக வேண்டுமென்பதில் அவன் குழப்பமுமில்லாத, தெளிவுமில்லாத ஒரு தெளிவற்ற தெளிவில், குழப்பமற்ற குழப்பத்தில் இருந்தான். அவரும் அப்படியே. அந்தச் சமயத்தில் அதுவும் இதுவும் உருவகமாய் அவர்களுக்குப் பின்னால் நின்று அமைதியாய் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன. ●

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

தலைமை உதவி ஆசிரியர் : **மு.மாறன்**

ஆசிரியர் குழு : **சா.ஜெயராஜ், ஆரணி யுவராஜ்**

வடிவமைப்பு : **எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்**

தொலைபேசி : 2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் : 044 - 2225 1021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.



விளம்பரங்களும் அமர்க்களப்படுகின்றன. போஸ்டர், டிஜிட்டல் பேனர் என்று விழா நடைபெறும் ஏரியாவே கலகலக்கிறது. தலைவர்கள் வீட்டிலிருந்து விழா நடக்கும் இடம் வரை போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவது குறித்துக் கவலைப்படாமல்

விண்ணை முட்டும்

அக்டோபர் மாதம் 29ம் தேதியன்று சென்னையில் தமிழக வனத்துறை அமைச்சர் செல்வராஜின் மகன் திருமணம் நடந்தது. அன்றைய தினம் வெளிவந்த முரசொலி நாளேட்டில் மொத்தம் 30 பக்கங்களில் 25 பக்கங்கள் அந்தத் திருமணம் குறித்த விளம்பரங்கள்தான்! அமைச்சரிலிருந்து துவங்கி, திருச்சி மாவட்டத்திலிருக்கும் ஒன்றிய, நகரச் செயலாளர் வரை கலைஞரையும் ஸ்டாலினையும் திருமணத்துக்கு வருகவென்று கூவின. 'தமிழகத்தின் எதிர்காலமே', 'நாளைய தமிழகமே', 'கழகத்தின் காவல் தெய்வமே' என்று ஸ்டாலினை உயர்த்திப் பிடிக்கும் வாசகங்களும் நிறையவே விளம்பரங்களில் இருந்தன.

திருமணம் மட்டுமல்ல; தலைவர்களின் பிறந்தநாள் வந்துவிட்டால் போதும், கட்சிப் பிரமுகர்கள் விளம்பரங்களில் பணத்தைக் கொட்டுகிறார்கள். மஞ்சள் நீராட்டு விழா, காது குத்தல் என்று எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் விளம்பரங்கள் குவிகின்றன.

கட்சிப் பத்திரிகை மட்டுமின்றி பொதுப் பத்திரிகை

* இல.கணேசன்



ஆளுயர ஆஃப்செட் போஸ்டர்களை நடுரோட்டில் வைத்து அமர்க்களப்படுத்துகிறார்கள். தேசியக் கட்சியான காங்கிரஸ், டெல்லியிலிருந்து யாராவது 'சோட்டா' பிரமுகர் வந்தாலும், விமான நிலையத்திலிருந்து போஸ்டர் போட்டு அசத்துகிறது. விஜயகாந்த் கட்சி புதுக்கோட்டையில் நடந்த கட்சி நிகழ்ச்சிக்காகத் தொலைக்காட்சியில் சரமாரியாக விளம்பரங்கள் கொடுத்து அசத்தியது. இந்த விளம்பரங்களிலும் போஸ்டர்களிலும் பேனர்களிலும் கட்டவிழ்த்து விடப்படும் தனி மனிதத் துதிகள், இன்று ஒரு புற்றுநோயாக தமிழக அரசியலைத் தாக்கிவிட்டது என்று தைரியமாகச் சொல்லலாம். இந்நோய் பரப்பும் கலாசாரம் நம் தமிழக கிராமங்களைத் தாக்கி, அங்குள்ளவர்களையும் விளம்பர அரிப்பு போட்டு வாட்டுகிறது.

''கம்யூனிஸ்ட், பாரதிய ஜனதா கட்சிகளைத் தவிர, மற்ற கட்சிகள் அனைத்தும் தனி மனிதர்களை உயர்த்திப் பிடிக்கும் ஊதுகுழல்களாக மாறிவிட்டன'' என்கிறார் தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன். ''தன் கட்சிப் பெயரைவிட தன் பெயரே மக்களுக்குத் தெரிந்தி



ருக்க வேண்டும் என்று தலைவர்கள் நினைப்பதுதான் தமிழகத்தின் சாபக் கேடு. இந்தக் கட்சிகளுக்கு இலட்சியம், கொள்கைகள் இருந்தால்தானே அதைச் சொல்லிக் கட்சி வளர்க்க முடியும். தான் வேறொரு துறையில் பெற்ற செல்வாக்கினை அரசியலில் பயன்படுத்தும்போது, தனி மனிதத் துதியில்தான் முடியும். சமீபத்தில், மருது சகோதரர்கள் விழா மதுரையில்

விளம்பர மோகம்!



* சரத்குமார்

நடந்தபோது, அவர்களை விட அழகிரி - ஸ்டாலின் சகோதரர்களின் பேனர்களே அதிகமாகச் சாலைகளை ஆக்ரமித்திருந்தன. இதனால் மக்களுக்கு அரசியல் மீது வெறுப்புணர்ச்சியே வளர்கிறது'' என்கிறார் இல.கணேசன்.

கட் -அவுட் கலாசாரத்துக்கு வித்திட்டவர் என்றால், ஜெயலலிதாவைத்தான் சொல்ல வேண்டும். அ.தி.மு.க.வினர் அம்மாவை வரவேற்று பேனர் வைப்பதில் எழுந்த பூசல் காரணமாக கட்சிக்காரர்களின் மண்டைகள் உடைந்ததுண்டு.

''சுதந்திரப் போராட்டத்தின் போதே தனி மனித வழிபாடு இருந்தது'' என்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் தா.பாண்டியன். ''அதற்குப் பிறகு நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி என்று தொடர்ந்த தலைவர்களின் காலத்தில் பரிணாம வளர்ச்சி பெற்றது. இதற்கு மீடியாவும் முக்கியக் காரணம். இந்தத் துதி பாடும் விளம்பரங்கள் சூதாட்டம் போன்றதுதான். ஆனால், விளம்பர மோகத்தால் மட்டுமே வளர்ந்த பல அமைச்சர்களும், பிரமுகர்களும் காலப் போக்கில் மக்களால் மறக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்கிறார்!

* தா. பாண்டியன்



'**சு**தந்திரப் போராட்ட காலத்துத் தலைவர்கள் தியாகத்துக்கு உத்வேகமூட்டி, தியாகமும் செய்தார்கள். தேசப் பற்று வளர்த்தார்கள். இன்றைய தலைவர்கள் அப்படியா செய்கிறார்கள்?' என்றால் மறுக்கிறார் கராத்தே தியாகராஜன்.

''இந்த விளம்பரங்களைத் தனி மனித வழிபாடு என்று எப்படிச் சொல்ல முடியும்? குறிப்பிட்ட ஒரு பிரமுகரை உயர்த்திப் பிடிக்கிறோம் என்றால், அந்தப் பிரமுகரின் மூலம் கட்சிப் பிரசாரம்தானே நடக்கிறது. மேலும் உள்ளூரில் ஒருவர் கட்சியை வளர்க்க வேண்டும் என்றால், அவரது செல்வாக்கு உயர்ந்து நான்கு பேருக்கு அவரைத் தெரிய வேண்டும். இதற்காகத்தான் அவர் பெயரில் போஸ்டர்கள்,



* சோலை

டிஜிட்டல் பேனர்கள். இந்தக் காலத்தில் இவையெல்லாம் மிக அவசியமாக இருக்கின்றன'' என்கிறார்!

''முதலில் காங்கிரஸ்காரர்கள் நாட்டுக்கு என்ன செய்தோம் என்று விளம்பரப்படுத்தாததால்தான் தமிழகத்தில் ஆட்சியை இழந்தோம். எனவே, விளம்பரம் மிகவும் அவசியம். மேலும் விளம்பரம் செய்யும் லோக்கல் பிரமுகர்கள் கட்சிக்குள்ளும் அங்கீகரிக்கப்படுகிறார்களே'' என்கிறார்

திராவிடக் கட்சிகளுக்கு மாற்று வந்தால் மட்டுமே, இந்த நோய் தமிழர்களை விட்டு நீங்கும்.

மற்றொரு பிரமுகரான சிரஞ்சீவி. சமீபத்தில் திருமுல்லைவாயலில், திருமண மண்டபத்தை திறந்து வைக்க வாசன் வந்தார். இரண்டு கி.மீ.க்கு முன்னரே விளம்பர பேனர்கள் துவங்கிவிட்டன.

''தங்களது திட்டம், செயல்பாடு மூலம் மட்டுமே ஒரு தலைவர் நிலைத்து நிற்க முடியுமே தவிர, துதி பாடல்கள் மூலம் கிடைக்கும் செல்வாக்கு மிகவும் தாற்காலிமானதே. அதே சமயம், மக்களுக்குப் பல விஷயங்களைச் சொல்ல குறைந்த பட்ச விளம்பரமும் அவசியமாகிறது'' என்கிறார் சமத்துவ மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரான சரத்குமார்.

* ஜி.கே.மணி




சமீப காலமாக பா.ம.க. கட்சித் தொண்டர்களுக்காக நடத்தும் அரசியல் பயிலரங்கில், தனி மனித வழிபாடு தவிர்த்து, கொள்கை சார்ந்த அரசியலுக்குப் பழக்கப்படுத்திக்கொள்ள பாடம் எடுக்கப் படுகிறது. ''எங்கள் கட்சியில் யாரும் பிறந்த நாளே கொண்டாடக் கூடாது என்பது நிறுவனர் ஐயாவின் கட்டளை. கொண்டாட்டத்துக்கு தடை என்றால், அப்புறம் விளம்பரங்களுக்கு வேலை இல்லையே'' என்கிறார் அதன் தலைவர் ஜி.கே.மணி.

''அறிஞர் அண்ணா மறைந்தவுடன் இந்தக் கலாசாரம் துவங்கிவிட்டது. அவர் காலத்தில் மாநில மாநாடுகளுக்குக்கூட சுவர் விளம்பரங்கள்தான். 1971-ல் இந்திரா காந்தியிடம், கலைஞர் யுத்த நிதி கொடுத்த போது போடப்பட்ட போஸ்டர்கள் சர்ச்சையை உண்டாக்கின. மறைந்த மதியழகனை 'மேதை' மதியழகன் என்று பிறந்த நாளின்போது போஸ்டர் போட்டார்கள்'' என்கிறார் திராவிட இயக்க ஆராய்ச்சியாளரான க.திருநாவுக்கரசு.

கட்சித் தலைவர்களும் இந்த விளம்பரங்களைக் கூர்ந்து கவனித்து வருகிறார்கள். கட்சி சார்பான விளம்பரங்கள் என்றால், கலைஞரின் ஒப்புதல் பெறப் படும். அ.தி.மு.க.வில் ஜெயலலிதா நிற்பது போன்று போஸ்டர் போட்டால், அவரது தலைக்குப் பக்கத்தில் கட்சிப் பிரமுகர்கள் படம் இருக்கக் கூடாது. அப்படி ஒருமுறை கராத்தே தியாகராஜனை (அ.தி.மு.கவில் இருந்தபோது) வைத்துப் போட்ட போஸ்டருக்காக தொண்டர்களைக் கூப்பிட்டு விளாசிவிட்டார் ஜெயலலிதா.

''1967-ல் தேர்தலின்போது காங்கிரஸ் ஆட்சியைக் குறித்து தி.மு.க. வெளியிட்ட சிறுசிறு போஸ்டர்கள் வாக்காளர்களிடம் பெரிய மாற்றத்தை உருவாக்கின'' என்கிறார் அரசியல் விமர்சகர் சோலை. ஆனால் இன்று தேர்தல் போஸ்டர்கள்கூட தனி நபர் துதிதான் பாடுகின்றன.



இன்று விளம்பரத் துறையில் ஏற்பட்டிருக்கும் அசாத்திய முன்னேற்றம் காரணமாக, டிஜிட்டல் பேனர்கள் வைப்பது சுலபமாகப் போய்விட்டது. இது ஒரு வகையில் கட்-அவுட்களை ஒழித்தும் விட்டது. ''அரசியல் டிஜிட்டல் பேனர்களைக் கொஞ்சம் மலிவான ஷீட்டில்தான் போட்டுத் தருகிறோம். சதுர அடி ரூபாய் ஏழுதான். அதேபோல் பெரிய பெரிய போஸ்டர்களும் ஏதோ பிரமிப்பூட்டும் வகையில் காட்சியளிக்குமே தவிர, அடிப்பது என்னவோ நூறு இருநூறுதான். அரசியல் போஸ்டர் என்றால், பணத்தை வாங்கிய பிறகே அச்சடிப்போம்'' என்கிறார் சிவகாசி அச்சக உரிமையாளர் பாண்டியன்.

டிஜிட்டல் வளர்ச்சி ஓவியர்களை வேலை இல்லாமல் செய்திருக்கிறது. ''இந்தத் தனி மனித வழிபாடு மற்றும் துதிபாடுதல் என்பது திராவிடக் கட்சிகளின் அரவணைப்பில் வளரும் தமிழகத்தில் மட்டுமே இருக்கிறது. இது காட்டுமிராண்டித்தனமானது என்றுகூடச் சொல்லுவேன். திராவிடக் கட்சிகளுக்கு மாற்று வந்தால் மட்டுமே, இந்த நோய் தமிழர்களை விட்டு நீங்கும். இருபத்தைந்து வருடங்கள் மேற்கு வங்கத்தை ஆட்சி செய்த ஜோதிபாசுவுக்குத் தனி மனித கவர்ச்சி கிடையாது. கட்சிக் கொள்கைகளும் திட்டங்களுமே ஆட்சியில் நீடிக்கக் காரணம். கொல்கத்தாவில், தமிழகத்தைப் போன்று பேனர்களும் போஸ்டர்களும் வைக்கும் பழக்கம் கிடையாது'' என்கிறார் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ். ராகவன்.

* கராத்தே தியாகராஜன்



-ஸ்ரீநி

அட்டை படம்: ஸ்ரீஹரி

படங்கள் : ராஜன்



நம்ப முடியாத

அதிரடி ஆக்ஷன் ஹீரோவான ரஜினியை, ஒரு கிராமத்துப் பின்னணி கொண்ட கதையில், ஆர்ப்பாட்டம் துளியுமில்லாமல் அமைதியான நடிப்புக்கு மட்டுமே வாய்ப்புள்ள வயதான ஒரு கதாபாத்திரத்தில் நடிக்கச் செய்தது, இப்போது நினைத்துப் பார்த்தாலும் கனவு போலத்தான் இருக்கிறது. ஆனால், அந்தப் படத்தின் அடித்தளமே, பஞ்சு அருணாசலத்தின் மிக அழுத்தமான கதைதான். ரஜினி ஒரு கிராமத்து ஆள். கடுமையாக உழைக்கும் விவசாயி. மிகவும் சிம்பிளான மனிதர். அவர் அம்பிகாவைத் திருமணம் செய்து கொள்கிறார். அம்பிகாவுக்கு, ரஜினி வீட்டின் சூழ்நிலை துளிக்கூடப் பிடிக்கவில்லை. சேற்றில் கால் பதிய நின்று பார்க்கும் விவசாய வேலைகளையும், சாண நாற்றமடிக்கும் வீட்டுச் சூழ்நிலையையும் அவர் வெறுக்கிறார். அந்த ஊர் பண்ணையாரின் மகனோ, நகரத்துச் சூழ்நிலையில் வசிக்கும் நாகரிகமான இளைஞன். கிராமத்தான் ரஜினியையும், நகரத்துப் பண்ணையார் மகனையும் அம்பிகாவின் மனசு ஒப்பிட்டுப் பார்த்து, பண்ணையார் மகன் மீது ஒருவித ஈர்ப்பு ஏற்படுகிறது. ஒரு நாள், ரஜினி உட்பட யாருக்கும் தெரியாமல் அம்பிகா பண்ணையார் மகனுடன் புறப்பட்டு நகரத்துக்குச் சென்று விடுகிறார்.

அம்பிகா, தன் வீட்டுப் படியைத் தாண்டும் காட்சியின் போது, இசைஞானி இளையராஜா ஒரு ரீரிக்கார்டிங் பண்ணியிருப்பார் பாருங்கள்... அபாரம்! திருமணம் என்பதற்கு நம் பாரம்பரியம், பண்பாட்டில் தரப்பட்டுள்ள முக்கியத்துவம் என்ன! அதை எல்லாம் துச்சமாக மதித்துத் தூக்கி எறிந்துவிட்டு, இந்தப் பெண் படி தாண்டுகிறாளே என்று பார்க்கிறவர்கள் மனத்தைப் பதைபதைக்கச் செய்யும்படியாக, திருமணத்தின்போது சொல்லப்படும் 'மாங்கல்யம் தந்துனானே' மந்திரத்தை ராஜா ஒலிக்கச் செய்திருப்பார். அவரது பின்னணி இசை, அந்தக் காட்சிக்கு பெரிய அளவில் வலு சேர்த்தது.

நகரத்தில், பண்ணையார் மகன் வீட்டுக்கு வந்து சேரும் அம்பிகாவைப் பார்த்தவுடன், அந்த வீட்டில் வேலை

ரஜினி!

எஸ்.பி. முத்துராமன்



பார்க்கிறவர்களுக்கு ஒரே அதிர்ச்சி. காரணம், அவர்கள் எல்லாம் பண்ணையாரின் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அம்பிகாவின் படி தாண்டிய செயலைத் தவறு என்று விமர்சித்துத் தங்களுக்குள் பேசிக்கொள்வதை அம்பிகா கேட்க நேருகிறது. தன் தவறு அவருக்குப் புரிகிறது. மனம் பதறுகிறது. பண்ணையார் மகனிடம், ''வசதியான நகரத்து வாழ்க்கை மேல் ஆசைப்பட்டு, சஞ்சலமடைந்ததன் காரணமாக நான் வீட்டின் படி தாண்டும் தவறைச் செய்து விட்டேன். என் தப்பை இப்போது நான் உணர்ந்துவிட்டேன். தயவுசெய்து என்னை கிராமத்துக்குக் கொண்டுபோய் இப்போதே விட்டுவிடுங்கள்'' என்று அழுகிறார். அவரும், அம்பிகாவை கிராமத்துக்குத் திரும்ப அழைத்துக்கொண்டு வந்து விட்டுவிடுகிறார்.

கிராமப் பஞ்சாயத்து, அம்பிகாவை பதின்மூன்று வருடங்களுக்கு ஊரைவிட்டு விலக்கி வைத்துத் தண்டனை அளிக்கிறது. அம்பிகா ஊருக்கு வெளியில் ஒரு குடிசையில் தனியாக வசிக்கிறார். அம்பிகாவின் தங்கையான ராதாவை ரஜினிக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள். ராதாவின் பராமரிப்பில் வளரும், ரஜினிக்கும் அம்பிகாவுக்கும் பிறந்த குழந்தை, ஒரு நாள் அம்பிகாவைப் போய்ப் பார்த்துவிட்டு வந்ததற்காக, குழந்தை கையில் அம்மா ராதா சூடுபோட்டு விடுவார். அப்போது ரஜினி, 'உங்களுக்குள்ளே ஆயிரம் பிரச்னை இருக்கலாம். அதற்காகக் குழந்தைக்குச் சூடு போடறியே... நீ ஒரு மனுஷியா?' என்று கோபித்துக்கொண்டு ராதாவை அடித்து விடுவார். அந்த இடத்தில் ரஜினி என்ற ஆக்ஷன் ஹீரோவைப் பார்க்க முடியாது. ஒரு பாசம் பொங்கும் அப்பாவைத் தான் பார்க்கலாம்.

இந்தப் படத்தில் ரஜினி - ராதாவின் மகளாக நடித்த சிறுமிதான் பின்னர் ஏவி.எம்.மின் 'எஜமான்' படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த மீனா! மகளாக நடித்தவர், மனைவியாக நடித்தது காலச் சக்கரத்தின் சுழற்சி!

வருடங்கள் ஓடும். அம்பிகா முதுமை அடைந்த நிலையில், ஒரு நாள் அவரது அம்மாவைச் சந்திக்கும்போது, ''நான் வீட்டைவிட்டு ஓடிப்போனது தவறுதான். ஆனால், வேறு எந்தத் தவறும் நிகழாமல், என் தவறை உணர்ந்து திரும்பி வந்துவிட்டேன். ஊர்ப் பஞ்சாயத்து பதின்மூன்று வருட தண்டனை கொடுத்ததை ஏற்றுக் கொண்டு, தனிமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் இன்னும் ரொம்ப நாள் உயிருடன் இருக்க மாட்டேன். நான் இறந்தால், ஊரார் என்னை ஓர் அனாதைப் பிணமாக அடக்கம் செய்துவிடுவார்கள். என்னைத் தொட்டுத் தாலி கட்டியவர் இருக்கும்போது, நான் அனாதை இல்லை. அது மட்டுமல்ல... என் உயிர் உடலை விட்டுப் பிரிவதற்கு முன்னால், அவரை நான் ஒரே ஒரு முறை பார்க்க விரும்புகிறேன்'' என்று தன் அம்மாவிடம் சொல்ல, அவர் அதனை ரஜினியிடம் தெரிவிக்கிறார்.

ரஜினி ஊருக்கு வெளியில் இருக்கும் குடிசைக்குச் சென்று அம்பிகாவைச் சந்திக்கும்போது, உணர்ச்சிவசப்பட்டு அம்பிகா, ரஜினியின் நிழலைத் தொட்டுக் கும்பிடுவதற்காக நெருங்கி வருவார். ஆனால்,



கௌபாய் கெட்டப்பில் நடந்து வந்து, துப்பாக்கியை அந்தரத்தில் தூக்கிப் போட்டு, 'கோபுவும் நானே பாபுவும் நானே' என்று ரஜினி பேசிய வசனம்தான் கோபி, ரஜினியின் பரம ரசிகனாகக் காரணம். முப்பத்தெட்டு வயதாகும் கோபிக்குத் தாம்பரம்தான் பூர்வீகம். தற்போதைக்கு துபாயில் இருந்தாலும், மனது எப்போதும் தாம்பரத்தில்தான். ரஜினி படம் வெளியாகும் போதெல்லாம் துபாயிலிருந்து கிளம்பி, சென்னைக்கு வந்துவிடுகிறார்.

துபாய், ஷார்ஜா போன்ற வளைகுடா நாடுகளில் வேலைதேடி வரும் ரஜினி ரசிகர்களுக்குக் கோபிதான் சகலமும். வளைகுடா நாடுகளின் வாழ்க்கை முறை, கலாசாரம் பற்றியெல்லாம் கோபியால் மணிக்கணக்கில் பேச முடிகிறது. ரஜினி போலவே கோபிக்கும் ஏகப்பட்ட முகங்கள். இரண்டு வயது பையனுக்குத் தந்தையான இவரின் முக்கியமான பொழுது போக்கு, நாணயங்கள் சேகரிப்பது தான்.

ரஜினி பிறந்தநாள் மற்றும் அவரது படம் வெளியாகும் சமயங்களில் உள்ளூர் ரேடியோ, பத்திரிகைகளில் சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கி வரும் இவருக்கு நன்றாகப் பாடவும் வரும். ஏகப்பட்ட சட்டதிட்டங்கள் அமலில் இருக்கும் துபாய், ஷார்ஜா, குவைத்... போன்ற வளைகுடா நாடுகளில் ரஜினியின் பிறந்த நாளன்று பெரிய அளவில் இரத்ததான முகாம் நடத்துவது தான் கோபியின் தற்போதைய இலட்சியம். கீப் இட் அப் கோபி!

– ஜெ.ராம்கி

ரசிகர் மன்ற ராஜாக்கள்-2

கிட்டே வந்ததும் சட்டென்று விலகி, 'உங்கள் நிழலைத் தொடும் அருகதைகூட எனக்கு இல்லை' என்று கலங்குவார். ரஜினி 'தப்பு செய்வது மனிதர் களுக்கு இயற்கைதான். ஆனால், தப்பை உணர்ந்தவர்களை ஆண்டவன் நிச்சயமாக மன்னிப்பார்' என்று மிகவும் அமைதியாகச் சொல்வார். அதிரடி ஆக்ஷன் ஹீரோவான ரஜினி, அந்தக் காட்சியில் அமைதியே உரு வாக நடிப்பதைப் பார்க்க மிகவும் வித்தியாசமாக இருக்கும்.


அம்பிகா இறந்ததும் ரஜினி, 'ஊரே எதிர்த்து நின்றாலும், கணவர் என்ற முறையில் நான் என்னுடைய கடமையைச் செய்தே தீருவேன்' என்று சொல்லி, அம்பிகாவைத் தானே சுமந்து சென்று அடக்கம் செய்துவிட்டு, குடும்பத்துடன் அந்த ஊரை விட்டே சென்றுவிடுவார். ரஜினி படம் என்றால் செம ஜாலியாகப் படம் பார்த்து ரசிக்கும் ரசிகர்கள், 'எங்கேயோ கேட்ட குரல்' படத்தைப் பார்த்து விட்டுக் கனத்த மனத்துடன் சென்றார்கள். அதற்கு ரஜினியின் அழுத்தமான நடிப்புதான் காரணம். 'சிவாஜி' ரஜினியை 'எங்கேயோ கேட்ட குரல்' ரஜினியுடன் ஒப்பிடவே முடியவில்லை. இன்றைக்கு இவ்வளவு பெரிய சூப்பர் ஸ்டாராக இருக்கும் ரஜினி, அன்றைக்கு சாதாரண ஒரு கிராமத்தான் வேடத்தில் நடித்தது நம்பவே முடியாத உண்மை!

ரஜினி நடித்த 'எங்கேயோ கேட்ட குரல்' படத்தை இயக்கிய அதே நேரத்தில் கமலை வைத்து ஏவி.எம். தயாரித்த 'சகலகலா வல்லவன்' படத்தையும் இயக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரே நாளில் இரண்டு படங்களும் ரிலீஸ் ஆயின. அப்போது...



(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம்:
சந்திரமௌளி



ஜாதகமே தேவையில்லை நீங்களும் யோகசாலியாக வேண்டுமா?

ஒயிட் & ஒயிட் VVMB

நல்லப்பன் நீல்கண்ட சிவா சொன்னது நடந்தது. நடராஜர் பத்து என்னும் பாடலை பாடிய சித்தர்வழி பரம்பரை ஜோதிடர் முனீஸ்வரர் அருள்வாக்கு சித்தர்

நெ.32, மகாலட்சுமி தெரு, திநகர், சென்னை–17.
போன் : 044–24761913 செல்: 98412 94932, 94444 16854

முனீஸ்வரர் அருளால் ஜாதகமே இல்லாமல் ஒருவருடைய முகத்தைப் பார்த்தும், கைரேகையைப் பார்த்தும், புகைப்படத்தை பார்த்தும், நடந்ததையும் நடக்கப் போவதையும், ஒளிவு மறைவு இல்லாமல் பளிச்சென்று பலன் சொல்லி அனைத்துப் பிரச்சினைகளையும், செய்வினை தோஷங்களையும், கிரக தோஷங்களையும் நிவர்த்தி செய்து அதிர்ஷ்டசாலி ஆக்குகிறார்.

ராஜ் டி.வி. யில் தினமும் காலை 6.50 மணிக்கு தோன்றுகிறார்

பிரதி மாதம் விஜயம்

1ந் தேதி–செகுந்திராபாத் (ஓட்டல் இராமகிருஷ்ணா)
2,3,11,12,20,21,22,23,24ந் தேதி– பெங்களூர் (ஓட்டல் உட்லண்ட்ஸ் சிம்ஸன் சர்க்கிள் எதிரில்)
5ந் தேதி–திருச்சி (ஓட்டல் ரம்யாஸ்)
6ந் தேதி–சேலம்(ஓட்டல் நேஷனல்)
8ந் தேதி–மதுரை (ஓட்டல் செந்தூர்)
13,14ந் தேதி–பாண்டிச்சேரி (ஓட்டல் ஜெயராம்)
25ந் தேதி–வேலூர் (வசந்தவிகார்)
28ந் தேதி–கோயம்புத்தூர் (ஓட்டல் தமிழ்நாடு)
சென்னையில் 4,7,9,10,15,16,17,18,19,26,27,29,30,31 ஆகிய தேதிகளில் நேரில் சந்திக்கலாம்
இவர் தன்னுடைய வருமானத்தை கோயில் திருப்பணிக்காகவும், நூற்றுக்கணக்கான கோயில் கும்பாபிஷேகத்திற்காகவும் செலவு செய்யும் பரம்பரை ஜோதிடர்



கைரேகை, எண்கணிதம், வாஸ்து சாஸ்திரம்.
முனீஸ்வரர் அருள்வாக்கு சித்தரின் வாரிசு

நல்லப்பன் ராஜநந்திவர்ம சிவா, B.E., M.I.S.T.E., MBA., LLB.

முனீஸ்வரர் அருள்வாக்கு வாஸ்துசித்தர் அவர்களை அணுகி வாஸ்து முறைப்படி வீட்டை அமைத்தும், தொழில் நிறுவனத்தை வாஸ்து முறைப்படி அமைத்தும், அஷ்ட ஐஸ்வர்யம் பெற்று வாழ அணுகவும்.

முகவரி: நெ.32, மகாலட்சுமி தெரு, திநகர், சென்னை–17.
போன் : 044–24761913 செல்: 98412 94932, 94444 16854
செல்: 9841594931, 9841294933, 9884476529

முனீஸ்வரர் அருள்வாக்கு சித்தரின் ஆசிபெற்ற **விஜயஜீவி வீடியோ கவரேஜ்**
நெ.23, முதல் குறுக்குத் தெரு, அன்னைசத்யா நகர், புதுப்பேட்டை, இராமாபுரம், சென்னை–89.
போன்:044-24761913, செல்:9841594931, 98412 94933, 98844 76529

ஸ்ரீ கலங்காமற்காத்த விநாயகர் துணை


அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில்

(குரு பரிகார ஸ்தலம்) ஆலங்குடி –612 801

வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம், போன்: 04374-269407:email:@sancharnet.in

குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா

ஆன்மீகப் பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள்



நிகழும் சர்வஜித்து வருடம் ஐப்பசி மாதம் 29ம் தேதி **15.11.2007 வியாழக்கிழமை** அதிகாலை 2.24க்கு **அருள்மிகு குருபகவான் விருச்சிக ராசியில் இருந்து தனுசு இராசிக்கு பிரவேசிக்கிறார்**

அதை முன்னிட்டு கீழ்க்கண்ட இராசி நேயர்கள் தங்களுடைய ஜென்ம ராசிக்கு பரிகாரம் செய்து கொள்வது மிகவும் உத்தமம்.

இராசிகள் ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம்

அதனை முன்னிட்டு அருள்மிகு குருபகவானுக்கு ஐப்பசி மாதம் 15ம்நாள் 1.11.2007 வியாழக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 21ம் நாள் 7.11.2007 புதன்கிழமை முடியவும் மீண்டும் கார்த்திகை மாதம் 6ம் நாள் 22.11.2007 வியாழக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 17ம் நாள் 3.12.2007 திங்கட்கிழமை முடிய இலட்சார்ச்சனை நடைபெறும்.

அஞ்சல் மூலம் பிரசாதம் பெற **இலட்சார்ச்சனை கட்டணம் ரூ. 150/-**

அ/மி. குருபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளியினால் செய்த டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

தொகையை மணியார்டர் மூலமாகவோ, டிமாண்ட் டிராப்டாகவோ:–

செயல் அலுவலர்: **அ/மி. ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோவில்**
ஆலங்குடி–621 801, வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

என்ற முகவரிக்கு தங்களுடைய பெயர், நட்சத்திரம், இராசி, கோத்திரம், லக்னம் ஆகிய முழு விபரங்களையும், எழுதி அனுப்பி பிரசாதம் பெற்றுக்கொள்ளலாம். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் அல்லது சிட்டி யூனியன் வங்கி (திருவாரூர் மாவட்டம்) ஆலங்குடி–621801 என்ற முகவரிக்கு எடுத்து அனுப்பவும்.

பொன் நந்தகோபால் எம்.ஏ., (செயல் அலுவலர்) **வீ.அன்பரசன்** பி.ஏ., (அறங்காவலர் குழு தலைவர்)

அறங்காவலர்கள்: **S.M.B துரைவேலன்** பி.ஏ., **A.S. ரவி** பி.ஏ., **சித்ரா ரவிச்சந்திரன் A. தியாகராஜன்**

வட்டாரம், முனி படங்கள் வெளியானதை அடுத்து தயாரிப்பாளர் என்ற முறையில் இயக்குநர் சரணுக்குச் சில பிரச்னைகள். இப்போது, அதையெல்லாம் சரி செய்துவிட்டார். சில மாத இடைவெளிக்குப் பிறகு, நம்மிடம் மனம் திறந்து பேசினார். பேட்டியின் முக்கியமான பகுதிகள் :

''சில பேர் வெற்றி பெறும்போது, எப்படி வெற்றி பெற்றார்கள் என்பதை விளக்கமாகப் பேசுவார்கள். ஆனால், தோல்வி அல்லது பிரச்னை என்றால் மூடி மறைக்கவே முயற்சிப்பார்கள். ஆனால், என் குணம் அப்படி இல்லை. நான் ஏமாந்துவிட்டேன் என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதற்கு ஏன் தயங்க வேண்டும்? நான், கல்லூரி நாளிலிருந்து நண்பனாக இருந்த ஒருவரை நம்பினேன். இயக்குநனராக இருந்த நான் தயாரிப்பாளரான போது, தயாரிப்புப் பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்தேன். அவர் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார்.

'முனி' படத்தை முடித்து, வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போதுதான், நண்பரின் தில்லுமுல்லுகள் எனக்குத் தெரிய வந்தன. என்னைச் சுற்றி இருந்தவர்களுக்கு அரசல் புரசலாக விஷயம் தெரிந்திருந்தாலும், நண்பருக்கும் எனக்கும் இடையிலான நெருக்கமான நட்பு காரணமாக, என்னிடம் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். தயாரிப்பாளர் என்ற முறையில், அவ்வப்போது என்ன செலவு ஆகிறது என்று கேட்டுக்கொள்வேனே தவிர, கணக்கு வழக்குகளை நான் பார்த்தது இடையாது. காரணம், இயக்கத்தில் என்னால் முழுமையாக கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதால்தான்.

நான் விழித்துக்கொண்ட பிறகு, நான் தயாரித்த ஆறு, வட்டாரம், முனி ஆகிய மூன்று படங்களின் செலவுக் கணக்குகளைப் பார்த்தேன். அப்போதுதான் நான் எந்த அளவுக்கு ஏமாற்றப்பட்டிருக்கிறேன் என்று தெரிந்து அதிர்ச்சி அடைந்தேன். அதன் பிறகு சென்னை மாநகர காவல்துறை கமிஷனரைச் சந்தித்துப் புகார் கொடுத்தேன். பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீசார் என் புகாரின் பேரில் உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். என் பிரச்னைகளைப் புரிந்துகொண்ட கமல் 'பிரச்னை யாருக்குத்தான் இல்லை? அதனால் மனம் தளர்ந்து போகாதீர்கள்!' என்று சொன்னது மனத்துக்குத் தெம்பாக இருக்கிறது. தவிர, எனக்குச் சில பிரச்னைகள்

கமலின் பதினோராவது



என்று பேப்பரில் பார்த்தவுடன், என் திரையுலக நண்பர்கள் பலர் குறிப்பாக நெப்போலியன், பிரகாஷ்ராஜ் இரண்டு பேரும் அளித்த மனத் தைரியமும், ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கது. என்னுடைய குருநாதர் கே.பி. சார் என்னை அழைத்து, 'உனக்கு பிரச்னை வந்தபோது ஏன் என்னிடம் வரவில்லை?' என்று உரிமையுடன் கேட்டு, இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தது என்னை நெகிழ வைத்துவிட்டது'' என்று நிதான



சரண் பேட்டி

மாகப் பேசுகிறார் சரண்.

'சரி, கமலுடன் சேர்ந்து படம் பண்ணப் போவதாகச் செய்தி வெளியானதே! அது எந்த அளவில் இருக்கிறது?' என்றால், ''கமல் இப்போது தசாவதாரம் படத்தில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார். எனவே, அடுத்த படம் பற்றி இப்போது நான் பேசினால் அது சரியாக இருக்காது. அவரும் நானும் சேர்ந்து படம் பண்ணுகிறோம் என்றவுடன், வசூல் ராஜா இரண்டாம் பாகம் எடுக்கப் போகிறோமா என்று சிலர் கேட்கிறார்கள். நிச்சயம் வசூல் ராஜா இரண்டாம் பாகம் எடுக்கும் எண்ணம் எங்கள் இருவருக்குமே இல்லை. எனவே, இந்த இடைப்பட்ட காலத்தில், வசூல் ராஜா பேச்சும் கொஞ்சம் ஓயட்டுமே என்று நினைக்கிறேன். இடையில், தெலுங்கில் சிரஞ்சீவியின் மைத்துனர் மகன் அல்லு அர்ஜுன் ஹீரோவாக நடிக்க, ஒரு படத்தை நான் இயக்குவதற்குப் பேசிக் கொண்

அவதாரம்!



டிருக்கிறோம். எனக்கு இந்திப் பட உலகம் மீது எப்போதுமே ஒரு ஈர்ப்பு உண்டு. எனவே, இந்திப் படம் இயக்கவும் பூர்வாங்கப் பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது.

கமல் படத்தைப் பொறுத்தவரை, தசாவதாரம் போல மிகப்பெரிய பட்ஜெட்டில், நீண்ட காலம் எடுத்துக்கொண்டு படம் எடுப்பதா? இல்லை, வசூல் ராஜா போல முடிவு செய்த பத்தாம் நாளில் படப்பிடிப்பை ஆரம்பித்து, ஐம்பத்தைந்து நாட்களில் படப்பிடிப்பை முடித்ததுபோல, சீக்கிரமாக எடுத்து முடிப்பதா என்பதை நான் கமலிடமே விட்டுவிட்டேன். எதுவானாலும் எனக்கு ஓ.கே.தான்! ஆனால், அந்தப் படத்தில் கமல் நடிக்கும் ரோல், பதினோராவது அவதாரமாக, வித்தியாசமாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்'' என்கிறார் சரண்.

- கௌதம்ராம்

படம் : ஸ்ரீஹரி



கல்கி



2007 நவம்பர் 18
சர்வஜித் கார்த்திகை 2
மலர் : 66
இதழ் : 16

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.


பாகிஸ்தான் கலவரங்கள் உணர்த்தும் பாடம்!


நவாஸ் ஷரீஃபை நாட்டுக்குள் நுழைய விடாமல் வெளியேற்றியபோதே முஷாரஃபின் நோக்கம் தெளிவாகிவிட்டது. ஏதோ அமெரிக்காவின் தலையீடுக்குக் கட்டுப்படும் பாசாங்கில் பேனசிர் புட்டோவுடன் ஆட்சிப் பகிர்வு ஒப்பந்தம் செய்துகொண்டாரே யொழிய, தேர்தல் நடத்தும் உத்தேசமே அவருக்கு இருக்கவில்லை. உச்சநீதிமன்றத் தீர்ப்பு தமது பதவியைப் பறிக்கக்கூடும் என்கிற சூழலில் விரைந்து செயல்பட்டு, ராணுவ ஆட்சியை நிறுவிவிட்டார் முஷாரஃப்.

''இது பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரம்; இந்தியா தலையிடாது'' என்று உடனே நம் நாட்டு அரசு அவசர அவசரமாக அறிவித்துவிட்டது! பாகிஸ்தான் மக்களின் அரசியல் தலைவிதியை மாற்ற முயற்சி செய்வது இந்திய அரசின் வேலை அல்ல. ஆனால், பாகிஸ்தான் நிகழ்வுகளால் இந்தியாவின் தலைவிதி நிர்ணயமாவதை இந்திய அரசு வெறுமே பார்த்துக் கொண்டிருப்பதும் அபாயகரமானது.

புரட்சியின் விளிம்பில் பாகிஸ்தான் தொற்றிக்கொண்டிருக்க, அதன் எதிரொலியாக இந்தியாவுக்குள் பயங்கரவாதிகளின் ஊடுருவல் தீவிரமடைந்து, இங்கே ஏற்கெனவே நிலவி வருகின்ற பதற்ற நிலை அதிகரிக்கலாம்.

இவற்றை உத்தேசித்து, பாகிஸ்தான் அதிபர் முஷாரஃபின் ஜனநாயக விரோதப் போக்கை இந்தியா பகிரங்கமாகக் கண்டிப்பதில் தவறில்லை. அந்த நாட்டில் ஜனநாயக மரபுகளை நிலைநாட்ட,






உலக அரங்கிலும் இந்தியா குரல் கொடுக்க வேண்டும்.

அது மட்டும் அல்ல; பாகிஸ்தானில் நடப்பனவற்றைக் கவனமுடன் பரிசீலித்து நாம் பாடம் கற்க வேண்டும். இல்லாவிட்டால் இன்று பாகிஸ்தானில் அரங்கேறும் அவலங்கள், எதிர்காலத்தில் நம் நாட்டிலும் நடக்கக்கூடும். இன்று ஜனநாயக மரபுகள் இங்கே துணிந்து, வேண்டுமென்றே குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன அல்லது புறக்கணிக்கப்படு கின்றன. மத்தியிலும் பல மாநிலங்களிலும் கூட்டணி ஆட்சி என்கிற பெயரில் சிறுபான்மை பலமே பெற்றுள்ள கட்சிகள் ஆட்சி செலுத்துகின்றன. உட்கட்சி ஜனநாயகம் தூக்கி யெறியப்பட்டு, வாரிசு அரசியல்தான் வழக்கில் இருக்கிறது. ஜாதி அரசியல் அதோடு கைகோக்கிறது. அரசியல் எதிர்ப்பு என்பது விரோதமாகவே மாறிவிட்டதால் தலைவர்களின் உயிர்களுக்கே ஆபத்து நேர்கிறது. அப்பாவிப் பொது மக்கள் குண்டு வெடிப்புகளில் சிதறி மாய்கிறார்கள். வன்முறை தடித்து, ஆயுதங்களும் குண்டுகளும் உற்பத்தி செய்யும் ரகசியத் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. லஞ்ச ஊழல் கொடிகட்டிப் பறக்கிறது; நீதித்துறை, தேர்தல் கமிஷன் ஆகியவற்றை அரசியல்வாதிகள் அலட்சியம் செய்து, மோதல் உருவாக்கும் போக்கு அதிகரித்து வருகிறது. கலாசார சீரழிவு; உலகமயமாக்கல் என்ற பெயரில் பொருளாதார ஏற்றத்தாழ்வு. ஏழைகளுக்கு எட்டாத உயரத்துக்கு விலைவாசிகள் ஏறி நிற்கின்றன. இந்த அம்சங்கள் எல்லாம் மேலும் தீவிரமடைய அதிக காலமாகிவிடாது. அத்தகைய சூழலில் இந்தியாவிலும் பாகிஸ்தானைப் போல் ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்துவிட்டு ஒரு ராணுவ ஆட்சியோ அல்லது ஃபாஸிஸ ஆட்சியோ தோன்றக்கூடும். இந்த அபாயம் நிஜமானது என்பதைத்தான் பாகிஸ்தான் நிகழ்வுகள் இந்தியாவுக்கு உணர்த்திக்கொண்டிருக்கின்றன.

பாகிஸ்தான் வழியில் இந்தியா செல்லாமலிருக்க வேண்டுமானால், இங்கே, இன்றே, இப்போதே ஜனநாயகத்தைப் பலப்படுத்தியாக வேண்டும். முதல் படியாக, கட்சி அரசியலை நெறிப்படுத்தக்கூடிய தேர்தல் சீர்திருத்தங்களை அமல்படுத்த வேண்டும். இதற்கும் வேறு பல சீர்திருத்தங்களுக்கும் அறிஞர்கள் குரல் கொடுக்கலாம். ஆனால், அரசியல் தலைவர்கள் தான் ஆத்ம பரிசோதனையில் ஈடுபட்டு, செயல்படுத்த முன்வர வேண்டும். இதைச் செய்யவில்லையெனில் எதிர்கால சரித்திரம் அவர்களை மன்னிக்காது. ●



ஸ்பீடு போஸ்ட்

யாழினி பர்வதம் எழுதிய 'காலி பாட்டில்' மின்னல் கதையல்ல... குடித்துக் குடித்துத் தானும் சீரழிந்து, தன் குடும்பத்தையும் சீரழிக்கும் குடிமகன்களின் கண்களைத் திறந்துவிட்ட ஜன்னல் கதை!

- எஸ்.கோபாலன், நங்கநல்லூர்

ஜேம்ஸ்பாண்ட் கதாபாத்திரம் பற்றிய பல சீக்ரெட் மேட்டர்களை விவரித்த சீக்ரெட் ஏஜண்ட் கட்டுரை செம விறு விறுப்பு!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

உள்ளம் வருடும் நீரோட்டம்!

போபால் பயங்கரம் படிக்கப் படிக்க நெஞ்சம் கரைந்தது.

- **எஸ்.கே.வாலி, த.முருங்கப்பட்டி**

கல்பனா - கதிர் - காதல் கதையின் ஒவ்வொரு வரியும் உள்ளத்தை வருடிச் செல்லும் நீரோட்டமாக அமைந்திருந்தது.

- **இராமமூர்த்தி, சிதம்பரம்**

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பது உலக செஸ் சாம்பியன் ஆனந்த் வரையில் மிகச் சரியாக அமைந்துவிட்டது.

- **அனுப்பானடி, இரா.கல்யாணசுந்தரம்**

கலைஞரின் பிள்ளைகளிடையே நடந்த செஸ் ஆட்டத்தில் கே.கே.எஸ்.எஸ்.ஆர் எனும் காய் வீழ்த்தப்பட்டுவிட்டது. அடுத்து எந்தக் காய் என்பது விரைவில் தெரிந்துவிடும்!

- **கே.வெங்கடேஷ், குடந்தை - 1**

எந்த வேலை செய்தாலும் அதை ஆர்வத்துடன், ஈடுபாட்டுடன் செய்வதுதான் எங்கள் குழுவின் வெற்றி ரகசியம் என்று கூறிய காந்தன் பேட்டி, கலக்கலாக இருந்தது!

- **ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோவில்**

கிராமங்களின் வளத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் அரசு கவனம் செலுத்தி, அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன் வர வேண்டும் என்று சொன்ன கல்கி தலையங்கம் சொக்கத் தங்கம்.

- **பி.எல்.பரமசிவம், புனலூர்**

ஒயிட் காலர் ஜாப் எங்கே கிடைக்கும் என்று அலைபாயும் இளைஞர்கள் மத்தியில் பாபு ஓர் அதிசயப் பிறவி.

- **உமா மோகன்தாஸ், திண்டுக்கல்**

பாகிஸ்தான் நிகழ்வுகளுக்கு ரிங் மாஸ்டராய் அமெரிக்க அதிபரை சித்திரித்திருந்த கார்ட்டூன் கருத்தைக் கவர்ந்தது.

- **சி.மகேஷ், திருச்சி**

வட்டமேஜை

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்

மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு.
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில்(தற்போது ராஜ் தியேட்டர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை,
சென்னை – 600 015. ஃபோன் : 2435 1190, 2433 2047.
செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

தங்க ரூபம்
தெய்வ கடாட்சம்



Thejus

24 ct GOLD PLATED GIFTS

Show room:

Next to jeeva park old # 55 G.N.Chetty Road, T.Nagar, Chennai - 17, Mobile: 98400 21384,
Timing: 9.30 am to 7.00 pm SUNDAY HOLIDAY for online purchase visit:
www.chennaionline.com www.indiavarta.com, www.sifymall.com

We Accept Credit Cards

தூறல் கவிதைக











பள்ளிக்கூட நாட்களில்
பிடித்துக் கொண்டது
மழைக்கும்
எனக்குமான ஸ்நேகம்


மழை
நனைக்காமல் போன
நாட்களிலும்
நனைந்துதான் போயிருக்கிறேன்
பெரியப்பாவின் தோட்டத்துக்
கிணற்றில் குதித்து

குட்டைபோலத் தேங்கி
அழையா விருந்தாளியாய்
வீட்டுக்குள் புகுந்து
நாறச் செய்துவிடும்
வெள்ளத்தால்
எனக்கும் மழைக்குமான
ஸ்நேகம்
அறுந்துபோனது
சென்னை வந்த பிறகு

—பா.விஜியராமன்









ஓர் அழகான மழையில்
நனைந்தபடி
உன் வீட்டு வாசலில்
குடை பிடித்து நிற்கிறேன்
நீ வரைந்த கோலத்துக்கு!

சி.கணேஷ்ராஜா



இயற்கையின்
கொலுசு
சிதறிக் கிடக்கிறது
புல்வெளியில்
பனித்துளியாய்

—வீ.வீசிச்சாரல்



விடியவே
கூடாது
பள்ளிக்
குழந்தையின்
பிரார்த்தனை
ஞாயிறு இரவு!

—எஸ்.மலர்



வேலைக்காகவே
படிக்கிறார்கள்
படிப்பதையே
வேலையாக்கிக் கொண்டு!

—வீ.விஷ்ணுகுமார்

கல்லெறிந்து
வேடிக்கை பார்க்கிறது
அமைதியாய் இருந்தால்
குளத்தின் மீதும்
ஆர்ப்பரித்து எழுந்தால்
கற்பின் மீதும்
ஆதிக்கச் சமூகம்

—ஆங்கரை பைரவி



யாரேனும் பறித்துக்
கொள்வர் என்கிற பயமா?
வேகமாகத் தழை தின்னும்
கசாப்புக் கடை ஆடுகள்!

—புவனா நித்திஷ்

70 முதல்...


பெயர் சூட்டும் படலம்!

சங்கீத வித்வான் விஜய் சிவாவின் மனைவி ஷ்யாமளா, குழந்தை கல்யாணியுடன் வந்திருந்தார். கல்யாணிக்கு விளையாடுவதற்கு மோட்டார் கார் பொம்மைகள் கொடுத்தோம். என்னுடைய பேரன் பெங்களூரு செல்லும்போது மறந்து போய் விட்டு விட்டுப் போன பொம்மைக்கார்கள். கல்யாணி என்னுடைய ஆடும் நாற்காலியில் உட்கார்ந்து ஆனந்தமாக முன்னும்பின்னும் அசைந்து ஆடினாள்.

கல்யாணியைப் பார்த்ததுமே அவளுடைய ஆண்டு நிறைவுக்கு விஜய் சிவா அனுப்பியிருந்த அழைப்பிதழ் நினைவுக்கு வந்தது. அதில், முதல் பக்கத்தில் கல்யாணி ராகத்தில் அமைந்த பல பாடல்களின் முதல் வரிகள் எழுதப் பெற்றிருந்தன. குழந்தையின் ஒரு சித்திரமும் காணப்பட்டது. பிரித்தால், அடுத்த இரு பக்கங்களில் அழைப்பிதழ் அச்சாகி இருந்தது.

'கல்யாணி ராகம் விஜய் சிவாவுக்கு மிகவும் பிடித்தமான ஒரு ராகமாக இருக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டேன். இப்படித்தான் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்போது நமது விருப்பங்கள், ஆசைகளுக்கு ஏற்ப பெயர் அமையும். என்னுடைய பெயரையே எடுத்துக் கொள்ளுங்கள். 'பொன்னியின் செல்வன்' எழுதிய 'கல்கி', எனக்கு 'ராஜேந்திரன்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பு ஏதுமில்லை என்றுதான் பலருக்கும் தோன்றும். சரித்திரக் கதைகள் மூலம் நமது முன்னோர்களின் வீரம், கலை ஆர்வம், தமிழ்ப்பற்று, பண்பாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை தமிழ் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் அமரர் கல்கிக்கு நான் பிறந்தபோதே (1935) இருந்திருக்கலாம்தானே!

ஆனால், உண்மை அதுவல்ல. 'கல்கி', மாபெரும் எழுத்தாளர், பத்திரிகையாளர் என்பதோடு காந்தி பக்தர்; காங்கிரஸ் தொண்டர்; மூன்று தடவை சிறை புகுந்த தேசபக்த தியாகி; காந்தியின் சுயசரிதத்தைத் தமிழில் மொழி பெயர்த்ததுடன் சத்திய சோதனையில் தாமும் ஈடுபட்டு, வெற்றி கண்டவர்; நான் பிறந்த சமயம் பாபு ராஜேந்திர பிரசாத், காங்கிரஸ் அக்கிராசனர் (அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர்) என்ற தகுதியோடு தமிழகத்துக்கு விஜயம் செய்திருந்தார். அவரை தரிசித்து விட்டு வந்த கையோடு காங்கிரஸ் தொண்டர் 'கல்கி' எனக்கு ராஜேந்திரன் என்று பெயர் சூட்டிவிட்டார்!



'இதில் 'கல்கி'க்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டதோ அவ்வளவுக்கு ராஜாஜிக்கு மனத்தாங்கல் உருவாகிவிட்டது! எங்கள்



* ராஜாஜியுடன் கல்கி, சதாசிவம் குடும்பத்துக் குழந்தைகள் - இடமிருந்து வலமாக - ராதா, விஜயா, ஆனந்தி

குடும்பத்தில் பலருக்கும் ராஜாஜிதான் பெயர் சூட்டியிருக்கிறார். எனது சகோதரிக்கு 'ஆனந்தி' என்ற காரணப் பெயர் சூட்டியவர் அவர்தான். ஆனந்தி பிறப்பதற்குச் சில காலம் முன்பாக, எங்களுக்கு ஓர் அண்ணன் பிறந்து சில நாட்களுக்குள்ளேயே இறந்து போனான். அந்தத் துயரை மாற்ற உதித்தவள் என்ற முறையில் ராஜாஜி அவளுக்கு ஆனந்தி என்று பெயர் வைத்தார். ஆனந்தியின் மகன் கௌரிக்கு ஒரு தந்தி மூலம் நாமகரணம் செய்தார். அப்போது அவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரல். ''ஆனந்திக்கும் கௌரிக்கும் ஆசீர்வாதம்'' என்று தந்தி அனுப்பினார். எனக்கு மகன் பிறந்தபோது வீட்டுக்கு வந்திருந்த ராஜாஜி, என் மனைவி விஜயாவிடம், ''குழந்தைக்கு கிருஷ்ண மூர்த்தி என்று பெயர் வைத்தால் உன் மாமியார் எப்படிக் கூப்பிடுவார்? ஹரிகிருஷ்ணன் என்று பெயர் சூட்டுங்கள். தாத்தா கிருஷ்ணமூர்த்தி (கல்கி) பெயரும் இருக்கும்; ''ஹரி'' என்று அழைக்கலாம்'' என்று யோசனை கூறினார்.

தம்மைக் கலந்தாலோசியாமல் எனக்கு என் தந்தை நாமகரணம் செய்ததில் ராஜாஜிக்கு வருத்தம் ஏற்பட்டது. ''என்ன, கிருஷ்ணமூர்த்தி! குழந்தைக்கு ராஜன் பாபு பெயரை வைச்சுட்டே! ஆனா பார்த்துண்டே இரு; என் பெயர்தான் அவனுக்கு நிலைக்கும்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

இந்த விஷயம் எனக்கு எனது உபநயனத்தின்போது தெரியவந்தது. பிரும்மோபதேசத்துக்கு முன்னால், ரங்கநாத சாஸ்திரிகளையும் மற்ற அந்தணர்களையும் கையமர்த்தி மௌனம் காக்கச் செய்துவிட்டு, மேற்படி சம்பவத்தை எனக்குக் கூறினார் அப்பா. தொடர்ந்து, ''அதனால் இப்ப உனக்கு 'ராஜகோபாலன்' என்று ஸி.ஆர். அண்ணாவின் பெயரை சர்மாவாக சூட்டுகிறேன்'' என்றார். பிராமணர்களுக்கு உபநயனத்தின்போது பெறுகின்ற சர்மன்தான் இயற்பெயரைக் காட்டிலும் முக்கியமானது, புனிதமானது.

எங்களுடன் பேசும்போது ராஜாஜியை

கல்கி ராஜேந்திரன்

...7 வரை 2

''ஸி.ஆர்.அண்ணா'' என்றுதான் அப்பா குறிப்பிடுவார். எங்களுக்கும் அதுவே பழகிப்போய் ''ஸி.ஆர்.அண்ணா'' என்றே கூறி வந்தோம். ராஜாஜிக்கு கல்கியிடம் இருந்த பிரியம் அலாதியானது. அது தலைவர் - தொண்டன் என்ற நிலையைக் கடந்து, குரு - சீடன் என்ற உறவையும் தாண்டி, சகோதர பாசத்தில் நிறைவு கண்டிருந்தது.

இதையெல்லாம் நன்றாக உணர்ந்திருந்த நான், ஒரு சமயம் பெரிய ஏமாற்றத்துக்கும் உள்ளானேன். 'இன்டர்மீடியட்' தேர்ச்சி பெற்ற பிறகு (இப்போதெல்லாம் பிளஸ் டூ) மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து டாக்டர் ஆக வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு நிறைய இருந்தது. ஆனால் மதிப்பெண்கள் அதற்கு இசைவாக இல்லை. அச்சமயம் ராஜாஜிதான் சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சர்.

''ஸி.ஆர்.அண்ணா ஒரு வார்த்தை சொன்னால் போதுமே; உடனே காரியம் முடிந்துவிடுமே'' என்றேன் அப்பாவிடம்.

* ராஜாஜியின் பெயர்தான் நிலைத்தது - உபநயனம்



அப்பா பெரிதாகச் சிரித்துவிட்டார். ''ஏண்டா! இத்தனை நாளாக ஸி.ஆர். அண்ணாவுடன் பழகி இன்னமும் அவரை நீ புரிந்துகொள்ளவில்லையே!'' என்று கூறி மறுபடியும் சிரித்தார். என் அறியாமையைக் கண்டு எழுந்த சிரிப்பு!

கடின இதயம் படைத்தவர் என்பதாக ராஜாஜி பற்றிய ஒரு விமர்சனம் உண்டு. அவரைப் புரிந்துகொள்ளாதவர்கள் அப்படிச் சொல்வார்கள். அவர் மனம் அன்பு மயமானது. அந்த அன்புதான், எனக்கு 'ராஜகோபாலன் என்ற பெயர்தான் நிலைக்கும்' என்று என் தகப்பனாரிடம் கூற வைத்தது. என் பொருட்டு ஒரு சிறிய தவறு செய்யாதிருக்கவும் அதே அன்பு அவருக்குத் துணை நிற்கும் என்பதை ''கல்கி'' புரிந்துகொண்டிருந்தார். அதனால்தான் அந்தப் பரிகாசச் சிரிப்பு! கல்கி - ராஜாஜி நட்புறவில் இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்.

யோசித்துப் பார்த்தால், திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ராஜாஜி, மதுவிலக்கு பிரசாரத்தில் ஈடுபட்டதும்; காங்கிரஸ் ஆட்சியில் சென்னை மாகாணத்தில் மதுவிலக்கை அவர் அமல்படுத்தியதும் தமிழ் மக்களிடம் அவருக்கு இருந்த அன்பு காரணமாகத்தானே!

அப்புறம் மதுவிலக்கு ரத்து செய்யப்பட இருந்த போது தாம் முன்னாள் கவர்னர் ஜெனரல் என்பதை மறந்தும் கொட்டும் மழையைப் பொருட்படுத்தாமலும் அன்றைய முதல்வர் கருணாநிதியை அவர் வீடு தேடிச் சென்று, ''வேண்டாம் இந்தச் செயல்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாரே, அதுவும் அன்பு காரணமாகத்தான். தாம் மரணப்படுக்கையில் இருந்தபோது, கருணாநிதியின் கரங்களைப் பற்றிக் கொண்டு ''நம்மிடையே கருத்துவேற்றுமைகள் இருந்தாலும் நட்பு மாறாது'' என்று கூறினாரே, அதுவும் அன்பின் உன்னத வடிவம்தான். அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ்!

(பேசுவோம்)

அருள்வாக்கு

ரயிலடியில் பிரயாணிகள் வந்திறங்கியதும் ஜட்காக்காரன், ரிக்ஷாக்காரன், டாக்ஸிக்காரன் என்று பல பேர் வந்து சூழ்ந்துகொள்கிறார்கள். யாருடைய வண்டியில் ஏறிக்கொண்டாலும் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேரலாம். வண்டிக்காரர்கள் கிராக்கி பிடிப்பதற்காகப் போட்டி போடுவதைத் தவறு என்று சொல்வதற்கில்லை. அது அவர்கள் பிழைப்பு. ஆனால், கடவுள் என்கிற ஒரே லட்சியத்துக்கு அழைத்துச் செல்வதற்காக, வெவ்வேறு மதத்தவர்கள் போட்டி போட்டுக்கொண்டு மதமாற்றத்தில் முனைவது அர்த்தமற்ற காரியம்.


நதியின் மேல் பாலம் போட்டிருக்கிறது. அதில் பல வளைவுகள் இருக்கின்றன. எல்லா வளைவுகளும் ஒரே அளவாகக் கட்டப்பட்டவைதாம். ஆனால், ஒவ்வொரு வளைவுக்கும் கிட்டத்தில் இருப்பவனுக்கு அந்தந்த வளைவே பெரிதாகவும், மற்றவை சின்னதாகவும் தெரியும். இப்படியே அந்தந்த மதத்தவர்களுக்கும் தங்கள் மதமே பெரிதாகத் தெரிவதால், பிறரை அதற்கு அழைக்கிறார்கள். ஆனால், எல்லா வளைவுகளும் ஒரே அளவுதான். யாரும் தாங்கள் பிறந்த மதத்தைவிட்டு விலக வேண்டியதில்லை.

மதங்களுக்கிடையே கோட்பாடுகளிலும் அனுஷ்டானங்களிலும் சில வித்தியாசங்கள் இருப்பதில் தவறில்லை. எல்லா மதங்களையும் ஒன்றுபோல் ஆக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரே மாதிரி ஆக்காமலே, எல்லா மதத்தவர்களும் மனத்தில் ஒற்றுமையோடு இருப்பதுதான் அவசியம். 'யூனிஃபார்மிடி' அவசியமில்லை. 'யூனிடி' இருப்பதே அவசியம்.

– ஜகத்குரு காஞ்சி
காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி
சங்கராச்சார்ய
சுவாமிகள்



லீவ் கேளும் அமைச்சரே!



"உங்க கனவுல கடவுள் வந்தாருன்றீங்களே, என்ன சொன்னார்?"

"பக்தா, உன் பெண்டாட்டி சமையலைச் சாப்பிடறது உனக்குத் தான் விதி, எனக்கு அதைப் படையல் போட்டு ஏன் என்னையும் படுத்தறேன்னார்!

– வெ.சீதாராமன்



"என்ன மன்னா... தங்களின் மணி மகுடம் சிறியதாக உள்ளது?"

"ஹி... ஹி... இது 'மினி' மகுடம் அமைச்சரே..."

– கே.ஆனந்தன்



"அரசே, பக்கத்து நாட்டு மன்னன் போருக்குத் தயாரா என்று ஓலை அனுப்பியுள்ளார்."

"பாட்டி இறந்துவிட்டார் என ஒரு வாரம் அவகாசம் கேளும் அமைச்சரே!"

– ஆர்.ரத்தினசாமி



"தலை தீபாவளிக்குப் போனியே உன் மாமனார் உனக்கு என்ன கொடுத்தாரு?"

"பலகாரங்கள் எப்படிச் செய்யறதுன்னு ட்ரைனிங் கொடுத்தாரு..."

– பா.கணேசராஜா

"நான் பாடி
முடித்த பின்
பாடலுக்கு என்னிடம்
பொருள் கேட்கக்
கூடாது மன்னா..."

"தாங்களும்தான்
புலவரே..."

- கே.ஆனந்தன்





"இப்படிப் பிச்சை
எடுத்துச்
சாப்பிடறியே...
வெட்கமா இல்லை!
கஷ்டப்பட்டுச்
சாப்பிடு..."

"தினமும் உங்க
வீட்டுச் சாப்பாட்டைக்
கஷ்டப்பட்டுத்தான்
சாப்பிடறேன் தாயே!"

- ஹெச்.அஜிரா

"என்ன வெடி
இது... வெடிக்கவே
மாட்டேங்குது?"

"தீபாவளிதான்
முடிஞ்சிடுச்சே;
வெடி ஏது? முதல்ல
கண்ணாடியப்
போடுங்க.. அது
மெழுகுவர்த்தி."

- தேனி முருகேசன்





"உலகம் தொடங்கின
இடத்தில்தான்
முடியும்ங்கிறது
சரியாத்தான்
இருக்குது!"

"எப்படி?"

"இந்த
ஆஸ்பத்திரியிலேயே
பிறந்த எனக்கு, இதே
ஆஸ்பத்திரியிலேயே ஆபரேஷனும் பண்ணப்
போறாங்கன்னா பாரேன்!"

- வைகை. ஆறுமுகம்

பிடிச்சிருக்கா?

திடீரென்று விழிப்பு வந்துவிட்டது. பயங்கர கனவு. சரியாகப் புரிபடவில்லை. வெறும் கனவுதான் என்பதை உணர்ந்த பிறகும் ஆசுவாசம் ஏற்படவில்லை. வியர்வைக் குளியலும் இதயப் படபடப்பும் மேலும் சில நிமிடங்களுக்குத் தொடர்ந்தன. இருபத்தைந்து வயது இளைஞன் ஒரு கனவுக்காக இவ்வளவு அச்சப்படுவதா என்று சிலர் ஏளனமாக நினைக்கக் கூடும். ஆனால், நான் கண்டது கனவு மட்டுமல்ல. கனவில் வந்த மலை, உருவகம்தான். நிஜ வாழ்வில் நான் சந்தித்துக் கொண்டிருக்கும் பல துன்பங்கள்தான் கனவில் மலையாய்த் தோன்றி என்னை அழுத்திக்கொண்டிருக்க வேண்டும். மீளவே முடியாதோ என்ற பயம் ஏற்பட்டது.

இந்த நினைப்புக்குத் தொடர்பே இல்லாமல், ஒரு மாற்றாக, நர்மதாவின் நினைவு வந்தது. அழகிய ஓவியங்களைப் படைக்கும் ஓர் அழகிய ஓவியம்!

தினமும் அலுவலகத்திலிருந்து வரும்போது அந்தக் கலைக்கூடம் கண்களில் படும். சில மாதங்களுக்கு முன் அதைத் தாண்டிய ஒரு நாளில், அவள் அங்கு ஓவியம் வரைவதைப் பார்த்தேன். திட்டமிடாமலேயே அந்த கலைக் கூடத்துக்குள் என் பாதங்கள் நுழைந்துவிட்டன.

மிகப் பிரம்மாண்டமான ஓர் அருவி, ஓவியத் துணியில் உருவாகிக் கொண்டிருந்தது. அதிலிருந்து தெரித்துச் சிதறும் நீர்த்திவலைகள் நீர் விழும் வேகத்தை அற்புதமாக உணர்த்திக் கொண்டிருந்தன.

அதற்குப் பிறகு தினமும் அந்தக் கலைக் கூடத்துக்குச் செல்லத் தொடங்கினேன். அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் அது இருந்தது ஒரு காரணம். ஆனால், அதைவிட வலிமையான காரணம் அவள்தான். அவளும், அவளது ஓவியமும் எப்போதுமே ரசனைக்கு உகந்ததாக இருந்தன. பஞ்ச பூதங்களின் பலவித வடிவங்களை அவளால் சரியான விகிதத்தில் தூரிகையால் வடிக்க முடிந்தது.

சமீப காலமாக என்னைப் பார்க்கும் போது மிக லேசாகப் புன்னகைக்கத் தொடங்கியிருந்தாள். ரசனைக்கான அங்கீகாரமாக இருக்கக்கூடும்.

"உங்க பெயர் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?" ஒரு வாரம் கழித்துத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். தான் வரைந்து முடித்திருந்த சூரிய உதயக் காட்சியை மீண்டும் ஒருமுறை உற்று நோக்கினாள்.

பின் "நர்மதா" என்றாள் மெல்ல. நானும் என் பெயரைச் சொன்னேன்.

மேலும் சில நாட்கள் நகர்ந்தன. "என் ஓவியங்கள் உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" என்று அவளே ஒரு நாள் கேட்டாள். வேகமாகவே ஆமோதிப்பைத் தலையாட்டலில் வெளிப்படுத்தினேன்.

அவள் பேச்சைத் தொடர்ந்தாள். "இயற்கைக் காட்சிகள் உங்களுக்கு நிறையப் பிடிக்குமோ? இயற்கை ஆராதிக்க வேண்டிய ஒன்று. கடவுள் மனிதனுக்குப் போட்ட கருணைப் பிச்சைதான் இயற்கை சக்திகள். என்ன, சில சமயம் அவை கொஞ்சம் கருணையோடு இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. மற்றபடி இயற்கையின் நியதிகள் பெரும் அற்புதங்கள். அவற்றை வரையறுக்க நாம் யார்?"

சட்டென்று "நீங்கள் வரைவதைவிட வரையாததுதான் எனக்குப் பிடித்திருக்கிறது

விழிப்புணர்வுக் கதை-2



நர்மதா'' என்றேன். பின் அவளது குழப்பத்தை ரசித்தபடி, ''உங்களது எந்த ஓவியத்திலும் ஒரு மனித உருவம்கூட இல்லையே, அதைச் சொன்னேன்'' என்றேன்.

இந்தப் பதில் அவள் எதிர்பாராதது. தன் புருவங்களை உயர்த்தினாள். 'ஏன் இப்படிச் சொல்கிறாய்?' என்ற கேள்வி அதில் தெளிவாகவே தெரிந்தது.

இதற்காகவே காத்திருந்ததுபோல் எனது வலிமிகுந்த கடந்த காலத்தை அவளிடம் கூறத் தொடங்கினேன்.

தமிழ் ஆசிரியர் இன்பசேகரனை

அருண்சரண்யா

அகதியின் காதல்!

'**க**ற்றது தமிழ்' மூலம் பரவலான பாராட்டுக்களைப் பெற்றிருக்கும் ஜீவா, 'ராமேஸ்வரம்' மூலம் தனது அடுத்த அத்தியாயத்தை ஆரம்பித்துவிட்டார்.

''இலங்கை அகதிகள் பத்தின கதை. ரொம்ப உணர்வு பூர்வமா வந்திருக்கு படம். சமீபத்துல வெளியான பாடல்கள் நல்லா கவனிக்கப்பட்டிருக்கிறதுல சந்தோஷம். படத்துக்குப் படம் வித்தியாசமா நடிக்கிறேன்னு சொல்றாங்க. என்னை நோக்கி நீட்டப்படுற கேரக்டர்கள்ல என்னை வசீகரிக்கிற விஷயங்களைப் பண்றேன், இனியும் பண்ணுவேன். ராமேஸ்வரத்திலும் தகுதியான ஒரு மனுஷனை பார்ப்பீங்க'' என்று சொல்லும் ஜீவாவுக்கு விரைவில் திருமணம். அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!

- ஜி



நம்பினேன். ஆனால், அவர் வகுப்பில் பாரபட்சம் காட்டி என்னைத் தொடர்ந்து மட்டம் தட்டினார். பக்கத்து வீட்டு ஜோதி அக்காவிடம் நிறைய பாசம் வைத்திருந்தேன். தனக்குத் திருமணமானதும் என்னை முழுவதுமாகத் தவிர்க்கத் தொடங்கினாள். அப்பாவை நம்பினேன். ஆனால், பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் வாங்காததற்குத் தேர்வின்போது உடல்நலம் கெட்டதுதான் காரணம் என்பதை அறிந்திருந்தும், அடித்தும் வார்த்தைகளாலும் என்னைத் துன்புறுத்தினார். தான் எனக்கு எவ்வளவு தேவை என்பதை உணர்ந்திருந்தும் மாரடைப்பில் இறந்தாள் அம்மா.

பசப்பு வார்த்தைகள் மூலம் பெற்றோரின் முழுச் சொத்தையும் தானே அபகரித்துக்கொண்டான் அண்ணன். கல்லூரி விடுதியில் எனது அனைத்துப் பொருள்களையும் பயன்படுத்திக்கொள்ள அனுமதி கொடுத்திருந்தும், அந்த உணர்வுக்கு மதிப்பளிக்காமல் அறையிலிருந்த எனது கைக் கடிகாரம், செல்ஃபோன் உட்பட பலவற்றைத் திருடிக்கொண்டு மறைந்தான் நண்பன். தானாகவே வந்து காதலிப்பதாகக் கூறி, பின் அதிக செல்வமும் அமெரிக்க வாசமும் கொண்ட ஒருவன் அணுகியதும் அவனைத் திருமணம் செய்து கொண்டாள் பச்சோந்தி வைதேகி.

இத்தனை குற்றவாளிகளையும் பட்டியலிட்டு, இவர்களையெல்லாம் நம்பிய நான்தான் குற்றவாளி என்ற கசப்பான முடிவுக்கு வந்திருந்ததை நர்மதாவிடம் கூறினேன்.

''இப்போது சொல்லுங்கள் நர்மதா, நான் மனிதர்களை வெறுப்பதில் என்ன தப்பு?''

''நானும் மனித குலம்தான்'' என்றாள் அவள் புன்னகையுடன்.

''மனிதர்களை வெறுக்கும் மனிதர்களை எனக்குப் பிடிக்கும்.''

அவள் முகத்தில் வேதனை படர்ந்தது. உட்கார்ந்துகொண்டாள். என்னையும் உட்காரச் சொன்னாள்.

''உங்கள் வலியை நீங்கள்தான் உணர முடியும் என்பது புரிகிறது. ஆனால், இதற்காக மனித குலத்தையே வெறுப்பது சரியென்று எனக்குத் தோன்றவில்லை. நன்றாக யோசித்துப் பாருங்கள். யாரும் எதையும் அளித்துவிடாமலே உங்களால் வளர்ந்திருக்க முடியுமா? யாருடைய உதவியும் இல்லாமல் நீங்கள் படித்திருக்க முடியுமா? யாருடைய அங்கீகாரத்தையும் பெற்றுவிடாமல் உங்களால் ஒரு வேலையில் சேர்ந்திருக்க முடியுமா? மனிதர்கள் ஒருவர் மீது தொடர்ந்து நம்பிக்கை கொண்டுதான் ஆகவேண்டும். குறைந்த பட்சம் அவநம்பிக்கை கொள்ளாமலாவது

நர்மதாவிடமிருந்து இந்த உபதேசத்தை நான் எதிர்பார்க்கவில்லை. அவளைப் பற்றிய பிம்பம் சிதைந்துபோனது!



இருக்க வேண்டும்.''

நர்மதாவிடமிருந்து இந்த உபதேசத்தை நான் எதிர்பார்க்கவில்லை. அவளைப் பற்றிய பிம்பம் சிதைந்துபோனது.

அடுத்த நாள் மாலை அலுவலகத்திலிருந்து கிளம்ப வெகு தாமதமாகிவிட்டது. கலைக்கூடத்தைத் தாண்டியபோது காவலாளியைத் தவிர, அங்கு வேறு யாரும் இல்லை என்பது புரிந்தது.

''தம்பி, உன்கிட்டே கொஞ்சம் பேசணும்'' என்று அவர் கூறியது வியப்பாக இருந்தது. வயதானவர். நானும் அவளும் தினமும் பேசுவதை அவர் கவனித்திருக்கக்கூடும். அவள் தொடர்பாகத்தான் எதையோ கூறப்போகிறார் என்பது புரிந்தது.

''ஒரு டீ குடிச்சிக்கிட்டே பேசலாமா?'' என்றார். அருகிலிருந்த தேநீர்க் கடையை நோக்கி நகர்ந்தோம்.

மறுநாள் தெருவில் நானும் நர்மதாவும் சந்திக்க நேர்ந்தது.

''கோபம் மறைஞ்சிடுச்சா? அட்லீஸ்ட் குறைஞ்சிடுச்சா?'' என்றபடி புன்னகைத்தாள்.

''அது இருக்கட்டும். இன்றைக்கு என்ன வரைஞ்சீங்க?'' என்று கேட்டேன்.

''உங்களுக்குப் பிடிக்காது'' என்றாள் ரத்தினச் சுருக்கமாக.

''ஏன்?''

''அதிலே நிறைய மனிதர்கள் இருப்பாங்க.''

குறுகுறுப்பு ஏற்பட்டது.

''பார்க்கலாமா?'' சம்மதித்தாள்.

இருவருமாக கலைக்கூடத்தை நோக்கி நகர்ந்தோம்.

''இதுதான்.''

கண்ணன் தன் சுண்டு விரலால் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்திருக்க, கடும் மழையிலிருந்து தப்பும் வகையில் ஆநிரைகளும் ஆயர்களும் அதற்குக் கீழே காணப்பட்டனர். அனைவரின் முகங்களிலும் பாதுகாப்பு பெற்ற தெம்பு.

''என்ன, ஆச்சரியமா? இயற்கையை நான் மிக விரும்புவதால், மனிதர்களை நான் வெறுப்பதாக அர்த்தம் இல்லை.''

இயற்கையை இவள் விரும்புகிறாள்! எப்படிச் சாத்தியமானது?

அரண்மனை போன்ற பரம்பரை வீட்டினை குஜராத் பூகம்பத்தில் இழந்த குடும்பம் அவளுடையது. பின் சென்னைக்குக் குடிபெயர்ந்த சில வருடங்களில் சுனாமியில் அப்பாவையும் அண்ணனையும் பறிகொடுத்திருக்கிறாள். மன ஆறுதலுக்காக கைலாஷ் சென்றிருந்த அவள் அம்மாவைச் சென்ற வருடம்தான் பனிப்பாறை விழுந்து மூடிவிட்டிருக்கிறது.

ஆனால், தன் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட நிலத்தையும், கடலையும், மலையையும்கூட அவள் அழகாகத் தன் தூரிகையில் கொண்டு வருகிறாள். இயற்கையை இன்னமும் மதிக்கிறாள்.

அந்த ஓவிய மலையையே உற்றுப் பார்த்தேன். கனவிலும் நனவிலும் என்னை அழுத்தி வந்த மலையாக அது தோன்றியது. அதை என்னாலும் எளிதில் தூக்கி நிறுத்த முடியும். பிறருக்குத் தெம்பளிக்க முடியும் என்ற தீர்மானம் எழுந்தது. புதிய நம்பிக்கை தந்த தெம்பில் என் கை தன்னிச்சையாக நர்மதாவின் புறம் நீண்டது. அவளது கரமும்தான். ●

அமெரிக்க டாலருக்கு எதிரான மதிப்பு குறைந்து போனதாலேயே பில் கேட்ஸ் கொஞ்சம் பின்தங்கி, முகேஷ் உச்சாணிக்கொம்பில் உட்கார்ந்துவிட்டார்!



முகேஷ் அம்பானி The

உலகின் மிகப்பெரிய பணக்காரராக அறிவிக்கப்பட்டிருக்கிறார் முகேஷ் அம்பானி! ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவரான முகேஷின் சொத்து மதிப்பு 'கிடுகிடு'வென உயர்ந் ததை அடுத்து, இதுநாள்வரை கோலோச்சிக் கொண்டிருந்த அமெரிக்க மென்பொருள் ஜாம்பவான் பில் கேட்ஸைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தைப் பிடித்திருக் கிறார் முகேஷ்.

ஃபோர்ப்ஸ் பத்திரிகை சமீபத்தில் வெளியிட்ட உலகப் பணக்காரர்கள் பட்டி யலில் பதினான்காவது இடத்தில் இருந்த முகேஷ், திடீரென முதலிடத்தைப் பிடித் தது எப்படிச் சாத்தியமானது? எல்லாம் பங்குச்சந்தை செய்த மாயம்தான்!

மும்பை பங்குச் சந்தையில் முகேஷ் அம்பானிக்குச் சொந்தமான ரிலையன்ஸ் நிறுவனங்களின் பங்குகள் சமீபகாலமாக உயர்ந்துகொண்டே வந்தன. குறிப்பாக, இடதுசாரிகளால் மத்திய அரசுக்கு ஆபத்து எதுவும் தற்போதைக்கு இல்லை என்று தெரிந்ததும், எல்லா நிறுவனத்தின் பங்கு களும் கணிசமான அளவில் உயர ஆரம்பித் தன. பங்குகளின் மதிப்பு உயர்ந்தால் சொத்து மதிப்பும் எகிறத்தானே செய்யும். அதுதான் முகேஷ் விஷயத்திலும் நடந்தது.

கூட்டிக் கழித்துக் கணக்குப் போட்டுப் பார்த்ததில் பில் கேட்ஸின் சொத்து மதிப்பை விட, முகேஷின் சொத்து மதிப்பு அதிகம் எனத் தெரிய வந்துள்ளது.

முகேஷ் அம்பானி 63.2 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்துக்களுடன் முதலி டத்தில் இருக்கிறார். மெக்ஸிகோ தொழி லதிபரான கார்லோஸ் ஸ்லிம் ஹெலு, 62.2993 பில்லியன் அமெரிக்க டாலர் சொத் துக்களுடன் இரண்டாம் இடத்தில் இருக் கிறார். மைக்ரோசாஃப்ட் தலைவர் பில் கேட்ஸ், 62.29 பில்லியன் டாலருடன் அடுத்த இடத்திலும், பிரபல பங்கு முதலீட் டாளர் வாரன் பஃபட், 55.9 பில்லியன் டாலருடன் நான்காவது இடத்திலும், இரும்புச் சக்ரவர்த்தி லக்ஷ்மி மிட்டல், 50.9 பில்லியன் டாலருடன் ஐந்தாம் இடத் திலும் இருக்கின்றனர்.

திருபாய் அம்பானியின் மகன்களுள் ஒருவரான முகேஷ், வேதிப் பொறியியல் பட்டதாரி. பட்டப்படிப்பு முடித்ததும் அமெரிக்காவில் இருக்கும் ஸ்டான் ஃபோர்டு பிசினஸ் ஸ்கூலில் எம்.பி.ஏ. படிப்பதற்காகச் சென்றார். முழுதாக ஒரு வருடம்கூட ஆகியிருக்கவில்லை. தந்தைக்கு உடல்நிலை மோசமாகிவிட்டது. அவருக்கு உதவியாக, தொழிலைக் கவனிக்க வேண்டும் என்று அழைப்பு வரவே, படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விட்டார் முகேஷ்.

1981-ல் முறைப்படி ரிலையன்ஸ் நிறுவனத்தில் இணைந்து செயல்படத் தொடங்கினார். ரிலையன்ஸ் இன்ஃபோ காம் என்ற பெயரில் மிகப்பெரிய தொலை தொடர்பு நிறுவனத்தைத் தொடங்கினார். திருபாய் அம்பானியின் மறைவுக்குப் பிறகு பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டன. காரணம், அவர் உயில் எழுதி வைக்காமல் இறந்து போனதுதான். ஆனாலும் சிலபல பஞ்சாயத்துகளுக்குப் பிறகு சொத்து விஷயங்கள் முடிவுக்கு வந்தன.

அதன்படி ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், ரிலையன்ஸ் பெட்ரோலியம், ஐபிசிஎல், ரிலைன்ஸ் இண்டஸ்ட்ரியல் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஆகியன முகேஷுக்குச் சொந்தமான நிறுவனங்கள். இதேபோல முகேஷின் சகோதரர் அனில் அம்பானிக்கும் சொத்துகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. தற்போது இருவரும் ஆளுக்கொரு பக்கமாகத் தொழில் செய்து, அவரவர் சொத்து மதிப்பை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய கணக்கெடுப்பின் படி, ஒவ்வொரு நொடிக்கும் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார் முகேஷ். அதன்படி நாள் ஒன்றுக்கு எட்டு லட்சத்து அறுபத்தி நான்காயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்.

பங்கு மதிப்பு இன்னும் அதிகரித்துக் கொண்டே போனால் இன்னும் இன்னும் உயர்ந்துகொண்டே போவார் முகேஷ் அம்பானி என்பதில் சந்தேகமில்லை. என்னதான் பங்கு மதிப்பு உயர்வால் முகேஷின் சொத்து மதிப்பு அதிகரித்து நம்பர் ஒன் இடத்தைப் பிடித்திருந்தாலும் கூட, அமெரிக்க டாலருக்கு எதிரான மதிப்பு குறைந்து போனதாலேயே பில் கேட்ஸ் கொஞ்சம் பின் தங்கி, முகேஷ் உச்சாணிக்கொம்பில் உட்கார்ந்துவிட்டார்.

இத்தனை கூத்துகளும் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்க, ரிலையன்ஸ் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் துஷார் பனியா இது எல்லாவற்றையுமே மறுத்துள்ளார்.

'தவறான தகவல்களைக் கொண்டு செய்தி வெளியாகியுள்ளது. முகேஷின் சொத்து மதிப்பு 50 பில்லியன் டாலரைத் தாண்டாது. யாரோ சிலர் தவறாகக் கணக்கிட்டு இப்படிச் செய்தி வெளியிட்டுள்ளனர். இத்தனைக்கும் ரிலையன்ஸ் பெட்ரோலியத்தில் முகேஷுக்கு நேரடிப் பங்கு எதுவும் இல்லை' என்றிருக்கிறார்.

ஒரு வேளை திருஷ்டி படாமல் இருப்பதற்காகச் சொல்லியிருப்பார்களோ!?

– ஆர்.முத்துக்குமார்




B SS?

அகர வரிசை தகவல்கள்!

275 மூலிகைகளின் முக்கிய குணங்களும், பயன்களும் - டி.வெங்கட்ராவ் பாலு - எம்.வி.விஸ்வநாதன், நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017. விலை ரூ.90/-

275 மூலிகைகளின் இயற்பெயர், தாவரவியல் பெயர், குடும்பம் மற்றும் மருத்துவப் பயன்களின் தொகுப்பு - படங்களுடன். அகர வரிசையில் வெளியிடப்பட்டுள்ள படித்தறியா பல தகவல்கள் பயனுள்ளவை.



கண் கண்ட கடவுள் - எழுவன்கோட்டை மு.சண்முகம், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017. விலை ரூ.60/-

கண்ணபிரான், தேவகியின் திருவயிற்றில் உதித்தது முதல், விண்ணுலகம் சென்றது வரையிலான வரலாற்றை எளிய கவிதைகளாக யாத்துள்ளார் நூலாசிரியர். ஆங்காங்கே ஓவியங்களைப் பொருத்தியிருந்தால், நூல் இன்னும் கூடுதல் சிறப்புப் பெற்றிருக்கும்.

மக்கள் தேடும் புதிய பாரதம் - எஸ்.கியாஸ், உலகத் தமிழ்ப் படைப்பாளர் நூல் வெளியீட்டகம், 27, ஆனைக்கட்டி மைதானம், பீம நகர், திருச்சி - 620 001. விலை ரூ.70/-

இந்தியாவின் கட்டமைப்பை, வெளிநாடுகளின் கட்டமைப்போடு ஒப்பிட்டுள்ள நூலாசிரியர், உழைக்கத் தயங்கும் இந்திய இளைஞர்களையும் ஊரார் உழைப்பில் உண்டு கொழிக்கும் அரசியல்வாதிகளையும் கடுமையாகச் சாடியிருக்கிறார். இவர் கூறியுள்ள பாரத முன்னேற்றத்துக்கான அடிப்படைக் கூறுகள், நூலின் நோக்கத்துக்குக் கைகொடுக்கும்.

மறந்துபோன பக்கங்கள் - செங்கோட்டை ஸ்ரீராம், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002. விலை ரூ.75/-

ஆன்மிகம், தேச வரலாறு, இலக்கியம், கலை மற்றும் வாழ்வியல் கருத்துகளைத் தாங்கியுள்ள 'நச் நச்' கட்டுரைகள். நாகரிக வாழ்க்கையில் நாம் மறந்துபோனவற்றைக் கூறி, மறக்கக் கூடாதவற்றையும் சுவைபட பட்டியலிட்டுள்ள ஸ்ரீராமின் முயற்சியையும் உழைப்பையும் மறக்க முடியாது.

- ராஜா

அருள்மிகு உத்தமர் திருக்கோவில்

பிக்சாண்டார்கோயில், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்

முப்பெரும் தேவியர் உடனுறை மும்மூர்த்திகள் அருளும் இந்தியாவின் ஒரே திருத்தலம். இந்தியாவின் ஒரே சப்தகுரு க்ஷேத்திரம்

அருமை, பெருமை அறிய: 0431-2591466, 2591040, செல்: 94431-24558, 94431-51040,

இணையதளம்:

www.trichy.uthamar temple.org www.srivaishnava.org/d desam/uttamar



குருப்பெயர்ச்சி சிறப்பு பரிகார ஹோமவிழா

நாள்: 16.11.2007 வெள்ளிக்கிழமை

நிகழும் சர்வஜித்து வருடம் ஐப்பசி மாதம் 30ம் தேதி 16.11.2007 வெள்ளிக்கிழமை
அதிகாலை 4.45 மணியளவில்

**அருள்மிகு குருபகவான் விருச்சிக ராசியில் இருந்து
தனுசு இராசிக்கு பிரவேசிக்கிறார்**

அதை முன்னிட்டு கீழ்க்கண்ட இராசி நேயர்கள் தங்களுடைய ஜென்ம ராசிக்கு பரிகாரம் செய்து கொள்வது மிகவும் உத்தமம்.

தங்களுடைய பெயர், நட்சத்திரம், இராசி, கோத்திரம், லக்னம் ஆகிய முழு விபரங்களையும், எழுதி **செயல் அலுவலர் அ/மி. உத்தமர்கோயில், திருச்சி** என்ற முகவரிக்கு மாணியாடர்மூலமாகவோ, டிமாண்ட் டிராப்டாகவோ அனுப்பி பிரசாதம் பெற்றுக்கொள்ளலாம்.

இராசிகள் ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம்

குருபெயர்ச்சி ஹோம கட்டணம் 1க்கு ரூ. 150/-

திரு. **ஜி.சம்பத்குமார்,** B.Sc.,B.Ed.,
செயல் அலுவலர் (கூ.பொ.)

திரு. **அ.அம்பிகாபதி, தலைவர்,** அறங்காவலர் குழு
திரு. **பி.க.முத்துகிருஷ்ணன்** அறங்காவலர்
திருமதி. **க.பாலசுப்ரமணியம்** அறங்காவலர்
திருமதி. **க.விசாலாட்சி** அறங்காவலர்
திரு. **பா..செந்தில்(எ)கார்த்திகேயன்** அறங்காவலர்

அருள்மிகு பிரம்ம சம்பத் கௌரி சமேத பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்



திருப்பட்டூர்

"தலையெழுத்தையே மங்களகரமாக மாற்றும் சக்தி படைத்த ஸ்ரீ பிரம்மா"

குருப்பெயர்ச்சி சிறப்பு மகா யாகம்

நாள்: 16.11.2007 வெள்ளிக்கிழமை

நிகழும் சர்வஜித்து வருடம் ஐப்பசி மாதம் 30ம் தேதி 16.11.2007 வெள்ளிக்கிழமை
அதிகாலை 4.45 மணியளவில்

**அருள்மிகு குருபகவான் விருச்சிக ராசியில் இருந்து
தனுசு இராசிக்கு பிரவேசிக்கிறார்**

அதை முன்னிட்டு கீழ்க்கண்ட இராசி நேயர்கள் தங்களுடைய ஜென்ம ராசிக்கு பரிகாரம் செய்து கொள்வது மிகவும் உத்தமம்.

தங்களுடைய பெயர், நட்சத்திரம், இராசி, கோத்திரம், லக்னம் ஆகிய முழு விபரங்களையும், எழுதி **செயல் அலுவலர் அ/மி. பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்பட்டூர்** என்ற முகவரிக்கு மாணியாடர் மூலமாகவோ, ICICIகிளை ஸ்ரீரங்கம் Ac.No.612501123188 பணம் செலுத்தியோ, அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அனுப்பி பிரசாதம் பெற்றுக்கொள்ளலாம்.

இராசிகள் ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம்

குருபெயர்ச்சி மஹா யாக கட்டணம் ரூ. 150/-

திரு. **M.மகாலிங்கம்**
தக்கார்

திரு. **ஜி.சம்பத்குமார்,** B.Sc.,B.Ed.,
செயல் அலுவலர்

எலி ஜோஸ்யம்

கிரேஸியைக் கேளுங்கள்!

● **ஸ்ரீகாந்த், சென்னை**


கடவுள் உண்டா... இல்லையா...?

கடவுள் 'உண்டா இல்லையா' நேற்றைய கேள்வி. கடவுள் 'வேண்டுமா வேண்டாமா' இன்றைய கேள்வி. கடவுள் 'நீயா நானா' நாளைய கேள்வி!

● **ராகினி, சென்னை**

'எலி ஜோஸ்யம்' பார்த்ததுண்டா?

இந்தக் கேள்விக்கு பதில் சொல்வதற்காக மூன்று முறை எலி ஜோஸ்யம் பார்த்தேன். நான் பார்த்த எலி 'மிக்கி



மவுஸ்' அல்ல, சரியான 'லக்கி மவுஸ்!' மூன்று முறையும் அது எடுத்துக் கொடுத்த அட்டையில், அதிர்ஷ்டம் கடிக்கும்... ஸாரி அடிக்கும் என்று எழுதியிருந்தது.

● **அ.முரளீதரன், மதுரை**

பாலியல் கல்வி பள்ளிக்கூடத்தில் தேவையா..?

'சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை...' இது எதற்கு பள்ளிக்கூடத்தில்? திருமணமாகி பள்ளியறைக்குள் நுழைந்தால், தன்னால் இந்தக் கலையில் படிக்காத மேதையாகி விடலாமே!

● **என். கோமதி, நெல்லை**

அதிகாலையில் கண் விழித்து, கண்ணாடியில் பார்த்தால் உங்களுக்கு 'நெற்றிக் கண்' முளைத்திருக்கிறது! என்ன செய்வீர்கள்...?

அதிகாலையில் என்னை எழுப்ப, நான் யாருக்கும் அதிகாரம் கொடுப்பதில்லை. என்னதான் நெற்றிக்கண்ணாய் இருந்தாலும், நான் மன்னிக்க மாட்டேன். 'பாதித் தூக்கத்தில் எழுப்பிய நெற்றிக்கண்ணே! நீ நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று கூறி, கண்ணாடியில் தெரியும் நெற்றிக்கண்ணை, என் மூக்குக் கண்ணாடிக்குள் இருக்கும் மற்ற கண்களால் எரிப்பது போலப் பார்ப்பேன். நெற்றிக்கண் பரமேஸ்வரம்... என் மற்ற கண்களோ சாளேஸ்வரம்.... சாளேஸ்வரம் கண்ணுக்குள் இருப்பது தெரிவதே கஷ்டம். இதில் எரிப்பது எப்படிச் சாத்தியம்? சரி... நெற்றிக் கண் வசதிகளைப் பார்ப்போம். இரண்டு சாதா கண்களால் புத்தகத்தில் உள்ள வரிகளைப் படிக்கும் போது, மத்தியில் உள்ள நெற்றிக்கண்ணால் I can read in between the lines. அப்புறம் 1...2...3... அணு ஆயுத ஒப்பந்தத்தால், பிரதமர் மன்மோகன்சிங் மிகவும் தவித்துக் கிடக்கிறார். அணு சக்தியை விட ஆயிரம் மடங்கு சக்தி, அதாவது Energy உடையது நெற்றிக்கண். தனது ஆக்க சக்தியால், நெற்றிக்கண் தேவசேனாதிபதி ஆறு முகனைப் படைத்தது. தனது அழிவு சக்தியால், அழகென்னும் அகங்காரம்கொண்ட மன்மதனை அழித்தது. மன்மோகனுக்கு இந்த கிரேஸி மோகன், முளைத்த நெற்றிக் கண்ணை கண் தானம் செய்து விடுவேன். 1...2...3... அணு ஆயுத ஒப்பந்தப் பிரச்னைக்கு நல்லதோர் முடிவு கொடுத்த என்னை, பிரம்மா...விஷ்ணு...சிவன்... என்ற அந்த 1...2...3...க்கள், பாராட்டி, பூமாரிப் பொழிவார்கள்.



● **சீனிவாசன், சென்னை**

Wine Shop-ல் அடித் தள்ளுபடி வந்தால்?

அப்ப அது 'தள்ளாடிக் கள்ளுபடி...'

● **ரேவதி தஞ்சாவூர்**

நட்புக்கும் பகைக்கும் இடையே உள்ள தூரம் என்ன?

நட்பு - பகை இரண்டுமே நமக்கு அருகாமையில்தான் உள்ளன. பகை- கைக்

பார்த்ததுண்டா?

கெட்டிய கல்லெறி தூரத்தில் உள்ளது. நட்பு - வாய்க்கெட்டிய கூப்பிடு தூரத்தில் இருக்கிறது. அருகாமையில் உள்ள நட்பு, அணுகாமையால் பகையாகிறது.

● **ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்**

க்ரேஸி மோகன்ஜி... தங்கள் இல்லம் சிதம்பரமா, மதுரையா, சுவாமி மலையா?

புழக்கத்தில் உள்ள ஆணாதிக்க சிதம்பரம், பெண்ணாதிக்க மதுரையைத் தவிர, 'மகன் ஆதிக்க சுவாமி மலை' பிரயோகத்தால், கோபாலன்ஜி நீங்க எங்கேயோ போய்ட்டீங்க. கேள்விக்கு வருவோம். தற்சமயம் என் இல்லம் மூன்றும் அல்ல. திருப்பதி. சமீபத்தில் பேரன் பிறந்து அடியேன் தாத்தா சாஹிப் ஆகியிருக்கிறேன். 'நீங்களாச்சு உங்க மாடி ரூம் ஆச்சு' என்று என் மனைவி என்னை அம்போ என்று மேல் திருப்பதியில் விட்டுவிட்டு, கீழ் திருப்பதியில் (கிரவுண்ட் ஃப்ளோரில்) பேரனைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்.

● **எஸ்.ராஜமழை, சின்னமனூர்**

ஒரு பெண்ணுக்கு எப்படிப்பட்ட ஆணைப் பிடிக்கும்...?

'ஆணை'யிடாத ஆணைப் பிடிக்கும்!

● **தங்கம், திருவூர்**

மைலாப்பூர் ராமகிருஷ்ணா மடத்துக்கு தாங்கள் அடிக்கடி போகும் மர்மம் என்ன?

அன்றாட வாழ்க்கை பரம ஹிம்சை. அதில் அமைதி காண நாடுவீர் பரம ஹம்ஸரை. கர்மம் தொலைக்கும் மர்மம் இதுவே!

24. மாரப்பனின் மனக் கலக்கம்

பொன்னனையும் வள்ளியையும் நள்ளிரவில் மாரப்ப பூபதி தொடர்ந்து போன காரணம் என்ன? இதை அறிந்து கொள்வதற்கு நாம் மறுபடியும் அன்று சாயங்கால நிகழ்ச்சிகளுக்குப் போக வேண்டும்.

சக்கரவர்த்தியின் சந்நிதியிலிருந்து வெளியேறியபோது, மாரப்பன் அளவில்லாத மனச்சோர்வு கொண்டிருந்தான். சாம்ராஜ்யத்துக்காகத் தான் செய்த சேவையெல்லாம் இவ்விதம் பிரதிபலன் இல்லாமற் போகும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. பார்த்திபன் போர்க்களத்தில் மாண்டு ஏறக்குறைய ஏழு வருஷமாயிற்று. அந்தப் போரில் தான் கலந்துகொள்ள மறுத்ததற்காகவே உறையூர் சிம்மாசனம் தனக்குக் கிடைக்குமென்று மாரப்பன் எதிர்பார்த்தான். அந்த ஆசை நிறைவேறவில்லை. அதனால் அதிருப்தியோ, வெறுப்போ கொண்டதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தில் அவனுடைய பக்தி குன்றியதாகவும் தெரியப்படுத்தவில்லை. தன்னுடைய உண்மையான சாம்ராஜ்ய சேவைக்கு ஒரு நாள் நிச்சயம் பலன் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அவன் வருஷக்கணக்காகக் காத்திருந்தான். கடைசியாக, விக்கிரமனுடைய சதியாலோசனையைப் பற்றி அவனுக்குச் செய்தி தெரிந்தபோது, தளபதி அச்சுதவர்மரிடம் உடனே சென்று தெரியப்படுத்தினான். அதன் பலனாக அச்சதியாலோசனையை முளையிலேயே கிள்ளி எறிவது சாத்தியமாயிற்று. இதன் பிறகாவது, தன்னுடைய சேவைக்குத் தகுந்த சன்மானம் கிடைக்குமென்று அவன் நிச்சயமாக நம்பியிருந்தான். அவன் ஆசைப்பட்டது பல்லவ சக்கரவர்த்திக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு உறையூரை ஆளும் பதவிதான். இது உடனே கிடைக்காவிட்டாலும், தான் முன்னர் வகித்து வந்த சேனாபதி பதவியாவது கிடைக்குமென்று நினைத்தான். ஆனால், நடந்தது என்ன? சக்கரவர்த்தி தன் பேரிலேயே சந்தேகம் கொள்ளலாயிற்று. கேவலம் ஓர் ஓடக்காரன் - அவன் பெண்டாட்டி - இவர்கள் முன்னிலையில் சோழ நாட்டுப் பட்டத்துக்கு உரியவனான தான் அவமானப்பட நேர்ந்தது.

பார்த்திபன்

இதை நினைத்தபோது மாரப்பனுடைய நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. "இது என்ன உலகம்? இது என்ன வாழ்வு?" என்று உலகத்தையே வெறுக்கும் வழியில் மனம் திரும்பிற்று. எங்கே போகிறோமென்ற சிந்தனையே இல்லாதவனாய் குதிரை போன வழியே போக விட்டுக் கொண்டிருந்தான். அறிவுமிக்க பிராணியான குதிரை, தன் எஜமானனுடைய மனநிலையை உணர்ந்து மந்த நடையுடன் யதேச்சையாகப் போய்க்கொண்டிருந்தது. உறையூரின் வீதிகளில் அங்குமிங்குமாக அது சிறிது நேரம் சுற்றி விட்டுக்

அமரர் கல்கி



களவு

கடைசியில் காவேரிக் கரையை அடைந்தது. பிறகு காவேரிக்கரைச் சாலையோடு கிழக்குத் திக்கை நோக்கிச் செல்லலாயிற்று.

சூரியன் அஸ்தமித்தது. அன்று சுக்கில பட்சத்துச் சதுர்த்தியாதலால் மேற்குத் திசையில் நாலாம் பிறை தோன்றிற்று. வானத்தில் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய்த் தோன்றி மினுக்கத் தொடங்கின. சற்று நேரத்துக்கெல்லாம் வானவெளி முழுவதிலும் கோடிக்கணக்கான வைரங்களை வாரி இறைத்ததுபோல் நட்சத்திரங்கள் பொறிந்து கிடந்தன. மாரப்பன் இந்த வான விசித்திரம் ஒன்றையும் கவனியாமல் ஏதேதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அரைக்காத வழி இவ்விதம் போன பிறகு அவன் திடுக்கிட்டுச் சுயநினைவு வந்தவனாய் எங்கே போகிறோமென்று ஆராய்ந்தான். இதற்குள் நாலாம் பிறைச் சந்திரன் மேற்கு வானத்தின் அடிப் பாகத்துக்கு வந்துவிட்டது. குதிரையைத் திருப்பி உறையூர்ப் பக்கம் செலுத்தினான்.

மாரப்பனுடைய மனத்தில் மின்னலைப் போல் ஓர் எண்ணம் உதித்தது!

உறையூர்க் கோட்டை வாசலைத் தாண்டி உள்ளே சிறிது தூரம் அவன் சென்றபோது, எதிரே அநேக தீவர்த்திகளுடனும், சங்கம் முதலிய வாத்திய முழக்கங்களுடனும் ஒரு கூட்டம் வருவதைக் கண்டான். கூட்டத்தின் மத்தியில் சிங்கக் கொடி பறந்ததைப் பார்த்தபோது, ஒருவேளை சக்கரவர்த்தி தம் பரிவாரங்களுடன் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்துக்குப் போகிறாரோ என்று நினைத்துச் சட்டென்று குதிரையிலிருந்து இறங்கிச் சாலை ஓரமாக அடக்க ஒடுக்கத்துடன் நின்றான். கூட்டம் அருகில் வந்தபோது அதில் சக்கரவர்த்தி இல்லையென்பது தெரிந்தது. தளபதி அச்சுதவர்மரும், அவருக்குப் பக்கத்தில் தலை மொட்டையடித்த ஒரு சாமியாரும் வந்துகொண்டிருந்தார்கள். அந்தச் சாமியார் திடகாத்திர தேகமுடையவராயும் முகத்தில் நல்ல தேஜஸ் உடையவராயுமிருந்தார். மாரப்பனுடைய மனத்தில் மின்னலைப் போல் ஓர் எண்ணம் உதித்தது. 'ஒரு வேளை இவர்தான் அந்த ஜடாமகுடதாரியான கபட சந்நியாசியோ?' என்று நினைத்தான். அதே சமயத்தில் தளபதி அச்சுதவர்மரின் பார்வை மாரப்ப பூபதியின் மீது விழுந்தது.

அவர் பூபதியைச் சமிக்ஞையினால் அருகில் அழைத்து, பக்கத்திலிருந்த சிறுத்தொண்டரை நோக்கி, "அடிகளே! இவன் யார் தெரிகிறதா? பார்த்திப மகாராஜாவின் சகோதரன் மாரப்ப பூபதி!" என்றார்.

சிறுத்தொண்டர் மாரப்பனை ஏற இறங்கப் பார்த்தவண்ணம், "அப்படியா? வெகு காலத்துக்கு முன்னால், மகேந்திரச் சக்கரவர்த்தியின் காலத்தில் இவனைப் பார்த்திருக்கிறேன். இப்போது அடையாளம் தெரியவில்லை" என்றார்.

"விக்கிரமனுடைய சதியாலோசனையைக் கண்டுபிடித்துச் சொன்னது பூபதிதான். ஆனாலும் சக்கரவர்த்திக்கு ஏனோ இவன் பேரில் தயவு பிறக்கவில்லை!" என்றார் அச்சுதவர்மர்.

சிறுத்தொண்டர் இதற்கு ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் ஒரு தடவை மாரப்பனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மேலே போகத் தொடங்கினார்.

அவர்கள் இருவரும் அப்பால் சென்றதும், சேடிகள் சூழ்ந்த பல்லக்குப் பின்னால் வருவதைப் பார்த்து, சக்கரவர்த்தியின் திருமகளாயிருக்கலாம் என்று மாரப்பன் ஊகித்துக்கொண்டு அவசரமாய் விலகிச் செல்லத் தொடங்கினான். ஆனால் என்ன ஆச்சரியம்! அதே இடத்தில் பல்லக்கு நின்றது. "பூபதி!" என்று மதுரமான பெண் குரலில் அழைப்பது கேட்டது. மாரப்பன் திரும்பிப் பார்த்தபோது, பல்லக்கில் பூரண சந்திரனை ஒத்த முக சாந்தியுடைய குந்தவி தேவியும், அவளருகே சிவபக்தியே உருவங்கொண்டது போன்ற மூதாட்டி ஒருவரும் இருக்கக் கண்டான். குந்தவி தேவிதான் தன்னை அழைக்கிறாள் என்று அறிந்ததும், மாரப்பனுடைய உள்ளத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் சேர்ந்தாற்போல் பொங்கின. ஒரு பக்கம் சங்கோஜம் பிடுங்கித் தின்றது. பல்லக்கின் அருகில் சென்று குந்தவியைப் பார்க்க விரும்பினானாயினும் கூச்சத்தினால் நிமிர்ந்து பார்க்க முடியாதவனாய்த் தரையைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"பூபதி! இன்று என் தந்தை, உன்னிடம் ரொம்பக் கடுமையாயிருந்து விட்டார். அதற்காக நீ வருத்தப்பட வேண்டாம். உன் பேச்சில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எப்படியாவது அந்தப் போலி வேஷதாரி சிவனடியாரை மட்டும் நீ கண்டுபிடித்து விடு. அப்புறம் உன்னுடைய கட்சியில் நான் இருப்பேன்!" என்று குந்தவி தேவி அனுதாபம் நிறைந்த குரலில் கூறியபோது, மாரப்பனுக்கு ஏற்பட்ட மனக்கிளர்ச்சியை வர்ணிக்கத் தரமன்று. அதல பாதாளத்திலிருந்து ஒரே அடியாகச் சொர்க்கத்துக்கு வந்துவிட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. சிறிது தலை நிமிர்ந்து, "அம்மணி! தங்களுடைய சித்தம் என்னுடைய பாக்கியம். அந்தப் போலி சிவனடியாரைக் கண்டுபிடிக்காமல் இனிமேல் நான் ஊணுறக்கம் கொள்ள மாட்டேன்" என்றான்.

"சந்தோஷம், கண்டுபிடித்ததும் எனக்கு உடனே தெரியப்படுத்து" என்று சொல்லிவிட்டு, குந்தவி தேவி பல்லக்கை மேலே செல்லும்படிக் கட்டளையிட்டாள்.

பல்லக்கும் பரிவாரங்களும் போன பிறகு மாரப்பன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றான். தான் இப்போது கண்டதும் கேட்டதும் கனவல்ல என்று நிச்சயம் செய்துகொண்ட பின், பக்கத்தில் வந்து நின்ற

'இதன் உண்மையை எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டும். பொன்னனையும் வள்ளியையும் சிநேகம் செய்துகொண்டு அவர்கள் மூலமாகத்தான் இதை நிறைவேற்ற வேண்டும்!'

புரவியின் மீது மறுபடியும் ஏறிக்கொண்டான். அச்சுதவர்மருடன் சென்ற மொட்டைச் சாமியாரின் நினைவு வந்தது. வாதாபிப் போரில் வென்ற தளபதி பரஞ்சோதியைப் பற்றியும் மாரப்பன் கேள்விப்பட்டதுண்டு. அந்நாளில் அவர் பார்த்திப மகாராஜாவுக்கு மிகவும் வேண்டியவர் என்றும் கேட்டிருந்தான். எனவே, அவர்தான் அவ்வப்போது ஜடாமகுட வேஷம் பூண்ட சிவனடியாராய்த் தோன்றி நடித்து வந்தாரோ, என்னவோ? ஏன் இருக்கக்கூடாது? இதன் உண்மையை எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டும். ஆனால், எப்படி? பொன்னனையும் வள்ளியையும் சிநேகம் செய்துகொண்டு அவர்கள் மூலமாகத்தான் இதை நிறைவேற்ற வேண்டும். உடனே மாரப்ப பூபதிக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. தான் அன்று தோணித் துறைக்குப் போகும் காவேரிக் கரைச் சாலையில் வெகு தூரம் போய்விட்டுத் திரும்பியிருந்தும், போகும் போதோ, வரும்போதோ பொன்னனையும் வள்ளியையும் சந்திக்கவில்லை. ஆகவே, அவர்கள் இன்றிரவு உறையூரில்தான் இருப்பார்கள். எங்கே தங்கியிருப்பார்கள்? வள்ளியின் பாட்டன் வீட்டில் ஒரு வேளை இருக்கலாமல்லவா...!

உடனே மாரப்பன் விரைவாகக் குதிரையை விட்டுக்கொண்டு சென்று தன் மாளிகையை அடைந்தான். வாசலில் நின்ற ஏவலாளர்களிடம் குதிரையைக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து கால்நடையாகக் கிளம்பினான். இரவு சாப்பாட்டைப் பற்றிய நினைவே அவனுக்கில்லை. பசி தாகமெல்லாம் மறந்து போய்விட்டது. பொன்னனையும் வள்ளியையும் இன்றிரவு சந்திக்க வேண்டுமென்னும் ஆவலினால் உறையூர்க் கம்மாளத் தெருவை நோக்கி நடக்கலுற்றான்.

அப்போது அஸ்தமித்து ஒரு ஜாமத்துக்கு மேலிருக்கும். உறையூரின் வீதிகளில் ஜனங்களின் நடமாட்டம் பெரிதும் குறைந்திருந்தது. சந்தடி அநேகமாக அடங்கிவிட்டது. ஆலயங்களுக்குப் போய்விட்டுத் திரும்புவோர், தெருக்கூத்துப் பார்க்கச் செல்வோர், இராப் பிச்சைக்காரர் ஆகியவர்கள் அங்கொருவரும் இங்கொருவருமாய்க் காணப்பட்டனர். எங்கேயோ வெகு தூரத்தில் ''அகோ வாரும் பிள்ளாய்! அரிச்சந்திர மகாராஜனே!'' என்று விசுவாமித்திர முனிவர் அலறிக்கொண்டிருந்தார்!

மாரப்பன் வீதிகளின் ஓரமாகத் தன்னை யாரும் கவனிக்காதபடி நடந்து விரைந்து போய்க்கொண்டிருந்தான். அவன் கம்மாளத் தெருவை நெருங்கியபோது திடீரென்று பேய் பிசாசைக் கண்டவன்போல் ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டான். ஏனென்றால் கம்மாளத் தெரு திரும்பும் முனையில் அப்போது தான் அணைந்துகொண்டிருந்த அகல்விளக்கின் வெளிச்சத்தில் அவன் ஒரு உருவத்தைக் கண்டான். அது, அவனுடைய உள்ளத்தில் நிலைபெற்றிருந்த சிவனடியாரின் உருவந்தான். அந்த உருவத்தை அவன் பார்த்த அதே சமயத்தில் விளக்கு அணைந்துபோய் விட்டது. திகைத்து நின்ற மாரப்ப பூபதி மறுகணம் அந்த உருவம் நின்ற இடத்தை நோக்கி விரைந்து ஓடினான். ஆகா! அந்தப்



பொல்லாத வஞ்சக வேஷதாரியை அன்றிரவு கையும் மெய்யுமாய்ப் பிடித்துக் கொண்டு போய்ச் சக்கரவர்த்தித் திருமகளின் முன்னால் நிறுத்தினால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அந்த ஆவலுடனே அவன் ஓடினான். ஆனால், விளக்குத் தூணின் அருகில் சென்று பார்த்தபோது அங்கு ஒருவரையும் காணவில்லை. அந்த இடத்திலிருந்து நான்கு திசையிலும் நாலு வீதிகள் போய்க்கொண்டிருந்தன. அவற்றுள் எந்த வீதி வழியாக சிவனடியார் போயிருக்கக் கூடுமென்று தீர்மானிக்க முடியவில்லை.

மாரப்ப பூபதியின் உள்ளத்தில் சட்டென்று ஒரு யோசனை உதித்தது. ஆம். தான் பார்த்த உருவம் அந்த சிவனடியாராயிருக்கும் பட்சத்தில், அவர் பொன்னனையும் வள்ளியையும் பார்ப்பதற்குத்தான் அங்கு வந்திருக்க வேண்டும். வீரபத்திர ஆச்சாரியின் வீட்டுக்குத்தான் போயிருப்பார். இன்னும் என்ன சதியாலோசனைக்காக அவர்கள் அங்கே கூடுகிறார்களோ, என்னவோ தெரியவில்லை. நரசிம்மவர்மச் சக்கரவர்த்தி உறையூருக்கு வந்திருக்கும் சமயத்தில் இந்தச் சதியாலோசனை நடக்கிறது! ஆகா! குற்றம் செய்வதில் ஈடுபட்டிருக்கும்போதே மூன்று பேரையும் கையும் மெய்யுமாய்ப் பிடித்துவிட முடியுமானால்? சக்கரவர்த்திக்குத் தன் பேரில் அகாரணமாக ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிடலாமல்லவா? பிறகு...



இப்படிச் சிந்தித்துக்கொண்டே மாரப்பன் வீரபத்திர ஆச்சாரியின் வீட்டை நெருங்கியபோது, இன்னொரு அதிசயம் அவனுக்கு அங்கே காத்திருந்தது. அந்த வீட்டின் கதவைத் திறந்துகொண்டு இருவர் வெளியில் வந்தார்கள். மாரப்பன் ஒரு வீட்டுத் திண்ணை ஓரத்தில் தூண் மறைவில் நின்றபடி உற்றுக் கவனித்தான். வெளியே வந்தவர்கள் பொன்னனும் வள்ளியுந்தான். வள்ளி இடையில் வைத்திருந்த விளக்கைச் சேலைத் தலைப்பினால் மறைத்து எடுத்துக்கொண்டு வந்ததும்



தெரிந்தது. அவர்கள் இருவரும் வீரபத்திர ஆச்சாரி வீட்டுக்குப் பக்கத்தி லிருந்த சந்தின் வழியாக வடக்கு நோக்கிச் சென்றார்கள்.

'இதில் ஏதோ மர்மம் இருக்கிறது; இவர்கள் ஏதோ பெரிய சதித்தொழில் இன்று செய்யப் போகிறார்கள். இதில் அந்த சிவனடியாரும் சேர்ந்திருக்கிறார். அவர் முன்னால் போயிருக்கும் இடத்துக்கு இவர்கள் பின்தொடர்ந்து போகிறார்கள்' என்று மாரப்பன் தீர்மானித்துக் கொண் டான். சொல்ல முடியாத பரபரப்பும் உற்சா கமும் அவனை ஒரு புது மனிதனாகச் செய்துவிட்டன. பொன்னனும் வள்ளியும் போன வழியே, அவர்கள் கண்ணுக்கு மறையாத தூரத்தில் மாரப்பன் சிறிதும் ஓசை கேட்காதபடி நடந்து போனான்.

அந்தச் சந்து வழியே பொன்னனும் வள்ளியும் சென்று காவேரிக் கரையை அடைந்தார்கள். அங்கே ஒரு மரத்தின் வேரில் கட்டிப்போட்டிருந்த படகில் வள்ளி ஏறி உட்கார்ந்துகொண்டாள். கூடை யைப் படகின் அடியில் வைத்துப் பத்திர மாய் மூடிக்கொண்டாள். சென்ற அத்தி யாயத்தில் நாம் பார்த்தபடியே பொன்னன் படகை இழுத்துக்கொண்டு போய் அரண் மனைத் தோட்டத்தின் மதிலை அடைந் ததும் படகை அங்கேயே கட்டிப் போட்டு விட்டு, வள்ளியையும் அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குள்ளே பிரவேசித் தான்.

அந்தத் தோட்டம், பார்த்திப மகாராஜா வாழ்ந்த பழைய சோழ வம்சத்து அரண் மனைத் தோட்டம் என்பதை மாரப்பன் அறிந்திருந்தான். அந்த அரண்மனையில் அச்சமயம் யாருமில்லை. அது சக்கர வர்த்தியின் கட்டளையினால் பூட்டிக் கிடந்தது என்பதும் அவனுக்குத் தெரிந் ததுதான். ஆகவே, பொன்னனும் வள்ளியும் அந்த அரண்மனைக்குள் கொல்லைப் புறத்தின் வழியாக நுழைவது ஏதோ கெட்ட காரியத்துக்காகத்தான் என்றும், அநேகமாக அந்த அரண்மனைக்குள் அச்சமயம் சிவ னடியார் இருக்கலாமென்றும் மாரப்ப பூபதி ஊகித்தான். இன்னும் ஒரு பயங்கரமான - விபரீதமான சந்தேகம் அச்சமயம் அவனு டைய உள்ளத்தில் உதித்தது. பார்த்திப மகாராஜா போர்க்களத்தில் இறந்த செய்தியே ஒரு சமயம் பொய்யாயிருக் குமோ? அவர் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி, பிறகு இப்படி சிவனடியாரின் வேஷத்தில் வந்து விபரீதமான காரியங் களையெல்லாம் செய்து வருகிறாரோ என்று நினைத்தான். எப்படியிருந்தாலும் இன்று இரவு எல்லா மர்மங்களும் வெளி யாகிவிடப் போகின்றன! இந்த நம்பிக்கையுடன் அவன் மதிற் கதவின் வெளிப்புற நாதாங்கி யைப் போட்டுவிட்டு, பொன் னன் திரும்பி வருவதற்குள் தன்னுடைய ஆட்களை உதவிக்கு அழைத்துக்கொண்டு அங்கே வந்துவிடுவது என்ற தீர் மானத்துடன் விரைந்து சென்றான்.



25. சமய சஞ்சீவி

தன்னைப் பின்தொடர்ந்து இரண்டு பேர் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறியாத பொன்னன், அரண்மனைத் தோட்டத்துக்குள் உற்சாகத்துடன் போய்க் கொண்டிருந்தான். இடையிடையே அவன், "வள்ளி! அதோ அந்த மாமரத்தடியில்தான் மகாராஜாவும் மகாராணியும் சாயங்கால வேளையிலே உட்காருவது வழக்கம். அதோ பார்த்தாயா? அந்த மூலையில் ஒரு தாமரைக்குளம் இருக்கிறது. அதில்தான் முதன் முதலில் இளவரசர் நீந்தக் கற்றுக் கொண்டார்!" என்று இவ்விதம் சொல்லிக் கொண்டே போனான். வள்ளி ஒவ்வொரு தடவையும், "கொஞ்சம் மெதுவாகப் பேசு!" என்று எச்சரித்துக்கொண்டு வந்தாள்.

இவர்களுடைய பேச்சுக் குரலைக் கேட்டு மரங்களின் மீது உறங்கிக் கொண்டிருந்த பட்சிகள் சில விழித்துச் சிறகுகளை அடித்துக் கொண்டன. அப்போது பொன்னன் கையைத் தட்டி ஓசைப்படுத்தியதுடன் "உஷ்!" என்று சப்தமிட்டான்.

"ஆமாம்; உன்னுடைய தைரியமெல்லாம் பாதி ராத்திரியில் தூங்குகிற பட்சிகளிடந்தான். எதிரியின் கையில் கத்தியைக் கண்டால் உடனே விழுந்தடித்து ஓடி வந்துவிடுவாய்!" என்று வள்ளி சொன்ன பிறகு பொன்னன் சற்று வாயை மூடினான்.

அரண்மனையின் பின்புறத்தை அவர்கள் அடைந்ததும் பொன்னன், "வள்ளி! உள்ளே போய் எல்லாம் பார்க்கலாமா அல்லது வந்த காரியத்தைப் பார்த்துக் கொண்டு திரும்புவோமா?" என்று கேட்டான்.

"விளக்கில் எண்ணெய் கூட ஆகிவிட்டது. சீக்கிரம் வந்த காரியத்தைப் பார்க்கலாம்! கோயில் எந்தப் பக்கம் இருக்கிறது?" என்று வள்ளி கேட்டாள்.

"அப்படியானால் இங்கே வா!" என்று பொன்னன் கிழக்குப் பக்கமாக அவளை அழைத்துச் சென்றான்.

பார்த்திப மகாராஜாவின் காலத்தில் ஒருமுறை நாம் அரண்மனைக் கோயிலைப் பார்த்திருக்கிறோம். அந்த அழகிய சிறு கோயிலானது அரண்மனையைச் சேர்ந்தாற் போல கீழ்ப் பாகத்தில் அமைந்திருந்தது. அதற்குள் பிரவேசிப்பதற்கு மூன்று வழிகள் இருந்தன. அரண்மனைக்குள்ளேயிருந்து நேராகக் கோயிலுக்குள் வரலாம். இதுதான் பிரதான வாசல். பின்புறத்துத் தோட்டத்திலிருந்து பிரவேசிப்பதற்கு ஒரு வாசல் இருந்தது. அபிஷேகத்துக்குக் காவேரி நீரும், அலங்காரத்துக்குப் புஷ்பமும் கொண்டு வருவதற்காக இந்த வாசல் ஏற்பட்டது. இவற்றைத் தவிர அர்ச்சகர் வெளியில் இருந்து நேரே வருவதற்காகக் கிழக்கு மதிலில் சிறு வாசல் இருந்தது. இவற்றுள் தோட்டத்திலிருந்து பிரவேசிப்பதற்குரிய வாசலை பொன்னன் அடைந்து, கதவின் பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். அவனுடன் வள்ளியும் போனாள். மங்கிய அகல் விளக்கின் வெளிச்சத்தில் அங்கிருந்த விக்கிரகங்களின் காட்சியைக் கண்டு இருவரும் சிறிது நேரம் பிரமித்து நின்றார்கள். நெடுங்காலமாகப் பூசை முதலியவை ஒன்றுமில்லாமலிருந்தும், அந்த தெய்வீகச் சிலைகளின் ஜீவகளை சிறிதும் குறையவில்லை.

"ஆமாம்; உன்னுடைய தைரியமெல்லாம் பாதி ராத்திரியில் தூங்குகிற பட்சிகளிடந்தான். எதிரியின் கையில் கத்தியைக் கண்டால் உடனே விழுந்தடித்து ஓடி வந்துவிடுவாய்!"

முதலில் திகைப்பு நீங்கியவனான பொன்னன், ''வள்ளி! நிற்க நேரமில்லை'' என்று சொல்லி, மகாவிஷ்ணு விக்கிரகத்தின் சமீபம் சென்று, விஷ்ணு பாதத்தின் அடியிலிருந்த அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய நீள வாட்டமான மரப் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

''சோழ குலத்தின் விலையில்லாப் பொக்கிஷம் இந்தப் பெட்டிக்குள் இருக்கிறது, வள்ளி! நல்லவேளை, இது அந்த நரசிம்மச் சக்கரவர்த்தியின் கண்ணில் படவில்லை. பட்டிருந்தால், இதற்குள் காஞ்சிக்குக் கட்டாயம் போயிருக்கும்!'' என்று சொல்லிக்கொண்டே கோயிலிலிருந்து வெளியேறினான்.

அவனைப் பின்தொடர்ந்து வெளியே வந்த வள்ளி, ''ஐயையோ! விளக்கு அணைந்துவிட்டதே!'' என்றாள். ''நல்ல வேளை! காரியம் ஆனபிறகு அணைந்தது! போனால் போகட்டும். இப்போது எப்படிப் போகலாம்? தோட்டத்தின் வழியாக இருட்டில் போவது கஷ்டம். கிழக்கு மதில் வாசல் வழியாக வேணுமானால் போய்விடலாமா? வா! கதவு திறக்கிறதா, பார்ப்போம்'' என்று சொல்லி, பொன்னன் தோட்டத்தின் கிழக்கு மதிலை நோக்கி விரைந்து சென்றான். அங்கிருந்த வாசற்படியருகில் இருவரும் போனதும், மதிலுக்கு வெளியில் பேச்சுக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். பின்வரும் சம்பாஷணை அவர்கள் காதில் லேசாக விழுந்தது.

''மாரப்ப பூபதியின் பேச்சை நம்பியா இங்கே கத்தியை உருவிக்கொண்டு நிற்கிறாய்? அரண்மனையிலாவது, திருடன் நுழையவாவது?''

''திருடன் நுழைகிறதைக் கண்ணாலே பார்த்தேன் என்று மாரப்ப பூபதி சொல்லும் போது எப்படி அதை நம்பாமலிருப்பது?''

''தப்பிப் போவதற்கு இதுதான் வழியா? வேறு வழியில்லையா?''

''திருடன் அரண்மனை வாசல் வழியாகத் துணிந்து கிளம்ப மாட்டான். இந்த வாசலுக்கு வராவிட்டால், தோட்டத்தின் வழியாகக் காவேரியில் போய் இறங்க வேண்டியதுதான். அதற்குள்ளாக... அதோ பார்.''

''என்ன அங்கே? ஏக தீவர்த்தி வெளிச்சமாகத் தெரிகிறதே!''

''மாரப்ப பூபதி ஆட்களைத் திரட்டிக் கொண்டு வருகிறார்.''

இந்தப் பேச்சைக் கேட்டதும் பொன்னனுக்கு உடம்பு வெலவெலத்துப் போய் விட்டது. ஒரு கண நேரத்தில் அவனுடைய உள்ளம் என்னவெல்லாமோ கற்பனை செய்துவிட்டது. தன்னைப் பெட்டியுடன் மாரப்ப பூபதி கைப்பிடியாகப் பிடித்துச் சக்கரவர்த்தியின் முன்னால் கொண்டுவந்து நிறுத்துவது போலவும், சக்கரவர்த்தி தன்னைப் பார்த்து, ''வெகு யோக்கியன் போல் நடித்தாயே? திருடனா நீ?'' என்று கேட்பதுபோலவும் அவனுடைய மனக் கண்முன் தோன்றியது. உடனே, வள்ளியையும் ஒரு கையினால் பற்றி இழுத்துக் கொண்டு தோட்டத்தில் புகுந்து வடதிசையை நோக்கி ஓடினான். மரங்களில் முட்டிக்கொண்டும் செடி, கொடிகளின் மேல் விழுந்தும் அவர்கள் விரைந்து சென்று கடைசியில் தோட்டத்தின் கொல்

பொன்னனும் வள்ளியும் இன்னும் விரைவாக ஓடினார்கள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் வேரில் தங்களுடைய படகு இழுத்துக் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்து அவர்களுக்குப் பரம ஆச்சரியமாய்ப் போய்விட்டது!

லைப்புற மதிற்சுவரை அடைந்தார்கள். கதவருகில் சிறிது நின்று ஏதாவது வெளியில் சப்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டார்கள். சப்தம் ஒன்றும் இல்லை. மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். அவசர மாகக் காவேரியில் இறங்கிப் பார்க்கும் போது, அங்கே அவர்கள் கட்டிவிட்டுப் போயிருந்த படகைக் காணோம்!

பொன்னனுக்கும் வள்ளிக்கும் ஒரு கணம் மூச்சே நின்றுவிட்டது! தூரத்தில் தீவர்த்திகளின் வெளிச்சம் தெரிந்தது. ஆட்கள் ஓடிவரும் ஆரவாரமும் கேட்டது. இன்னது செய்வதென்று தெரியாமல் சிறிது திகைத்து நின்ற பிறகு, ''வள்ளி, படகு ஒரு வேளை ஆற்றோடு மிதந்து போய் கிழக்கே எங்கேயாவது தங்கியிருக்கும். வா, பார்க்கலாம்'' என்றான். இருவரும் நதிக் கரையோடு கிழக்கு நோக்கி ஓடினார்கள். அரண்மனை மதிலுக்குப் பக்கத்தில் தெற்கே இருந்து வந்த சாலை வழியாகத் தீவர்த்திகளுடன் ஒரு கும்பல் வருவது தெரிந்தது. ''அதோ ஓடுகிறார்கள்!'' என்ற சப்தமும் கேட்டது.

பொன்னனும் வள்ளியும் இன்னும் விரைவாக ஓடினார்கள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் வேரில் தங்களு டைய படகு இழுத்துக் கட்டப்பட்டிருப் பதைப் பார்த்து அவர்களுக்குப் பரம ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ஆனால், ஆச்சரியப்பட்டுக் கொண்டு நிற்பதற்கு அதுவா தருணம்? அதற்குள், தீவர்த்தி களுடன் வந்த கும்பலும் காவேரிக் கரையை நெருங்கிவிட்டது. ''ஐயோ! அவர்களிடம் பெட்டியுடன் சிக்கிக் கொள்ளப் போகிறோமே!'' என்று பொன் னன் பதைபதைத்தான். அதே சமயத்தில் படகு கட்டியிருந்த மரத்துக்குப் பின்னா லிருந்து ஒரு உருவம் வெளிவந்தது! அது சிவனடியாருடைய உருவம் என்பதை அறிந்ததும் வள்ளி, ''சுவாமி! நீங்களா!'' என்று ஆச்சரியமும், மகிழ்ச்சியும் பொங்கக் கூச்சலிட்டாள்.

''உஷ்'' என்று அடக்கினார் சிவனடி யார். ''பொன்னா! இது பேசிக்கொண்டி ருக்கும் சமயமில்லை. பெட்டியை இப் படிக் கொடு! நான் காப்பாற்றி உன்னிடம் ஒப்புவிக்கிறேன். இல்லாவிட்டால், அகப் பட்டுக் கொள்வாய்!'' என்றார்.

''கொடு! கொடு!'' என்று வள்ளி பொன் னனைத் தூண்டினாள்.

பொன்னன் சிவனடியாரிடம் பெட்டி யைத் தயக்கத்துடன் தூக்கிக் கொடுத்தான்.

சிவனடியார், ''வள்ளி! நீ ஒரு சமயம் மாரப்பனிடமிருந்து என்னைத் தப்புவித் தாய். அதற்குப் பிரதியாக இன்று உங்களை அதே மாரப்பனிடமிருந்து தப்புவிக் கிறேன்!'' என்றார்.

அடுத்த நிமிஷம் அங்கே சிவனடி யாரைக் காணோம். மர நிழலில் மறைந்து மாயமாய்ப் போய்விட்டார்.

பொன்னன் படகை அவசரமாக அவிழ்த்துவிட்டு, வள்ளியை அதில் ஏற்றித் தானும் ஏறிக்கொண்டான்.

அதே சமயத்தில் மாரப்பனும் அவனு டைய ஆட்களும் காவேரிக் கரையை அடைந்து படகு இருந்த இடத்தை நோக்கி விரைந்து ஓடி வரத் தொடங்கினார்கள்.

(தொடரும்)





வாக்மேன் விபரீதம்...



* டாக்டர் துளசிதாஸ்

“**வா**க்மனைக் காதுகளில் பொருத்திக்கொண்டு செல்லும் இளைஞர்களைப் பார்த்தால் கவலையாக இருக்கிறது'' என்றுதான் தொடங்குகிறார் காது-மூக்கு-தொண்டை நிபுணரான டாக்டர் துளசிதாஸ்.

''ஒலி என்பது நம் காதுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். நம் காதுகள் மிகவும் மென்மையானவை. 30 - 40 டெசிபல் வரை காதுகளுக்குப் பாதிப்பு இல்லை. அதாவது பேசும் ஒலி, மின் விசிறியோ, குளிர்சாதனப் பெட்டியோ இயங்கும்போது உண்டாகும் ஒலி ஆகியவற்றால் காதுகளுக்குப் பாதிப்பு இல்லை.

ஆனால், வாக்மன் மூலமாக நம்மை எட்டும் ஒலி, பொதுவாக 90 டெசிபலுக்கும் அதிகம். வாக்மனைத் தொடர்ச்சியாக அதிக நேரம் (எட்டு மணி நேரம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்) வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தால் நிச்சயம் தாற்காலிக கேட்கும் திறன் பாதிப்பு ஏற்படும். இந்த நிலை சரியாக வேண்டும் என்றால், ஒரு நாளைக்காவது காதுகளுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். மாறாகத் தொடர்ந்து இதேபோல் கேட்டுக்கொண்டிருந்தால், நிரந்தரமாகவே கேட்கும் திறன் குறைந்து போகலாம்.

தவிர, வாக்மனைப் பயன்படுத்தும்போது காது முழுமையாக மூடப்படுகிறது. இதனால் காதில் சேர்ந்துள்ள மெழுகு ப்ளஸ் அழுக்கு உள்ளே சென்றுவிட வாய்ப்பு உண்டு. மேலும், இந்த வாக்மேன் காரணமாக காதில் உள்ள வியர்வைச் சுரப்பிகள் தூண்டப்பட்டு, மேலும் அதிக அளவில் மெழுகு உருவாகும்.

காதுகளைப் பராமரிக்க நாம் எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்வதில்லை. ஏதாவது பிரச்னை வரும்போதுதான் காதுகளைப் பற்றிய நினைவே நமக்கு வருகிறது'' என்றவரிடம் காதுகளைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கேட்டோம்.

''காதில் அதிகளவு அழுக்கு சேராமல் பார்த்துக்கொள்ளலாம். மாதத்துக்கு ஒரு முறை காதுகளைச் சுத்தம் செய்துகொள்வது நல்லது. அதே சமயம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வெளிப்புற காதைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன். காதின் மிகவும் உட்புறத்தைப் போட்டுக் குடையக் கூடாது.

விளக்குத் திரி அல்லது சுத்தமான மெல்லிய துவாலையின் முறுக்கிவிட்ட முனை இவற்றைக் கொண்டு காதுகளைச் சுத்தம் செய்துகொள்ளலாம். இதனால் காதுகள் பழுதடைய வாய்ப்பு இல்லை. மாறாக 'பட்ஸ்' கொண்டு சுத்தம் செய்ய வேண்டாம். இவற்றினால் பஞ்சு உட்புறம்

கவனிக்'காது'



நின்றுவிட, மெல்லிய தண்டு பாகம் மட்டும் நம் கையோடு வருகிறது. தவிர, இவை அழுக்கை மேலும் உள்ளே தள்ளவும் வாய்ப்பு அதிகம். இந்த அழுக்கு செவிப்பறையை அடைத்துக்கொண்டால் புதிய சிக்கல்கள் உருவாகும். காதுகளுக்குள் வித்தியாசமான வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. இவற்றிலிருந்து வெளியாகும் இந்த மெழுகு காதுக்கு நன்மை தருவது. இது பாக்டீரியாவுக்கு எதிராகச் செயல்படக் கூடியது. தவிர, இது எண்ணெய்ப் பசை கொண்டது என்பதால் காதுக்குள் ஓரளவு தண்ணீர் சேர்ந்தால்கூட, தலையை ஆட்டினால் அது வெளியேறி விடுகிறது.

ஆனால், மிகவும் அதிக அளவில் இந்த மெழுகு சேரும்போது, அது காதை அடைத்துக்கொள்ளலாம். அது கொடுக்கும் அழுத்தத்தால் வலி ஏற்படலாம். இந்த மெழுகு மேலும் இறுகும்போது, அந்தப் பகுதியில் உள்ள தோல் புண்ணாகிச் சீழ் கட்டிக்கொள்ளலாம். இதனால்தான் இந்த மெழுகு அதிகம் சேராமல் அவ்வப்போது நீக்கிவிடுவது நல்லது என்கிறோம்.

காதும் சரி, மூக்கும் சரி சுற்றுப்புற வெப்பத்தால் அல்லது குளிர்ச்சியால் எளிதில் பாதிக்கப்படும் உறுப்புகள். அதுவும் நடுக்காதில் உள்ள நரம்பு, குளிர்க் காற்றுப் புகும்போது மிகவும் சட்டென்று செயல்படுகிறது.

இப்போதெல்லாம் பல அலுவலகங்களில் ஏ.சி.யை மிகவும் குளிர் நிலையில் போட்டு வைக்கிறார்கள். இதனால் காதுக்கு நேரடி பாதிப்பு உண்டாகிறது. நம் நடுக்காதின் வெளிப்பகுதியும் உட்பகுதியும் ஒரேவித அழுத்தத்தில் இருந்தால்தான் அதனால் இயல்பாகச் செயல்பட முடியும். அப்போதுதான் செவிப்பறையும் சரியான அதிர்வுகளை அளித்து, எந்த ஒலியையும் நமக்குச் சரியான முறையில் உணர்த்தும்.

நமது காதுகளையும் மூக்கையும் இணைப்பது 'யூஸ்டேஷியன் குழாய்' (Eustachian Tube) என்பது. கொட்டாவி விடும்போதும், உணவை விழுங்கும்போதும், இந்த இணைப்புக் குழாய் நன்கு திறந்து மூடும். வெளிப்புறக் காற்றின் அழுத்தத்துக்குத் தகுந்த மாதிரி காற்று உள்ளிருந்து வெளியிலோ, வெளியிலிருந்தோ உள்ளோ செல்லும்.

இளைஞர்களின் நவீன வாழ்க்கை முறை காதுகளுக்குக் கடும் சோதனையை அளித்துக்கொண்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்ப அலுவலகங்களில், உள்ளே ஜில்லென்ற சூழல். போதாக்குறைக்குக் குளிர்ந்த நீரைக் குடித்து வைக்கிறார்கள். இதன் காரணமாகக் காதின் உட்குழாய் சரியாக வேலை செய்வதில்லை. எனவே, காற்றழுத்தத்தை அதனால் சமன்படுத்த முடிவதில்லை.

செல்போனால் கேட்கும் திறன் பாதிப்பு, மூளை பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கைகள் எழுந்துள்ளன. இவை உறுதி செய்யப்படவில்லை என்றாலும் இடைவெளி இல்லாமல் செல்போன் பேசுவதைக் குறைத்துக்கொள்வதே நல்லது'' என்று அக்கறையுடன் குறிப்பிடுகிறார் டாக்டர் துளசிதாஸ்.

– ஜி.எஸ்.எஸ்.



போனால்...

மின்னல் கதை



மனசாட்சி!

ஒரு வேலையைக் 'கச்சிதமாக' முடித்துக் கொடுத்ததற்காக கான்ட்ராக்டரிடம் இருந்து வந்த அந்த 'அன்பளிப்பு'ப் பணம், அரசு ஊழியன் அரவிந்தின் சட்டைப் பையில் ஒய்யாரமாய் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தது. மாலையில், குடும்பத்துடன் ஸ்டார் ஹோட்டலுக்குச் சென்று, சந்தோஷத்தைக் கொண்டாட முடிவு செய்தான் அரவிந்தன்.

இரண்டு பங்கு இருட்டுடன், ஒரு பங்கு வெளிச்சம் கலந்த அந்த ஹோட்டலில் விதவிதமான உணவு வகைகளைச் சலிக்காமல் சாப்பிட்டனர்.

தட்டில் வைக்கப்பட்ட பணத்தில், பில்லுக்குரிய பணத்தை மட்டும் எடுத்துக் கொண்ட சர்வரிடம் அரவிந்தன், ''அந்தப் பணம் உனக்குத்தான். டிப்ஸா வச்சுக்கோ'' என்றான். சர்வர், ''வேண்டாம் சார்! நான் பார்க்கும் வேலைக்கு முதலாளி சம்பளம் தர்றார். பிறகு எதுக்கு சார் இந்த அன்பளிப்புப் பணம்? அப்படி எடுத்துக்கிட்டா என் மனசாட்சி என்னை உறுத்த ஆரம்பிக்கும் சார்'' என்றான். இப்போது அரவிந்தனின் மனசாட்சி உறுத்த ஆரம்பித்தது.

- சிம்மம்

மின்னல் கதை

நடுநிசி இரண்டு மணி. மகி இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டு, ஊருக்கு வெளியே உள்ள தன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். எங்கும் ஒருவித அமைதி. நாய்கள் விடும் ஊளை வேறு. மின்சாரம் தடைபட்டுப் போயிருந்ததால் இருட்டு கூடுதலாயிருந்தது. மனதில் ஒருவித பயத்தோடே போய்க் கொண்டிருந்தான். மிக அருகில் திடீரென குழந்தை சிரிக்கும் சத்தம். கை, கால் உதறல் எடுக்க, வீட்டுக்கு ஓட்டமெடுத்தான். வீட்டுக்குப் போய் கதவைத் தட்டுவதற்கு முன், பயத்தை மறைக்க பேன்ட் பாக்கெட்டில் கையை விட்டவன், செல்ஃபோன் தட்டுப்பட, எடுத்துப் பார்த்தால், ரிங்டோனில் குழந்தையின் சிரிப்பு. இன்னும் வரவில்லையே என்பதால் அம்மாவின் அழைப்பு! 'ச்சே! இதற்கா பயந்தோம்' - சிரித்துக் கொண்டான் மகி.

- எம்.ஜான்சன்



திக்... திக்...

குருப்பெயர்ச்சி பலன்!

15.11.2007 முதல் 30.11.2008 வரை...

மேஷம்: குரு பகவான், இதுநாள் வரை 8ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்தார். இக்காலத்தில் உங்களுக்குக் கடன் தொல்லைகள், உடல் வியாதிகள், வேலைப் பளு, திருமணத் தடை, அதிகமான விரயங்கள், மனக்குழப்பங்கள் போன்றவற்றைக் கொடுத்தார். ஆனால், தற்போது 9ஆம் இடமான தனுசு ராசியில் 1 வருட காலம் சஞ்சாரம் செய்வார். 9ஆம் இடம் என்பது குருவுக்குச் சொந்த வீடாக அமைந்து பாக்கிய ஸ்தானம், உயர் கல்வி ஸ்தானம், தந்தை ஸ்தானம், தர்ம ஸ்தானமாக விளங்குவதால் இக்கால கட்டத்தில் நினைக்கும் காரியத்தில் வெற்றி வாகை சூடுவீர்கள். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். கடன் தொல்லை தீரும். உடல் ஆரோக்கியம் சீராகும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் நன்கு கைகொடுக்கும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக இருக்கும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, இடமாற்றம், நற்பெயர் உண்டாகும். கலைஞர்கள், எழுத்துத் துறையில் உள்ளவர்கள், விளையாட்டு வீரர்களுக்குப் பொற்காலமாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேற்றுவீர்கள். விவசாயத் தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல வருவாய் கிட்டும். மொத்தத்தில் குருபெயர்ச்சி உங்கள் ராசிக்குப் பொன்னான காலமாக உள்ளதால், நல்ல விஷயத்தில் ஈடுபட்டு அதைப் பயன்படுத்திக் கொண்டால் நன்மைகள் நிறைய அடையலாம்.



ரிஷபம்: ரிஷப ராசிக்காரர்களாகிய உங்களுக்கு குரு பகவான் 7ஆம் இடத்தில் இருந்து 8ஆம் இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். 8ஆம் இடம் என்று சொன்னவுடன் பயந்து விடாதீர்கள். 8ஆம் இடம் என்பது உங்களுக்கு ஆயுள் ஸ்தானமாகவும், கடன்களைத் தீர்க்கக்கூடிய ஸ்தானமாகவும் விளங்குவதால் ஒன்றும் கவலைப்படத் தேவை இல்லை. உடல்நிலை நன்றாக இருக்கும். கடன் தொல்லை

தஞ்சை பரத்வாஜ்

			செவ்
ராகு	குருபெயர்ச்சி 15.11.2007 முதல் 30.11.2008		
சந்			சனி கேது
குரு		சூரி புதன்	சுக்

நீங்கும். கல்வியில் எந்தத் தடங்களும் வர வாய்ப்பு இல்லை. வருவாய் அதிகரிக்கும். 'நல்லவன் எட்டில் இருந்திடில் கிட்டிடும் ராஜ யோகம் என்பது பழமொழி.' 8-ல் சஞ்சாரம் செய்யும்பொழுது எதிர்பாராத பலனை அளிக்கும் என்பது தெரிகிறது. சிலருக்குத் தாய்வழி மூலம் சொத்துகள் சேரும். வழக்கு வெற்றி அளிக்கும். வராத நிலுவைகள் வந்து சேரும். சுப விரயம் ஏற்படும். தடை விலகித் திருமணம் நடக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். பொருளாதாரச் சிரமம் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் இருந்து வந்த சிக்கல் தீரும். சிலருக்கு உத்தியோகத்தில் மாற்றம் வரும். சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும். சிலருக்குப் பழைய வீட்டை விற்றுப் புதிய வீடு வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்பாராத பயணங்கள்

விளக்கு ஏற்றி குரு காயத்ரியை 108 தடவை வாசித்து வந்தால், நற்பலன் அதிகமாகும்.


மிதுனம்: குரு பகவான், இதுநாள் வரை 6ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்தவர் தற்பொழுது 7ஆம் இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். 7ஆம் இடம் என்பது விவாஹ ஸ்தானம் ஆகும். ஆதலால் தடைபட்டுக் கொண்டே வந்த திருமணம் கைகூடும். மனைவி வழியில் ஆதாயத்தை உண்டு பண்ணுவார். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். கடன் சுமைகள் தீரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். குழந்தைகள் பற்றிய கவலை தீரும். புதிய தொழில் முயற்சி கை கொடுக்கும். தொழில் மூலம் ஆதாயம் கிட்டும். மனத்தில் உற்சாகம் ஏற்படும். உடன் பிறந்த சகோதர, சகோதரி வழியில் நற்பலன் கிட்டும். பாட்டன், பாட்டி வழியில் சொத்துகள் வந்து சேரும். புதிய வீடு / மனை வாங்க நேரிடும். கல்வியில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். உயர் கல்விக்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். குடும்பப் பெண்கள் நற்பெயர் பெறுவார்கள். சிலருக்குப் பட்டம், பதவி தேடி வரும். கலைஞர்கள் புகழின் உச்சிக்குச் செல்வார்கள். எழுத்தாளர்களுக்கு நல்ல பெயர் உண்டாகும். விளையாட்டுத் துறை

ஏற்படும். தாயின் உடல்நிலை சீராகும். கலைஞர்கள், எழுத்துத் துறை வல்லுனர்கள், விளையாட்டு வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி லட்சிய சாதனைகளை ஏற்படுத்துவார்கள். விவசாயத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கு இதுநாள் வரை இருந்து வந்த தொல்லைகள் தீர்ந்து மனமகிழ்ச்சி ஏற்படும். தொழிலில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். வியாழக்கிழமை தோறும் குருபகவானுக்குப் பூ வைத்து

யில் உள்ளவர்கள் ஏற்றம் அடைவார்கள். தொழில் துறையில் அதிக லாபம் கிட்டும். விவசாயத் தொழில் செய்பவர்கள் புதிய சாதனை படைப்பார்கள். மின்னணு தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில்கள் செய்பவர்கள் கடந்த வருடத்தைவிட இந்த வருடம் அதிகமான லாபத்தை அடைய நேரிடும். குரு/சனி பகவானை வணங்கி வந்தால், தொழில் துறையில் எந்தச் சிக்கலும் வராது. கணவன் / மனைவி உறவு நன்றாக இருக்கும்.

பிரிந்து வாழ்ந்து வந்த குடும்பம் ஒன்று சேரும். தெய்வ சங்கல்பத்தில் எல்லாம் இனிதாக நடக்கும்.

கடகம்: குரு பகவான் இதுநாள் வரை 5ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்தவர், தற்பொழுது 6ஆம் இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். ஆறாமிடம் என்பது சத்ரு ஸ்தானம், ரோக ஸ்தானம், ருன ஸ்தானம் ஆகும். ஆறாம் இடம் குருவுக்குச் சொந்த வீடாக இருப்பதால், கூடிய மட்டும் கெடு பலன்களை அளிக்க வாய்ப்பில்லை. ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்னைகள், தெய்வ சங்கல்பத்தால் நிவர்த்தி ஆகும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும்; ஆனால் பாதிப்புகள் வராது. பழைய கடனை பைசல் செய்ய புதிய கடன் வாங்குவீர்கள். அதற்குத் தகுந்தாற்போல் கடன் கிடைக்கும். கூடிய மட்டும் எதிலும் அகலக் கால் வைக்காமல் பார்த்து அனுசரித்து நடந்துகொள்வது நற்பலனை அளிக்கும். நீண்ட நாள் முடிவு பெறாமல் இருந்து வந்த வழக்குகள் முடிவுக்கு வரும். யாரிடமும் அதிகமாக பேச்சு வைத்துக் கொள்ளக் கூடாது. வாகனங்களில் செல்லும்போது போதிய கவனம் செலுத்தவும். எங்கு சென்றாலும் தம் உடமைகள் மீது கண்ணும் கருத்துமாக இருக்கவும். முகம் தெரியாத நபரிடம் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படி வைத்துக்கொண்டால் பல சிக்கல்கள் ஏற்பட்டு பாவம் ஓர் இடம், பழி ஓர் இடம் என்ற நிலை வந்துவிடும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார்த்து வைத்துக்கொள்வது நல்லது. இல்லை என்றால் மனஸ்தாபம் ஏற்பட்டுப் பிரிய நேரிடும். குரு பார்வை விரய ஸ்தானத்தைப் பார்ப்பதால் திருமணக் காரியம் கைகூடும். குடும்ப வாழ்வில் கணவன் - மனைவி அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறையுடன் படிக்கவும். உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருந்தால் வயிறு உபாதைகள் வர வாய்ப்பு இருக்காது. கலைஞர்கள் எதிலும் போராடி வெற்றி வாகை சூடும்படி இருக்கும். எழுத்துத் துறையில் உள்ளவர்கள் எதிலும் உஷாராகச் செயல்படவும். விளையாட்டு வீரர்கள் விளையாடும்போது எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். குடும்பப் பெண்கள் கணவர், உறவினர்களுடன் அனுசரணையுடன் நடந்துகொள்வது சாலச் சிறந்தது. சிலருக்கு வீடு மாற்றம், தொழில் மாற்றம் ஏற்படலாம். வேலைப் பளு அதிகரிக்கும். சிலர் மனைவி, மக்களை விட்டு விலகிச் செல்வார்கள். வியாழக்கிழமை தோறும் குரு பகவானுக்கு அர்ச்சனை



ருபெயர்ச்சி பலன்கள் • குருபெயர்ச்சி பலன்கள் • குருபெயர்ச்சி பலன்கள் •

செய்து தீபம் ஏற்றி குரு காயத்ரியை 108 தடவை வாசித்து வந்தால், மேற்கண்ட கஷ்டங்கள் விலகி நற்பலனை அடையலாம். ராகு, கேது கிரகங்களுக்கு வெள்ளி, செவ்வாய்க் கிழமைதோறும் தீபம் ஏற்றிப் பூ வைத்து வழிபடவும். உடல் ஆரோக்கியம் பெறும். கடன் தொல்லை தீரும். மன அமைதி கிட்டும்.

(மற்ற ராசிகள்... அடுத்த வாரம்)

இயல்பாய் உதிர்ந்த

❖ திருப்பூர் கிருஷ்ணன் ❖

கணையாழிக் கூட்டத்துக்கு லா.ச.ரா.வை அழைக்க வேண்டும் என்றார் கி.கஸ்தூரிரங்கன். அழைத்தேன். 'கூட்டம் முடிந்த பின் திரும்ப என்னை மின்சார ரயிலில் நீயேதான் அம்பத்தூர் வரை கொண்டுவிட வேண்டும்' என்று நிபந்தனை விதித்தார். என்ன ஆனந்தமான நிபந்தனை! அவர் அம்பத்தூரில் வசித்த காலம். ரசிகர்களிடம் பேசுவதில் அவருக்குப் பரம சுகம். அவர் பேச்சைக் கேட்பது எனக்குத் தேன் குடிப்பதுபோல். கூலியில்லாமல் கரும்பு தின்னக் கசக்குமா? 'பாக்கியம்' என்றேன். என் கன்னத்தை வருடிச் சிரித்தார்.



✱ லா.ச.ரா.

அவர் தன் அன்பை வெளிப்படுத்தும் முறைகள் அலாதியானவை. வெறும் சொல்லாய் மட்டும் வராது அது. அவரது அன்பின் கனத்தைச் சொல் தாங்காது. ஒரு கண் சிமிட்டல், அழுத்தமாய் ஒரு கைப் பிடிப்பு என அந்த அன்பின் தித்திப்பை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சில் ஜில்!

கூட்டம் முடிந்த பின் அவரோடு மின் வண்டியில் நான் செய்த பயணம் மறக்க முடியாதது. அம்பாள் உபாசகர். உபாசனைக்குப் பயன்படுத்தியது சொல் மலர்களைத்தான். அன்று ரயில் பயணத்தின் போது கண்களில் ஒளி பொங்கப் பரவசத்தோடு தெய்வீகமயமாய்ப் பேசினார். 'என் கையைப் பார், மயிர்க் கூச்செறிகிறது' என்று கையை நீட்டிக் காட்டினார். அவர் கை என்ன, உண்மையில் அந்த ரயில் பெட்டியே ஆன்மிக அதிர்வலைகளால் தடதடத்துக் கொண்டிருந்ததாய்த் தோன்றியது எனக்கு. அம்பத்தூரில் இறங்கியதும் என் கையைப் பிடித்துக் கொண்டு அவர் இருட்டில் நடந்தார். ஆனால், அவர் கையைப் பிடித்துக் கொண்டு பத்திரமாக வெளிச்சத்தில் நடப்பதுபோல் உணர்ந்தேன் நான்.

லா.ச.ரா.வை நான் கடைசியாகப் பார்த்தது வானதி திருநாவுக்கரசு பேரன் சரவணன் கல்யாணத்தில். பழுத்த முதுமையும் ஆன்மிகமும் சேர்ந்து அவர் முகத்தில் ஒளி கூடியிருந்தது. எல்லோரையும் தோற்றத்தாலேயே வசீகரிக்கும் அழகிய கிழவராக இருந்தார். மணமக்கள் மேடையை விட்டு இறங்கிக் கீழே வந்து அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தபோது, சபையே மானசீகமாக அவரை நமஸ்கரித்துக் கொண்டிருந்தது.

அவருக்குத் தீவிர ரசிகர்கள் பலர் இருந்தார்கள். ஒருவர் பீஷ்மன் என்கிற நா.சி.

அஞ்சலி

பழம்!



வரதராஜன். லா.ச.ரா.வின் 'பிராயச்சித்தம்' குறுநாவல் வெளியீட்டு விழா, திருவல்லிக்கேணியில் ஐந்திணை பதிப்பக உரிமையாளர் குழ.கதிரேசன் மூலம் நடந்தது. முல்லை முத்தையா, பீஷ்மன் இவர்களோடு நானும் லா.ச.ரா. இலக்கியம் குறித்துப் பேசினேன். 'லா.ச.ரா. இலக்கியக் கடலில் இதுவரை எல்லோரும் சிப்பிதான் பொறுக்குகிறார்கள். இன்னும் எத்தனையோ முத்துகள் உண்டு' என்று பேசினார் பீஷ்மன். 'அது நிஜமா? ஜாஸ்தி சொல்கிறானோ?' என்றார் லா.ச.ரா. என்னிடம். 'குறைத்துச் சொல்கிறார்!' என்றேன் நான். அவர் யோசனையோடு 'நாம் எழுதிய பிறகு அது நமக்கு அந்நியமாகிவிடுகிறது' என்று சொல்லிக்கொண்டார். அந்தப் பக்குவம் அவரிடம் எப்போதும் இருந்தது. கர்வம் என்பது அறவே கிடையாது.

எழுத்தாளர்களிடம் மட்டுமல்ல, எல்லோரிடமும் இயல்பாகப் பேசி மதிப்பவர். ஒருமுறை என் வீட்டுக்கு அவர் வந்தபோது, என் அம்மா ஒரு ரசம் வைத்திருந்தார். அதைச் சாப்பிட்டுவிட்டு 'எந்தக் கை இந்த ரசத்தைத் தயாரித்தது' என்று கேட்டு என் அம்மாவைப் பாராட்டினார். அந்த ரசத்துக்கான பக்குவத்தையும் கேட்டறிந்தார். என் அம்மா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் அம்மாவுக்கு லா.ச.ரா. இறந்த துக்கம், ஒரு சகோதரனை இழந்த துக்கம். இலக்கிய உலகின் முற்றிலும் தனித்தன்மை நிறைந்த ஓர் உயர்தர ஆன்மிகப் பழம் மிக இயல்பாய் உதிர்ந்துவிட்டது. ●

என் அம்மா காலமானபோது, லா.ச.ரா. எனக்கு எழுதிய ஆறுதல் கடிதத்தின் ஜீவிய வரிகளை அவருக்கு அஞ்சலியாகவே சமர்ப்பிக்கிறேன்...

– இளசை அருணா, தூத்துக்குடி

தென்காசி
26.8.1973

தாயின் சன்னதியில்
வேஷங்களைக் களைவோமாக...
உங்கள் தாயை நான் கண்டதில்லை
ஆனால், அம்மாவைத்
தனித்தனியாகக்
காணத் தேவையில்லை.
அம்மா காலமாவதில்லை.
அவளால்தான் காலத்தையும்
கடக்க முடியும்.
தன் சேய் காப்பில்
அரக்க பலமும் மூல மூர்க்கமும்
தெய்வ கருணையும்
ஒருங்கே அவளிடம்தான்
சேரப்பெறும்.
துளியாய் உன் வயிறில் துயின்று
தளிராய் உன் தோளில் துயின்று
உயிரை உன் மார்பில் பருகி
நீயே என் குருவாய்
உன் மடியில் என் முதல்
சொல்லைப் பயின்று
நான் கனிறாகி
எங்கெங்கு திரிந்தாலும்
என்னென்ன புரிந்தாலும்
உன் அடைகாப்புள்தான்
இயங்குகிறேன்.
என்ன உயரப் பறந்தாலும்
அதோ, என் மேல் வெம்மை தடுப்பில்
உன் சிறகு நிழல் தட்டுகிறது.
உன் நிழல்தான் என் மதில்...
அம்மா! உன் எல்லைதான் என்ன?
நீயே அறியாய்...
அதுதான் உன் மஹிமை.
உங்கள் தாய்க்கு என் அஞ்சலி.

– லா.ச.ராமாமிருதம்

வீராப்பு!

அழுக்குத் துணிகளை பக்கெட்டிலிருந்த தண்ணீரில் முக்கி, நனைத்து வைத்துவிட்டு நிமிர்ந்தாள் கஸ்தூரி. அவள் பார்வை, தெருவின் கடைக்கோடி வீட்டுப் பக்கம் ஓடியது. மரங்களின் இடைவெளி வழியாகக் கொஞ்சம்தான் தெரிந்தது அந்த வீடு. கல்யாண வீடு என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

'இந்த சிங்காரம் அண்ணனுக்கு ஏன் தான் புத்தி இப்படி வேலை செய்யுமோ...? நேத்து வரை தாயா புள்ளயா பழகிட்டு, இன்னைக்கு நல்ல நாளும் அதுவுமா அவங்கவங்க முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போறத பார்க்க நல்லாவா இருக்கு. 'மன்னிச்சுடுங்க'ன்னு ஒரு வார்த்தை கேட்டால் விவகாரம் தீர்ந்து போகுமில்ல...' என்று நினைத்துக்கொண்டாள்.

''என்ன கஸ்தூரி... கல்யாணத்துக்குப் போறியா...'' என்றாள் பக்கத்து வீட்டு தனம்.

''நீங்க போனா நான் போன மாதிரிதான். உங்களுக்குத்தான் ரொம்ப சொந்தம்...''-என்றாள் கஸ்தூரி.

''ஊர் எப்படியோ அப்படித்தான் நாமளும் போவணும். சொந்தம்னு சொல்லிக்கிட்டுப் போனால் நாளைக்கு நமக்கும் அந்தக் கதிதானே...''

''ஆமாம். இந்தச் சங்கடத்துல மாட்ட வேணாம்னு எங்க வூட்டுக்காரரு வெளியூர் போய்ட்டாரு. கல்யாணம் எப்படித்தான் நடக்குமோ...''

''பொண்ணே இல்லன்னாலும் கல்யாணத்தைப் பண்ணுவாரும்மா அந்த சிங்காரம்...'' கிண்டலாகச் சொல்லிச் சிரித்துவிட்டுப் போனாள் தனம்.

சிங்காரம் தடாலடிப் பேர்வழி.

ஊர் ஒரு போக்காய் இருந்தால், அவர் எதிர்போக்காயிருப்பார்.

பெரியவர். பொதுக் காரியங்களில் முன் நிற்க ஒருவர் வேண்டுமே என்பதற்காகப் பொறுத்துப் போயினர்.

அம்மன் திருவிழாவில்தான் பிரச்னை வெடித்தது.

சுற்று வட்டம் ஏழு ஊருக்குப் பொதுவான விழா அது. பத்து நாட்கள் பாரதம் படிப்பார்கள். தெருக்கூத்து, தீ மிதி, அம்மன் ஊர்வலம் என விமர்சையாக நடக்கும்.

கமிட்டிகாரர்கள் செலவைக் கணக்கிட்டு ஊருக்கு இவ்வளவு வசூலித்துத் தர வேண்டும் என்று முன்கூட்டியே சொல்லிவிடுவார்கள்.

ஆறாயிரத்து சொச்சம் ரூபாய் வசூலாயிற்று. சிறிய ஊர் என்பதால் அதிகபட்ச வசூல் தொகையே அவ்வளவுதான். என்றாலும், மற்ற ஊர்களை முந்திக்கொண்டு பணத்தைக் கொடுத்துவிடுவது வழக்கமாக இருந்தது.

இந்தமுறை ''நான் கொடுத்துடறேன்'' என்று வசூல் தொகையை வாங்கிக் கொண்டார் சிங்காரம்.

உரிய இடத்தில் பணத்தை ஒப்படைத்திருப்பார் என்ற நம்பிக்கையில் திருவிழா வேலைகளில் மூழ்கினர்.


ஐந்தாம் நாள் பிரச்னை உருவாயிற்று.

கோயிலுக்குப் போனவர்களிடம் கமிட்டிக்காரர்கள்,

''உங்க ஊர்லருந்து பணம் வந்து சேரலையே'' என்று கேட்க, திரும்பி வந்தவர்கள் சிங்காரம் வீட்டை முற்றுகையிட்டு, ''ஊரையே தப்பாப் பேசறாங்க. பணத்தைக்

கொடுங்க'' என்றார்கள்.

''எவன்டா தப்பாப் பேசறவன்? எந்த வருஷம் கொடுக்காம விட்டோம்? திருவிழாவே முடிஞ்சு போச்சா, எல்லா ஊர்லயும் வசூல் பண்ணிக் கிழிச்சுட்டாங்களா...'' என்று தோள் தட்டினார்.



படுதலம் சுகுமாரன்

''வம்பு எதுக்கு. வசூல் பணத்தை மடியில் கட்டி வெச்சிக்கிட்டு மல்லுக்கு நிக்கணுமா...? செய்யறதைக் குறையில்லாம செஞ்சி டணுமில்ல...'' என்று ஒருவர் சொல்லச் சொல்ல...

''இந்தாங்கடா...'' என்று பணத்தைத் தூக்கியடித்தார்.

''சிங்காரம்... மரியாதையா அதை நீயே எடுத்துட்டுப் போய் கமிட்டில ஒப் படைச்சுடு...'' என்றதற்கு, சிங்காரம் தகாத வார்த்தைகளைப் போட்டுப் பேசி, ரகளை பண்ணினார்.

அவர் பேச்சு சகலரையும் புண்படுத்தி யது.

''மன்னிப்புக் கேட்கணும். இல் லன்னா...''

''மன்னிப்பா... ஒரு மண்ணும் கேட்க மாட்டேன்... என்ன, ஒதுக்கி வெப்பீங் களா... நான் ஊரையே ஒதுக்கி வைக் கறேன். போங்க...'' என்று பேசி, வீட்டுக் குள் போய் கதவை மூடிக்கொண்டார்.

அன்று முதல் யாரும் அவரோடு தொடர்பு வைத்துக்கொள்வதில்லை.

ஆகிவிட்டது ஆறு மாதங்களுக்கு மேல். திடுதிப்பென்று பையனுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணி, இரண்டு நாள் முன்பு பத்திரிகை கொடுத்தார்.


''திருத்தணில கல்யாணம், போக வர பஸ் வசதி பண்றேன். வந்துருங்க...'' என்று சொல்ல,

''நாங்கள்லாம் பஸ்ஸை முன்னபின்ன பார்த்ததே இல்ல பாரு. பஸ்ஸைப் பார்த்துட்டா, நீ செஞ்சதையெல்லாம் மறந்துட்டு ஓடியாந்துருவம்னு நினைப்பா! உன் வீட்டுக் கல்யாணச் சோறுக்கு ஊரே ஏங்கிக் கிட்டிருக்க மாதிரிதான் வீராப்பு பேசற...'' என்று கஸ்தூரியின் புருஷன் செல்லத்துரை பேசினான்.

''வர்லேன்னா சோறு மிச்சம்...'' என்றார் சிங்காரம்.

கல்யாணத்தைப் புறக்கணிக்க ஏக மனதாகத் தீர்மானித்திருந்தார்கள்.

போக ஆசையிருந்தாலும் ஊர்ப் பகை வந்து விடுமே என கஸ்தூரி அந்த எண்ணத்தைக் கைவிட்டிருந்தாள்.



“இப்படிப் பேசினா பெரிய மனசு பண்ணி வர்ற ஒருத்தர் ரெண்டு பேரு கூட எப்படி வருவாங்க?”

துணிகளைத் துவைத்து, ஒரு தூக்கம் போட்டுவிட்டு, மூணு மணிவாக்கில் மேய்ச்சலுக்குப் பசுவை ஓட்டிக்கொண்டு கஸ்தூரி வீட்டைவிட்டுக் கிளம்பும்போது, 'புர்புர்...' என்ற உறுமலுடன் புது பஸ் ஒன்று ஊருக்குள் நுழைந்து, சிங்காரம் வீட்டு வாசலை அடைத்துக்கொண்டு நின்றது.

பஸ்ஸைக் கடந்து போகும்போது, சிங்காரம் டிரைவரிடம்,

''அரைமணி நேரத்துல கிளம்பிடலாம். யாருக்காகவும் காத்திருக்கணும்னு இல்ல...'' என்று சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

'இப்படிப் பேசினா பெரிய மனசு பண்ணி வர்ற ஒருத்தர் ரெண்டு பேரு கூட எப்படி வருவாங்க? அந்த அளவுக்கு ரோஷம் கெட்டவங்களா ஜனங்க...' என்று நினைத்துக்கொண்டு போனாள்!

பசுவைத் தென்னந் தோப்பில் மேயவிட்டு விட்டு, அப்படியே பாளை, மட்டை, குச்சிகள் என்று அடுப்புக்குச் சேகரித்துக் கொண்டு, பொழுதடையும் நேரம் வீட்டுக்குத் திரும்பினால், பெருமாள் வீட்டு வாசலில் நின்றிருந்த பஸ்ஸைக் காணோம். தெருவே வெறிச்சோடியிருந்தது. திடீரென்று ஊரே காலியாகிவிட்டது போலிருந்தது. எதிர்ப்பட்ட ஒரு கிழவி,

''சிங்காரம் பாவி எப்பவுமே இப்படித்தான்... ஊர்ல எவ்ளோ பேர் இருக்காங்கன்னு கணக்குப் பண்ணி அதுக்கேத்தாப்ல ரெண்டு மூணு பஸ்ஸு வைக்காம, மூக்குப்பொடி டப்பா மாதிரி ஒரே ஒரு பஸ்ஸு கொண்டாந்தா எவ்வளவு ஜனம்தான் ஏர்றது? வேணும்னு செய்றானா, வேணாம்னு செய்யறானா... வரட்டும் கேட்கறேன்...'' என்று அங்கலாய்த்துக் கொண்டு போனதைப் பார்த்துத் திகைத்து நின்றாள், கஸ்தூரி. ●

கெத்தாப்புக் கிடாய்!

செவக்காட்டுச் சித்திரங்கள்-2

வே. இராமசாமி




ஆயர் கானேந்தலில் ஓர் அதிகப் பிடிச்ச செம்மறியாட்டங் கிடாய் இருந்தது. நல்லா இரும்பை முறுக்கிவிட்ட மாதிரி கொம்பும் புளிச்சிக் கம்பை பாடம் பண்ணி, கயிறு திரிச்சா வெள்ளை வெளேர்னு இருக்குமே அதாட்டம் ரோமமும் அதுக்கு இருந்தன. நாலு காலுஞ் சும்மா மஞ்சணத்தி மரக்கம்புல செஞ்ச மம்பட்டிக் கணை மாதிரி வலுவாய் அமைஞ்சிருந்தன. அது இருந்த கெடைக் காரனும் அப்பிராணி. இதனால, ஜில்லாவில எங்கிட்ட எவனும் மோத முடியாதுங் கிற கெத்தாப்புல அது திரிஞ்சது.

முட்டுக் கிடாய்க்கு விட்டாலும் அதை எந்தக் கிடாவும் ஜெயிக்க முடியாது. முட்டுக்கு விடுறது எப்படின்னா, மொதல்ல ரெண்டு கிடாய்களை நைசா கெடைல இருந்து வெளில கூட்டினு வரணும். இது ஒண்ணும் பெரிசில்ல. கிடைத் தட்டிய இலேசாத் திறந்துவிட்டாப் போதும். வெளில ஓடியாறது கிடாயாத்தான் இருக்கும். இப்படியே இன்னொரு கிடாயையும்

ரெடி பண்ணனும். இது வேற கெடையில உள்ளதுன்னா சண்டை பாக்க நல்லாயிருக்கும்.

கழுத்தை - ரோமத்தை இலேசாத் தடவிக்கிட்டே ரெண்டுபேரு எதிர்த் திசையில், கிடாய்களைக் கிட்ட கொண்டு வந்து கொம்புகளை உரசவிட்டு விலகிடணும். அம்புட்டுத்தான், ரெண்டும் பின்னால போய்ட்டுப் போய்ட்டு வந்து முட்டுப் போடும் பாருங்க, சட்டேர் சட்டேர்னு சத்தம் அரை மைல் தூரம் கேக்கும். இடையில் ஆடு மாட்டுனாலும் அவுட்; ஆளு



மாட்டுனாலும் அவுட். ரெண்டையும் காயாக்கம்புட்டு ஹோய் ஹோய்னு அடிச்சு வெலக்குனாத்தான் விலகி ஓடும்ங்க. அதுலயும் கெத்துப்பிடிச்ச கிடாய் கோபம் தணியாது. ரொம்ப நேரம் காலைப் பரசிக்கிட்டே இருக்கும்.

எப்பப் பாத்தாலும் பவுண்டுத் தொழுவில அடைபடுறதும் இந்தக் கெத்தாப்புச் சண்டியருதான். சும்மா கெடக்காது, கெடைத்தட்டிய ஒரே தவ்வாத் தவ்வி, ராத்திரியோட ராத்திரியா மகசூல்ல போய் வாய் வெச்சுரும். மேய்ச்சலுக்குப் போகும் போதும் சும்மா இருக்காது. அது பாட்டுக்கு வேற மந்தை ஆடுகளை விரட்டிக்கிட்டே போயிரும். ஆடு மாடுக சம்சாரிக மகசூல்ல அழும்பு பண்ணிருச்சின்னா அவங்க அதை ஓட்டியாந்து பவுண்டுத் தொழுவில பூட்டிருவாங்க. ஆடு-மாட்டுக்காரங்க கவந்து அழிவுக்குத் தகுந்த அபராதம் கட்டிட்டுப் பத்திட்டுப் போவாங்க.

இது இப்படி இருக்கையிலே, கெத்தாப்பு பல அழிச்சாட்டியங்களைச் செஞ்சது. மைப்பாறைக்காரி வீட்டுக்குள்ள போயி மண் பானைகளை உருட்டிருக்கு. அதுல ஒரு வெத்து மண்பானை ஓட்டை விழுந்த கொம்பில் மாட்டிக்கிடுச்சு. மண்டைய எப்படி உதறினாலும் அது விழவே மாட்டங்கு. பெறவு, ஏழெட்டு நாளா கொம்புல கெடந்து கொஞ்சம், கொஞ்சமா ஒடஞ்சு விழுந்தது. மேச்சலுக்கும் அதோடதான் போய்ட்டு வந்தது.

ஒரு நா வெள்ளிமலை சின்னையா கெடைக்குள்ள புகுந்து, முட்டுப் போட்டு அவரு கிடாயோட வயித்தக் குத்திக் கிழிச்சிருச்சு. ஆடுகள்லாம் தட்டியைப் பிச்சுப்போட்டுப் போயி மோகன் நாய்க்கரு தக்காளில விழுந்திருச்சு. அவரு எல்லாத்தியும் பத்திட்டுப் போயி பவுண்டுத் தொழுவில் அடைச்சிட்டாரு. நட்டம் அதிகம்ங்கிறதால வெள்ளிமலை சின்னையா அபராதம் அதிகமாகக் கெட்ட வேண்டியிருந்தது. அவரு அப்பிராணி இடையன்ட்டே போயி ''ஏலே ஒங் கெடாயைப் போட்ரு. அழிமானம் அதிகமாகுது. எதுனாச்சும் பண்ணி அதைக் காலி பண்ணு. இல்லைன்னா அபராதத் துட்ட நீ எனக்குத் தந்துரு. நாம் பாட்டுக்கு போயிர்றேன். முடியாதுன்னா வா மல்லுக்கட்டுவோம். நீயா நானானு பாத்திருவோம்'' அப்பிடிங்காரு. அப்பிராணியும் பயந்து ரூபாயைக் குடுத்திட்டான். நட்டத்துக்கு மேல நட்டம். நம்மாலே தாங்க முடியாது. இதுக்கு ஒரு வழி பண்ணிடணும்னு முடிவு பண்ணினான். ஆனா கத்து

வட்டாரத்தில எவனும் இதை வாங்க மாட்டான். பேசாம உச்சி உடையர் சாமிக்கு வெட்டுக்கு நேந்துவிட்டுட்டான்.

திருநாளு வந்தது. அன்னிக்குத்தான் ஆட்டுத் தலைகளைவிட ஆள் தலை அதிகம் தட்டுப்படும். மத்த நாட்கள்லே ஆட்டுத் தலையே அதிகம். இப்பேர்பட்ட ஊர்ல அக்குறும்பு பண்ணிட்டு வந்த கிடாயை வெட்டப் போறாங்கன்னதும் சீமை திரண்டிருச்சு.

செவ்வாய்க்கிழமை முழுசும் உச்சி உடையாருக்கு எல்லாச் சடங்கும் நடந்து, புதன்கிழமை காலைல கிடாய் வெட்டு. சனம் ரவுண்டாச் சுத்தி நிக்கி. மஞ்சத் தண்ணி ஊத்திக் குளிப்பாட்டி, நெத்தில குங்குமத்தை வெச்சு, கொம்புல மாலையச் சுத்திவிட்டு வரிசையா நிக்காங்க. கொட்டுக்காரங்க இன்னிக்கு அடிச்சாத்தான் அடுத்த வட்டம் கோயிலுக்குக் கூப்பிடு வாங்கன்னு 'சட்டேஞ் சணக்க சட்டேஞ் சணக்கு'ன்னு வெளுக்காங்க.

மொத்தம் பதினெட்டுக் கிடாய். ஏழு வெள்ளாட்டங் கிடாய். மீதி செம்மறி யாட்டங் கிடாய். கெத்தாப்புக் கிடாய் முதல்ல நிக்கி. ''இன்னிக்குப் பாருங்கல உங்கள''ன்னு கொஞ்சமாச்சும் பயமில்லாமே கெத்தா நிக்கப்பா.

கிடாய் வெட்டுற தவசி, தார்ப்பாய்ச்சிக் கட்டி அருவாளோட வந்தாரு. கெத்தாப்புக் கிடாயோட பிடரி ரோமத்துல மஞ்சத் தண்ணி மஞ்சப் பனித்துளிகள் மாதிரி இருக்கு. கிடாய்களை ஒவ்வொண்ணா வெட்டும்போது ஓடாம இருக்க, அதுக பின்னத்தங்காலை பிடிக்க ஒருத்தர் இருப்பார். அவர் ஊருல உள்ள வங்களுக்கு முடிவெட்றவர். நாசுவா அவர் பின்னத்தங்காலைப் பிடிச்சுக்கிடுவார். முன்னாடி ஒருத்தன் வேப்பங் குழையைக் காட்டிக் கிடாய்களை வேடிக்கை காட்டு வான். முடிவெட்றவர் சாட்டை அடிச்சிட்டே சாமி ஆடுவார். சேவல்களைத் தொண்டைக் கடிச்சு ரெத்தங் குடிச்சிட்டு எறிஞ்சிடுவார்.

மேளக்காரங்க கொட்டியை நிப்பாட்டிட்டாங்க. இது முடிஞ்சதும் முளைப்பாரி எடுக்கிறதுக்கு அடிப்பாங்க. கோயிலைச் சுத்தி ஒரு சத்தமில்ல. எல்லார் முழியும் கெத்தாப்புக் கிடாய் மேல. வேப்பமரத்து இலை உதிர்ந்தாக்கூடச் சத்தம் கேக்கிற அமைதி.

முடிவெட்றவர் கெத்தாப்புக் கிடாயோட பின்னத்தங்காலை பிடிச்சுக்கிட்டார். 'ஹாய் ஹாய்'னு முன்னாலே குழை காட்டுறாரு இன்னொரு சாமியாடி. தவசி அருவாளை ஓங்கினார். கெத்தாப்பு நிமிந்து பாக்குது. கூட்டம் லுலுலுல்லோ லுலுலுல்லோன்னு குலவை போடுது. வெட்டினாரய்யா ஒட்ரே வெட்டு. முடிவெட்றவர் தலை துண்டாப் போச்சு.. பின்னத்தங்காலை பிடிச்சிட்டிருந்தாரா? கெத்தாப்புக் கிடாய் ஒரே தாவில் காலை இழுத்திட்டு முன்னாடி தவ்விருச்சு. இவரும் கரெக்டா அருவாளுக்குள்ள வந்து விழுந்திட்டார். கைரெண்டும் தரைல நீச்சலடிக்க மாதிரி கிடந்தது அவரின் முண்டம். அம்புட்டுத்தான், திருநாளும் நின்றது. கெத்தாப்புக் கிடாய் புண்ணியத்துல மத்த கிடாய்களும் தப்பிச்சுக்கிட்டன.

(மண் வாசம் வீசும்)



''நான் தினமும் ஒன்பது மணிக்குத் தூங்கி அஞ்சு மணிக்கு டான்னு முழிச்சுக்கிடுவேன்.''

''உங்களுக்கு ஒன்பது மணிக்கே ஆபீஸ் ஆரம்பமாயிடுதா சார்...?''

– சீர்காழி வி. ரேவதி



குனிந்து தலை ~~நிமிர்ந்து~~ நிற்கும் தமிழர்கள்!

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அண்மையில் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. 'உணவுடன் கூடிய உறைவிடம்' என்று நாமகரணம் சூட்டப்பட்டுள்ள அத்திட்டத்தை, இல்லத்தரசிகளுக்குப் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கப் போகும் புதுமையான திட்டம் என்றும் தண்டோரா போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுக்கு வந்து செல்லும் வெளிநாட்டுக்காரர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே இருக்கிறது. வரும் 2010-ஆம் ஆண்டுக்குள் சென்னை நகரில் மட்டும் வெளிநாட்டினர் தங்குவதற்கு, இன்னும் 4,000 விடுதியறைகள் தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டின் பிற நகரங்களிலும் இதே நிலைதான். இந்த நிலையைக் களைவதற்காகவும், வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே இருக்கும் தமிழ்நாட்டு இல்லத்தரசிகள், கூடுதலாக வருமானம் பெறுவதற்கு வழிகாட்டும் விதமாகவும், இப்படியொரு புதுமையான திட்டத்தை நடைமுறைப்படுத்த இருப்பதாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறை அறிவித்திருக்கிறது. இதன்படி வீட்டில் பயன்படுத்தப்படாமல் காலியாகக் கிடக்கும் ஓரிரு அறைகளுக்கு ஒப்பனை செய்து, அது குறித்த தகவல்களைச் சுற்றுலாத் துறைக்குத் தெரிவித்துப் பதிவு செய்துகொண்டால், வெளிநாட்டு ஆட்களைப் பிடித்துத் தருகிற வேலையை தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை கவனித்துக்கொள்ளும். உங்கள் வீட்டில் தங்குகிற வெளிநாட்டுக்காரர்களிடம் கட்டணத் தொகையை நீங்களே முடிவுசெய்து வசூல் செய்துகொள்ளலாம்.

நமது நாட்டின் நகரங்களில் மக்கள் குழந்தை குட்டிகளோடு 'வாடகைதாரர்களாக' வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், உங்கள் வீட்டின் பயன்படுத்தாத அறைகளில் வெளிநாட்டுக்காரர்களைத் தங்க வையுங்கள் என்றால், அவ்வீடுகளில் ஏற்கெனவே வாடகைக்குத் தங்கியிருக்கும் சொந்த வீடற்ற மாதச் சம்பளக்காரர்கள் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

விருந்தினர்களை நம்பியே தங்கும் விடுதிகளை முறைப்படி நடத்திக்கொண்டிருக்கும் நிறுவனங்களின் தொழிலை இது பாதிக்காதா? விடுதிகளைவிட வீடுகள் குறைந்த செலவில் கிடைக்கின்றன என்பதால், பல வெளிநாட்டினர் தமிழர்களின் வீடுகளில் நுழைந்துகொள்ளவும், தமது வீட்டில் குடியிருக்கும் தமிழ்நாட்டுக்காரர்களைவிட வெளிநாட்டுக்காரர்களிடம் கூடுதலாக வசூலிக்க முடியும் என்று கருதி, தமது வீடுகளின் அறைகளை வாடகைக்கு விடுவோர் செயல்படவுமே இந்தத் திட்டம் உதவும்.

இத்திட்டத்தை செயல்படுத்திய இலங்கை, தாய்லாந்து போன்ற நாடுகள் பல்வேறு வகையான பண்பாட்டுச் சீரழிவுகளால் நாசமடைந்திருப்பதை, நமது நாட்டின் புதுமை விரும்பிகள் புரிந்துகொள்ள வேண்டும்.



தமிழ்நாட்டின் மரபுவழி உணவு முறைகள் வெளிநாட்டில் பரவ இத்திட்டம் வழி வகுக்கும் என்று சுற்றுலாத் துறையினர் சொல்கின்றனர். தமிழ்நாட்டின் உணவு முறைகள் மாற்றப்பட்டும் சிதைக்கப்பட்டும் நீண்ட காலமாகிறது என்பதைச் சுற்றுலாத் துறையினர் புரிந்துகொள்ள வேண்டும். உண வகங்களில் எண்ணெய் வாணலியிலிருந்து ஆளுயரத்துக்குக் குபீரெனப் பற்றியெறியும் தீயை, உணவை வேக வைப்பதற்கான தீயாக நம்மால் கருத முடியவில்லை. தொலை பேசியை எடுத்துக் கட்டளையிட்ட அடுத்த அரைமணி நேரத்துக்குள், ஒரு நிமிட நேரம் கூடத் தாமதம் இல்லாமல் நம் வீட்டுக்குப் பீஸா வந்துவிடுகிறது. நம் நாட்டில் மாரடைப் பில் வீழ்ந்தவர்களுக்கு மருந்துகொண்டு போவதற்குக்கூட இப்படியொரு ஏற்பாடு கிடையாது. எல்லா வகையிலும் வெளி நாட்டு உணவு வகைகள் நம்மீது வலிமை யாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட் டன. நிலைமை இப்படியிருக்க, எந்த உணவு வகையை சுற்றுலாத் துறை வெளிநாட்டி னிரடையே பரப்பும்?

தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு உலக நாடுகளில் எல்லாம் பரவுவதற்கு இந் தத் திட்டம் வழிவகுக்கும் என்பது சுற்றுலாத் துறையின் நம்பிக்கையாக இருக்கிறது. மது வும் புகையும் புலாலும் இதுபோன்ற இன்ன பிற தேவைகளையும் தூண்டித்துவிட்டு, வெளி நாட்டினருக்கு விருந்தோம்பல் செய்வது என் பது இயலாத காரியம். நமது வீடுகளில் இவற்றையெல்லாம் நாம் அவர்களுக்கு அனு மதித்துப் பணம் பெறுகிறோம் என்றால், அது இழிவான காரியம். அவ்வகையில், இத் திட்டத்தின் மூலம் ஒரு குடும்பம் தனது பண்பையும், சமூக மதிப்பையும் இழப்ப தற்கு அரசே காரணமாகிவிடுகிறது.

ஜெயபாஸ்கரன்

சுற்றுலாவுக்கு மட்டுமின்றி பல்வேறு வேலைகளின் நிமித்தமாகவும் இங்கு வரும் வெளிநாட்டினர் அனைவரையும் தங்க வைத்து, தக்கவைத்துக் கொள்ள வேண்டும் எனும் அரசின் முனைப்பையே இத் திட்டத்தின் வாயிலாகப் புரிந்துகொள்ள முடிகிறது. கொஞ்சமும் பொருந்தாத இந்த வலுக்கட்டாய திணிப்புக்குக் குடும்பங்களின் பெண்கள் எதிர்ப்பாக இருப்பார்கள் என்ப தால்தான், அவர்களுக்கு வருமான ஆசை காட்டப்படுகிறது.

மேற்படி திட்டத்தின் வாயிலாக அதிகமா னோர் தமிழக வீடுகளில் தங்கினால் அதற் குப் பெயர் சுற்றுலா அல்ல; ஆக்கிரமிப்பு! இப்போது நமது நாடு பல்வேறு வழிகளில் வேக வேகமாக ஆக்கிரமிப்புகளுக்கு உள் ளாகி வருகிறது.

இது நம் தலைகுனிவுக்கே வழிவகுக்கும்!

ஜீவன்களின்



✱ விஜயலட்சுமி

''வாங்க, இதாங்க எங்க பரஸ்பரம் டிரஸ்ட் நடத்துற 'ஆசிரமம்'. விஜியம்மாவோட கனவு நனவான இடம்!'' என்று வரவேற்கிறார் காளிமுத்து. டிரஸ்டின் வழிகாட்டி, பாதுகாவலர், மேலாளர் என்று பல ரோல்கள் இவருக்கு.

வத்தலகுண்டு டவுனில் இருந்து நாலு கி.மீ. தொலைவில் இருக்கிறது ஜி.மீனாட்சிபுரம். வழியெங்கும் பச்சைப் பசேல் என்று வயல்வெளிகளும் வாழை - தென்னந்தோப்புகளும் எதிர்ப்படுகின்றன.

''நான் படிச்சது ரீச்சிங் த அன்ரீச்ட் பள்ளிக்கூடம்ங்க. பிரதர் கிம்ப்டன்ற 85 வயசு ஆங்கிலேயர் என்னை ஆறாவதுல இருந்து டிகிரி வரை படிக்க வச்சார். அப்பா கருமான், ப்ளாக்ஸ்மித். அம்மா, பட்டறைல காத்துக்குச் சக்கரம் சுத்துவாங்க. நான் சம்மட்டி அடிப்பேன். அப்படிக் கஷ்டப்பட்ட நான், இப்போ இந்த ஆசிரமத்துல வேலை செய்யறதே பெருமை தாங்க!'' என்கிறார் காளிமுத்து.

சென்னை மாக்ஸ் ம்யூல்லர் பவன் கெதே இன்ஸ்டிடியூட்டின், ஜெர்மன் கல்வி நிலையத்தின் விஜயலட்சுமி ராகவன் உருவாக்கியதுதான் 'ஆசிரமம்.' ஏழு வயதுச் சுட்டிப்பெண் பானு முதல் இருபத்தாறு வயது காமேசுவரி வரை இருபத்தொரு பெண் குழந்தைகளுக்கும், அதைப் போல இரு மடங்கு நாய்களுக்கும், பூனைகளுக்கும் அடைக்கலம் தந்திருக்கும் இடம் இது. பெண் குழந்தைகளுக்கு எப்படியோ, அப்படியேதான் பிராணிகளுக்கும் இங்கே தனிப் பாதுகாப்பு!

விஜயலட்சுமி, ஷீரடி சாயி பக்தர் என்பதால், வளாகத்துக்குள் ஒரு சிறு கோயில். கோயிலில் இஸ்லாம், கிறிஸ்தவ, இந்துச் சின்னங்கள் மூன்றும் உண்டு.

இங்கிருக்கும் இருபத்தொரு குழந்தைகளுக்குப் பின்னும் இதயத்தைப் பிழியும் பல்வேறு சோகக் கதைகள். ஆனால், குழந்தைகளை அவை பாதிக்காமல் பார்த்துக்கொண்டதுதான் விஜயலட்சுமியின் வெற்றி.

ஒரு தடவை கொடைக்கானல் போகிறபோது, வழியில் மாக்ஸ் ம்யுல்லர் பவன் துணை இயக்குநர் அகஸ்டின் வாங்கிக் கொடுத்து, பரஸ்பரம் அமைப்பைத் துவக்கிய பிறகு, அதற்குப் பொறுப்பேற்று நடத்த 1993ல் முன்வந்தார் விஜயலட்சுமி. காரணம், அகஸ்டின் இந்தியாவிலிருந்து மாற்றல் ஆகி வேறு நாடு போக வேண்டியிருந்தது.

''குழந்தைகளைப் பொறுப்பா நடத்தணும், படிக்கணும், பார்த்துக்கணும்னு அம்மா ஆசைப்பட்டாங்க. பக்கத்துல ஊராட்சி ஒன்றியப் பள்ளிலயும், வத்தலகுண்டு மேல்நிலைப் பள்ளிலயும் குழந்தைங்க படிக்கறாங்க. டெய்லரிங், கம்ப்யூட்டர், ஸ்க்ரீன் பிரிண்ட்டிங்னு அவங்க சொந்தக் கால்ல நிக்கணும்னு தொழிலும் கத்துக் கொடுக்கறோம்!'' என்கிறார் காளிமுத்து.

ஐந்து வருடங்களாக நோயுடன் போரா



ஜீவன்!

டிக்கொண்டிருந்த விஜயலட்சுமியின் வாழ்க்கைக்கு, இரண்டு மாதங்கள் முன்பு கான்சர் முற்றுப் புள்ளி வைத்திருக்கிறது.

''குழந்தைகளைப் பார்க்கணும்னு தோணினா, அன் ரிசர்வ்ட் கோச்ல ஏறி டிராவல் பண்ணிப் போயிடுவா. எதைப் பத்தியும் கவலைப்படமாட்டா!'' என்கிறார் கணவர், பேராசிரியர் ராகவன். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இரசாயனத் துறைத் தலைவர்.

சென்னையில், ஒரு நள்ளிரவில் டாக்டர் மோகன் காமேசுவரனை அவர் மருத்துவமனையில் சந்தித்தோம்.

''விஜயலட்சுமிக்கு Olfactory Neuro Blastoma என்கிற ஒரு வகை லோ கிரேடு கான்சர் வந்திருந்தது. 2002ல் ஆபரேஷன் செய்தோம். ஐந்து வருடங்கள் நன்றாகவே இருந்தார். தனக்காக அல்லாமல், பிறருக்காக வாழ்ந்தவர்.

ஒரு தடவை வத்தலகுண்டு கிராமப் பகுதியில் மெடிக்கல் கேம்ப் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நானும் ஒப்புக்கொண்டு தேதி கொடுத்தேன். ஆனால், அதற்கு மூன்று நாட்களுக்கு முன்புதான் என் தாயார் லலிதா காமேசுவரன் மறைந்தார். 'தேதியைத் தள்ளிப் போட்டுவிடுகிறேன்!' என்றார் விஜயலட்சுமி. இருப்பினும் சோகத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் கலந்துகொண்டேன். அங்கே அந்தக் குழந்தைகள், 'தாயை இழந்து வந்திருக்கிறீர்கள் நீங்கள். தாய் அன்பு என்பதையே அறியாதவர்கள் நாங்கள்' என்று ஒரு கவிதை படித்துக் கொடுத்தார்கள். என்னுடைய சோகமே மறைந்து போய்விட்டது. சமுதாயத்தையே மாத்தி அமைக்கக் கூடிய சாதனை இது!'' என்றார்.

ஏராளமான ஜீவன்களுக்கு ஜீவனாக இருந்த விஜயலட்சுமியின் பணியைத் தொடர்ந்து செய்வோம் என்று அவர் சகோதரர் ஜெயப் பிரகாஷும், அவர் மனைவி அலமேலுவும் உறுதி அளித்திருக்கிறார்கள்.

- சாருகேசி

முதல் சமிக்ஞை மோடியிடம் இருந்துதான் வந்திருக்கிறது. அதை சமிக்ஞை என்றுகூடச் சொல்ல முடியாது; உத்தரவு. 'உங்களுக்கு மூன்று நாட்கள் அவகாசம். அதற்குள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். நான்காவது நாள் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படும்.' கூடியிருந்தவர்கள் கவலையுடன் கேட்டிருக்கிறார்கள். 'மோடிஜி, போலீஸ்?' உறுமியிருக்கிறார் மோடி. 'நான் இருக்கிறேன். பார்த்துக்கொள்கிறேன்.' மோடி ஓர் அபூர்வமான அரசியல்வாதி. தான் கொடுத்த வாக்குறுதியை இன்று வரை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் தொடக்கப் புள்ளி கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் (பிப்ரவரி 27, 2002). அது ஒரு விபத்தாக இருக்கக் கூடும் என்று ஒருவருக்கும் தோன்றவில்லை. ஏன் தோன்ற வேண்டும்? இறந்து போன 58 பேரும் அயோத்தியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த கரசேவகர்கள். இந்துக்களுக்கு யார் விரோதி? முஸ்லிம்கள். தீர்ந்தது கதை.

'ஒரு நாள் விளையாட்டுப் போட்டியில் முஸ்லிம்கள் விளையாடி 60 ரன்கள் எடுத்திருக்கிறார்கள். அடுத்து நாம் ஆட வேண்டும். நம்முடைய டார்கெட் 60. ஆனால், 600 ரன்கள் அடிக்கும்வரை நாம் சோர்ந்து போகக்கூடாது.' வி.ஹெச்.பி. தலைவர் ராஜேந்திர வியாஸ் நிர்ணயித்த டார்கெட் இது.

அவர்கள் திரண்டார்கள். அவர்கள் என்றால் சங் பரிவார் உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், அவர்களுக்குக் கீழே பணிபுரியும் தாதாக்கள், பேட்டை கிரிமினல்கள், ரௌடிகள் மற்றும் பாக்கெட் கத்தி அடிப்பொடிகள். அத்தனை பேரையும் ஒரே அணியில் கொண்டு வந்து இணைத்த சக்தி ஹிந்து அடிப்படைவாதம்.

தொடக்கம் முதலே அடித்து ஆட ஆரம்பித்தார்கள். காட்டுத்தனமான ஆட்டம் அது. மூன்று நாட்கள் முடிவுக்கு வந்தபோது மொத்தம் 2000 ரன்கள் குவிக்கப்பட்டிருந்தன. குஜராத் முழுவதும் ரத்தச் சகதி. 'எல்லாம் முடிந்ததா' என்று கேட்டுத் தெரிந்துகொண்டபின், மோடி தன் ஆள்



உள்ளும்

மருதன்



நெஞ்சு பதைபதைக்க வைக்கும் கதைகள் அவை. 'முஸ்லிம்கள் வாழும் வீடுகளா? அப்படியே கொளுத்து. என்ன வேண்டும்? பெட்ரோலா? டீஸலா? இப்பொழுதே அனுப்புகிறோம். குழந்தைகள், வயதானவர்கள், பெண்கள் என்றெல்லாம் பிரித்துப் பார்க்க வேண்டாம்.'

நரேந்திர மோடிக்கு நன்றி!

செய்த பாதகங்கள் குறித்து ஆர வாரத்துடன் தெஹல்காவுக்குப் பேட்டி கொடுத்த கொலைகாரர்கள் ஒப்புக் கொண்ட ஒரு விஷயம் இது. மோடியின் உதவி இல்லாமல் இது நடந்திருக்க முடியாது. மோடிஜிக்கு நன்றி.

கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்த கலவரங்கள் குறித்து வழங்கப்பட்ட ஆய்வறிக்கைகள், மனித உரிமை கமிஷன் ரிப்போர்ட்டுகளுக்கு, தெஹல்கா ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுத் தந்திருக்கிறது. குஜராத்தில் தேர்தல் நெருங்கும் வேளையில் இதைச் செய்திருப்பது கேள்விகளை எழுப்பக்கூடும்... ஆனால் மோடி, கோயபல்ஸ் பிரசாரத்திலும் கில்லாடி!

காட்டி விரலை வானத்தை நோக்கி உயர்த்தினார். அவுட். ஆட்டம் முடிந்தது. எல்லோரும் அவரவர் வீட்டுக்குப் போகலாம். சிறப்பாக விளையாடிய அத்தனை பேருக்கும் வெகுமதி. தலைமை தாங்கிய மோடிக்குத் தேர்தலில் வெற்றிக் கோப்பை. ஆனால் என்ன, கோப்பையில் நிறைய ரத்தக்கறை. அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? உயிரைக் கொடுத்து விளையாடும்போது ரத்தம் தெறிக்கத்தானே செய்யும்.

எல்லாம் முடிந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு குஜராத் ஃபைலை தெஹல்கா திறந்திருக்கிறது. மோடியின் ஆட்டக்காரர்களைச் சந்தித்து நயமாகப் பேசியிருக்கிறது தெஹல்கா குழு. பெருமிதமும் பூரிப்பும் பொங்க அவர்கள் விவரித்த ரத்த அத்தியாயங்களை அப்படியே பதிவு செய்து இப்போது வெளியிட்டிருக்கிறது.

புறமும்

ஸ்ரீ லலிதா இரண்டாம் பாகம்

ஜீவனை உயர்த்துபவள்

அத்வைதம் என்று சொல்கிறபோது, பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று என்று சாதாரணமாகச் சொல்வோம். இதிலே கொஞ்சம் வித்தியாசமான ஒரு நிலை இருக்கிறது - புரிவதற்குக் கொஞ்சம் கஷ்டம்போலத் தோன்றும் என்றாலும் புரிந்துகொள்ளக்கூடிய விஷயம் :

அத்வைதத்திலேயே ரொம்ப முக்கியமான சித்தாந்தம் என்னவென்றால், ஜீவ - ஈசுவர பேதம் என்பதுதான். ஜீவன், ஜீவனாக இருக்கும்போதும், ஈசுவரன் ஈசுவரனாக இருக்கும்போதும் இரண்டுக்குமிடையே பேதம் உண்டு. ஜீவன், ஈசுவரனுடன் ஐக்கியமாகிவிட்டது என்றால், எப்போதும் பேதம் கிடையாது. அப்போது இது ஜீவனும் அல்ல; அது ஈசுவரனும் அல்ல... இரண்டும் ஒன்றாகச் சேர்ந்த பரமாத்மா!

இந்த வித்தியாசம் இருக்கிறவரைக்கும் ஆன்மா ஐந்தாவது நிலைமையை அதாவது, விச்வம், ஜாக்ரதி, ஸ்வப்னா, சுஷுப்தி, துரியம் என்பனவற்றுள் ஐந்தாவதான துரிய நிலைமையை அடைகிற வரைக்கும் வேறுபாடு இருக்கும்.

இந்த வேறுபாடுக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு. விஸ்வம் என்று சொன்னால், விஸ்வத்துடன் இணைந்து செயல்படக்கூடிய ஆத்மாவின் நிலைமை. இதிலிருந்து ஸ்வப்ன நிலைமைக்குப் போகிறது - தைஜஸம்.

தைஜஸத்திலிருந்து போகக்கூடிய ஆழ்ந்த தூக்க நிலைமை சுஷுப்தி. அந்த நிலைமைக்குப் போய்விட்ட ஆத்மாவுக்கு பிராக்ஞன் என்று பெயர்.

துரியா நிலைமைக்குப் போய்விட்ட ஆத்மாவுக்கு என்ன பெயர் என்று கேட்டால், அதற்குப் பெயர் கிடையாது! ஜீவ - ஈசுவர பேதம் போய் அங்கே இரண்டறக் கலக்கும்போது, துரிய நிலைமையிலும் துரியாதீத நிலைமையிலும் ஆத்மாவுக்குத் தனியாகப் பெயர்கள் கிடையாது. காரணம், அது பரமாத்மாவுடன் இணைந்துவிட்ட நிலைமை.


இப்போது அம்பாளுடைய நாமாவளிகள் எப்படி வருகின்றன என்று பார்ப்போம் :

அவள் **விச்வரூபா**வாக இருக்கக் கூடியவள். **ஜாக்ரிணி**யாக (ஜாக்ரதை நிலையிலுள்ள ஆத்மா) இருக்கக் கூடியவள்.

ஸ்வபந்தி - அந்த ஸ்வப்ன நிலைமைக்குப் போன ஆத்மா இருக்கிறதே, அதற்கு உயிரைத் தரக் கூடியவளும் அவள்தான். ஆகவே, **ஸ்பந்தி**யாக இருக்கிறாள்.

சரி, இதற்கு அடுத்த நாமம் என்ன என்று பார்த்தால் **தைஜஸாத்மிகா**. தைஜஸன் என்பவன் யார்?

சுதா சேஷய்யன்


ஸ்ரீகற்பகாம்பாள்,
கஞ்சனூர்
10

எந்த ஆத்மா ஸ்வப்ன நிலைமைக்குப் போய்விட்டதோ அதற்குத் தைஜஸன் என்று பெயர். அந்த தைஜஸனாக இருக்கக்கூடியவள் அவள் என்பதால் தைஜஸாத்மிகா.

அடுத்து நல்ல தூக்க நிலைமையான சுஷுப்தி. அந்த நிலைமையை எய்தும் ஆத்மாவுக்கு ஆதாரமானவள் அவளே.

இந்த சுஷுப்தி நிலைமைக்குப் போய்விட்ட ஆத்மாவுக்கு என்ன பெயர் என்றால் பிராக்ஞன் என்று பெயர். எனவே அம்பாளின் அடுத்த திருநாமம் பிராக்ஞ **ஆத்மிகா.**

ஆத்மாவுக்குப் பிராணனைத் தரக்கூடியவளாக, பிராக்ஞாத்மிகாவாக இருக்கக்கூடியவள் அம்பாள்.

இதைத் தாண்டி துரியாதீதாவாக இருக்கக்கூடியவள் - அந்தத் துரியாதீத நிலைமைக்குப் போய்விட்ட ஆத்மாவாக இருக்கக்கூடியவள் அம்பாள். இந்தக் கட்டத்தில் அவள் திருநாமம் 'துரியாதீதா' என்று சொல்லவில்லை; **ஸர்வ அவஸ்தா வர்ஜிதா** என்றே அதைக் குறிப்பிடுகிறது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். எந்த அவஸ்தைக்கும் அப்பாற்பட்டு இருப்பவள்.

அவஸ்தைகள் களைபவள்

ஆத்மாவின் முதல் ஐந்து நிலைகளுக்குமே அவஸ்தை என்று தான் பெயர். நாம் பிற்காலத்தில் தான் அவஸ்தை என்பதை எப்படியெப்படியோ பயன்படுத்த ஆரம்பித்தோம். அவஸ்தை என்பது ஆதியில் ஆத்மாவின் நிலைமையைத்தான் குறித்தது.

அப்படியானால், ஜாக்ர அவஸ்தை, ஜாக்ரதத்தைத் தாண்டி இருக்கக்கூடிய ஸ்வப்ன அவஸ்தை; அந்த ஸ்வப்ன அவஸ்தையைத் தாண்டி இருக்கக்கூடிய துரியா அவஸ்தை; துரியாதீதம் என்று அத்தனைக்கும் போன பிறகு, சர்வ அவஸ்தா வர்ஜிதா. இந்த அவஸ்தைகளையெல்லாம் தாண்டியும் இருக்கக்கூடியவள்.

அப்படி ஜீவனைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக்கொண்டு போய், அந்தப் பிரம்மாண்டத்தில் இருக்கக்கூடிய பர



மாத்மாவிடம் ஐக்கியப்படுத்தக்கூடிய பணியைச் செய்பவளாக இருக்கிறாள் அம்பாள்.

அம்பாள்தான் இந்த ஜீவன் பிறப்பதற்கும் காரணம். அம்பாள்தான் அதைக் கொண்டுபோய் அந்தப் பரமாத்மாவிடம்

ஐக்கியப்படுத்துவதற்கும் காரணம். சிருஷ்டி கிரமமாக அதனைப் படைக்கக்கூடியவள் அப்படியே மேலே ஏற்றி, ஏற்றி, ஏற்றிக் கொண்டுபோய் துரியாதீதத்தில் கொண்டு போய் பரமாத்மாவோடு சம்பந்தப்படுத் தக்கூடியவள்.

இதை இன்னும் விவரித்துச் சொல் வதற்காகத்தான், அடுத்த நாமமாக **சிருஷ்டிகர்த்ரீ** என்கிற நாமம் அமைந் திருக்கிறது. சிருஷ்டியைச் செய்யக் கூடிய

அம்பாள்தான் சிருஷ்டிகர்த்தாவாக இருக்கிறாள் என்பதால் பிரம்மரூபா என்கிற திருநாமம்.

வள் சிருஷ்டிகர்த்ரீ.

பிரம்மரூபா - சிருஷ்டி கர்த்தா யார்? சாதாரணமாக பிரம்மா என்று சொல்லு வோம். இவள்தான் சிருஷ்டிகர்த்தாவாக இருக்கிறாள் என்பதால், பிரம்மரூபா என்ற திருநாமம். சதுர்முக பிரம்மா இருக் கிறாரே; அந்த நான்முகனாக இருப்பவ ளும் இவளே.

கட்டுண்டு கிடக்கும் ஜீவன்

கோப்த்ரீ - இவள்தான் காப்பாற்றக் கூடியவள். 'கோ' என்றால் பசு. பசுவைக் காப்பாற்றுபவள். இந்த ஜீவனுக்குப் 'பசு' என்று பெயர்.

சுவபாவம் என்று சொல்வதுண்டு. சுவபாவம் என்றால், சுய பாவம் என்று ஓர் அர்த்தம். அவரவர் சுவபாவம் என்று சொல்வோம் - அவரவருக்குமான இயல் பான குணம் - தன்மை. இந்தச் சுவபாவம் என்பதற்கு இன்னொரு அர்த்தமும் உண்டு - சுவ என்று சொன்னால், 'நாய்' என்று அர்த்தம். நீச பாவத்தைச் சொல்கிறபோது 'சுவபாவம்' என்று சொல்வது உண்டு. இந்த ஜீவன் நீச பாவத்தில் இருக்கிறது - கீழே இருக்கிறது என்பது ஒன்று; நாயைப் போல் கட்டிப்போடப்பட்டிருக் கிறது என்பது இன்னொன்று! எல்லா விதமான பந்தங்களிலும் கட்டிப் போடப் பட்டிருக்கிற பாவம் பசுபாவம். இதி லிருந்து இந்த ஜீவன் கிளம்பி மேலே போக வேண்டும். எங்கே போக வேண் டும்..? பதி பாவத்தில் இருக்கிற பர மாத்மாவிடம் போகவேண்டும். பசுக் களுக்கெல்லாம் பதியாக இருக்கக் கூடியவர் பசுபதி. சைவத்தில் பசுபதி என்றால், வைஷ்ணவத்தில் கோபாலன். பசுக்களையெல்லாம் மேய்க்கக் கூடிய வன் கோபாலனாகவும், பசுபதியாகவும் இருக்கிறான் என்றால், கோப்த்ரியாக அம் பாள் இருக்கிறாள். பசுக்களாகிய ஜீவன் களை, சரியான வழியில் நடத்தி அழைத் துச் செல்கிறாள். **கோவிந்தரூபிணி**யாகவும் அவளே இருக்கிறாள்.

ஆக... பிரம்மா, பசுபதி, கோவிந்தன் என மும்மூர்த்திகளாகவும் அம்பாளே இருக்கிறாள். முத்தொழிலும் செய்யக் கூடியவள், மும்மூர்த்தி ஸ்வரூபமாக இருக்கக் கூடியவள் என்பது தெரி வதற்காக ஏற்பட்டவைதான் **கோப்த்ரீ**, **கோவிந்தரூபிணி** என்கிற திருநாமங்கள்.

முத்தொழில்களுள் ஸம்ஹாரம் என்பதும் ஒன்று. அவளே ஸம்ஹாரம் செய்கிறாள். அதற்கு அதிபதியாக **ஸம்ஹாரிணி** என்ற திருநாமத்துடன் விளங்குகிறாள்.

ஸம்ஹாரிணியாக இருக்கக் கூடிய வள், ருத்ரரூபாவாகவும் இருக் கிறாள். ருத்ரன் வடிவத்தில் அவளேதான் இருக்கிறாள்.

இதன் ஆழ்ந்த பொருளை, தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்)



நாளொரு குண்டு போட்டு தி.மு.க.வைக் கதிகலக்கி வரும் ராமதாஸ், எதிர் வரும் 2011-ல் பா.ம.க. தமிழகத்தை ஆளும் என்கிற நமக்களித்த பேட்டியிலும் தி.மு.க. அரசை நார்நாராய்க் கிழிக்கத் தவறவில்லை...

ராமர் பாலம் விவகாரத்தில் டி.ஆர். பாலு உறுதியுடன் இருக்க, மாற்று வழி யானாலும் ஏற்றுக்கொள்வோம் என்று நீங்கள் கூறியது எதனால்?

''தமிழர்களின் நீண்ட நாள் கனவான சேது கால்வாய்த் திட்டம் எப்படியாவது நிறைவேற்றப்படவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். மாற்று வழியோ, எந்த வழியோ, திட்டம் நிறைவேற வேண்டும். இந்தப் பிரச்னையில் மக்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும்; அவர்களைப் புண்படுத்தக் கூடாது.''


'அணுசக்தி ஒப்பந்தப் பிரச்னையில் மத்திய ஆட்சி கவிழக் கூடாது' என்கிறார் கருணாநிதி உங்களின் நிலைப்பாடு என்ன?

''கொஞ்சம் தள்ளிப் போடலாமே என்பது என் கருத்து. இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புகொள்ள ஹைட் சட்டத்தில் அமெரிக்க நலனே அதிகமாக இருக்கிறது. 'இந்தியாவின் எதிர்கால மின் தேவையை நிறைவு செய்ய இந்த ஒப்பந்தம் அவசியம் என்கிறார் பிரதமர். ஆனால், அணுசக்தி என்றைக்குமே ஆபத்தான சக்தி. இந்த ஒப்பந்தம் நிறைவேற அமெரிக்கா மிக ஆர்வமாக இருப்பது சந்தேகத்தை உண்டாக்குகிறது. நாம், மரபு சாரா எரிசக்தி உற்பத்திக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். முக்கியமாக சூரிய ஒளி சக்தி உற்பத்திக்கும், அது தொடர்பான ஆராய்ச்சிகளுக்கும் நிறைய நிதி ஒதுக்க வேண்டும்.'

தமிழகத்தில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கடத்துவது தொடர்கதையாகிவிட்டதே?

''தமிழகத்தில் ஆயுதங்களும் இல்லை; அதைக் கடத்த வேண்டிய அவசியம் புலிகளுக்கும் இல்லை. எங்கள் ஆதரவு என்பது, வாழ்வுரிமைக்காக 50, 60 வருடங்களாகப் போராடி வரும் ஈழத் தமிழர்களுக்குத்தான். ஈழத் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்றுச் சுதந்திரமாக

''இவர்கள் அதிகாரிகளா? ஆளுங்கட்சிக் காரர்களா!''



வாழ, ஓர் அரசியல் தீர்வு காண இந்திய அரசு உதவவேண்டும். இந்த அடிப்படையில் ஆதரவே தவிர, புலிகளுக்கு நாங்கள் ஆதரவாக இல்லை; எந்தப் புலிகளோடும் எங்களுக்குத் தொடர்பும் கிடையாது!''

என்.எல்.சி. விவகாரத்தில், நிலத்துக்கான அதிக விலை, ராயல்டி என்று முன்பே முடிந்துபோன பல பழைய விஷயங்களை இப்போது கிளறுவது நியாயமான அணுகுமுறைதானா?

''என்.எல்.சி. தொடர்ந்து விஸ்தரிப்புக்காக நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. இது இருபத்தாறு வருடங்களாக நடந்து வரும் தொடர் போராட்டம். நான் பதினைந்து போராட்டங்கள் நடத்தியிருக்கிறேன். நிலம் கொடுத்த குடும்பங்களில் 3000 இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி கொடுத்து, அதில் 100 பேருக்குத்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள். பூமிக்குக் கீழ் கோடிக்கணக்கான மதிப்புள்ள நிலக்கரி இருக்க, ஏக்கருக்கு 58,000 ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாற்று இடமாக வீடு மட்டும் கட்டிக்கொள்ள இரண்டு சென்ட், மூன்று சென்ட் நிலம் கொடுக்கிறார்கள். செய்யூரில், ஏக்கர் 30 லட்சம் சொல்கிறார்கள் என்று அனல்மின் திட்டத்தையே அங்கு ரத்து செய்ததாகச் சொல்கிறார் ஆர்க்காடு வீராசாமி. ஆனால், நெய்வேலியில் கறுப்புத் தங்கம் பூமிக்கடியில் கொட்டிக் கிடக்க, அடிமாட்டு விலைக்கு விவசாயிகளிடம் வாங்கிக் கொடுக்கும் புரோக்கர் வேலையை தமிழக அரசு செய்வது ஏன்?''

2011-ல் பா.ம.க. தலைமையில் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடித்துவிடுவீர்களா?

''தேர்தலின்போது தி.மு.க.வுடன் இருந்தது தொகுதி உடன்பாடுதான். இப்போது மெஜாரிட்டி இல்லாத தி.மு.க. ஆட்சிக்கு ஆதரவு கொடுத்து வருகிறோம். இது ஐந்து வருடங்கள் நீடிக்கும். அதே சமயம் 2020ஆம் வருடம், சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில், தமிழர்களும் தமிழகமும் எத்தகைய நிலையை எட்ட வேண்டும் என்று தொலைநோக்கு வரைவு அறிக்கையைத் தயார் செய்திருக்கிறோம். அதில் உள்ள வ ற் றை ற

பொங்குகிறார் ராமதாஸ்



“தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மோசமாகி விட்டது!”

நிறைவேற்ற அரசியல் அதிகாரம் தேவை. எனவேதான் 2011-ல் பா.ம.க. தலைமையில், தி.மு.க. - அ.தி.மு.க.வைத் தவிர்த்து, கூட்டணி அமைப்போம் என்று சொல்லியிருக்கிறேன். அதுவரை, தி.மு.க. அரசின் செயல்பாடுகள்மீது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் தொடரும். அது தி.மு.க.வுக்குக் கசப்பாக இருந்தாலும் கவலைப்பட மாட்டோம்.''

வேறு எந்தெந்தக் கட்சிகள் உங்கள் தலைமையில் அணி திரளும்?

''இப்போதே எப்படிச் சொல்ல முடியும்? தி.மு.க., அ.தி.மு.க. தவிர மற்ற எந்தக் கட்சிகளும் எங்களுக்குத் தீண்டத்தகாதவை அல்ல. 2011-ல் இரண்டுக்கும் மாற்றாக, ஒரு பலமான அணி உருவாகப் பாடுபடுவோம்.''

ஒன்றரை வருட தி.மு.க. அரசின் செல்பாடு எப்படி?

''தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதில்தான் அக்கறை காட்டப்படுகிறது. வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பெரிய சாதனைகள் எதுவும் தெரியவில்லை. இனி என்ன செய்வார்களோ? பல பிரச்னைகளுக்காகக் கருத்துக் கணிப்பு நடத்தும் ஊடகங்கள் இந்த ஆட்சியில் ஊழல் மலிந்துள்ளதா என்றும் கருத்துக் கணிப்பு நடத்திப் பார்க்க வேண்டும்...''

அமைச்சர்களின் நிர்வாகம் எப்படியிருக்கிறது?

''சில அமைச்சர்கள் புதியவர்கள். துறைகளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்கிறார்கள். ஆனால், அனுபவசாலிகளான அமைச்சர்கள் இன்னமும் திறமையாகச் செயல்படலாம்.''

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு குறித்து..?

''மோசமாகிவிட்டது. சர்ச்சைக்குரிய பகுதியில் பயணம் செய்யும் தேசியக் கட்சியின் தமிழகத் தலைவருக்குப் பாதுகாப்பு இல்லை. நகராட்சித் தலைவரை ரிமோட் வெடிகுண்டு மூலம் கொல்கிறார்கள். தினசரி பத்திரிகைகளைத் திறந்தால் கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம், அரசியல் பிரமுகர்களுக்குச் சிறைக்குள்ளும் பாதுகாப்பு இல்லை. காவல் துறை சுயேச்சையாக இயங்க வேண்டும். ஆனால், இங்கே சில அதிகாரிகள் ஆளும் கட்சியின் மாவட்டச் செயலாளரைவிட விசுவாசம் மிகுந்த கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள்! காவல் துறையில் கறுப்பு ஆடுகளை ஒழித்து, நுண்ணறிவுத் துறையைப் பலப்படுத்த வேண்டும். சமூக விரோதிகள், காவல் துறை, அரசியல்வாதிகள் ஆகிய மூவர் கூட்டணியின் முதுகெலும்பு உடைக்கப்பட வேண்டும். அப்போதுதான் காவல் துறையின் கண்ணியம் உயர வாய்ப்பிருக்கிறது.''

2011 டார்கெட் சரி, தென் தமிழகத்தில் உங்களது செல்வாக்கு சொல்லிக் கொள்ளும்படி இல்லையே?

''யாராவது அந்தப் பகுதியில் சுற்றுப் பயணம் சென்று எங்கள் வளர்ச்சியைக் கணித்திருக்கிறார்களா? தமிழகம் முழுக்க ஆதரவு இல்லாவிட்டால் 234 தொகுதிகளிலும் மாநாடு நடத்தியிருக்க முடியுமா? சமய, சமுதாய நல்லிணக்கம் என்று பதினான்கு மாநாடுகள் நடத்தியிருக்கிறோம். தென் மாவட்டங்களில் எங்கள் மாவட்டத் தலைவர் தேவரினத்தைச் சேர்ந்தவராக இருந்தால், செயலாளர் தேவேந்திரராக இருப்பார். இதன் மூலம் நல்லிணக்கம் வளர்ந்து, கட்சியும் வளர்கிறது. வேறு கட்சிகளில் இதுபோன்ற ஏற்பாடுகள் இருக்கின்றனவா!''

- ப்ரியன்

''எங்க மனசையும் புரிஞ்சுக்கங்க!''

''நான் காலேஜ் படிக்கும்போதே மாடலிங் பண்ண ஆரம்பிச்சுட்டேன். அதன் மூலமா விளம்பரங்கள்ல நடிக்கறதுக்கு நிறைய வாய்ப்புகள் வந்துச்சு. அப்படி வந்த தமிழ் விளம்பரத்தைப் பார்த்துட்டுத்தான் என்னை 'ஒற்றன்' படத்துல ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆடக் கூப்பிட்டாங்க. நான் அடிப் படையில ஒரு டான்ஸர்ங்கறதுனால அந்த வாய்ப்பை என்னோட தவத்துக்குக் கிடைச்ச வரமா நினைச்சேன். அந்தப் பாட்டுதான் என்னை ரசிக நெஞ்சங்களில் சிம்மாசனம் போட்டு அமர்த்தியது'' என்று நன்றி மறக்காமல் பேசுகிறார் நடிகை தேஜாஸ்ரீ.

'ஒரு பாட்டுக்கு மட்டும் டான்ஸ் ஆடறதுல தப்பே யில்ல. செய்யற வேலைய ஒழுங்கா செஞ்சா நமக் குன்னு வர்ற வாய்ப்புகள் வராமப் போகாது. இந்தி யில பிரபலமான ஹீரோ, ஹீரோயினா இருக்கிறவங்க கூட ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆடுறாங்க. 'இம்சை அரசன் 23ம் புலிகேசி'யில வடிவேலுக்கு ஹீரோயினா நடிச்சப்ப, 'காமடியனுக்கு ஹீரோயினா நடிச்சா காலியாயிடுவ'ன்னு என் காது படவே கமெண்ட் பண்ணி னாங்க. ஆனா, அதுக்குப் பிறகுதான் பெரிய ஹீரோக்கள்கூட நடிக்கறதுக்கு வாய்ப்புக் கிடைச்சது. கமல்கூட நடிக் கணும்ங்கறது என்னோட நெடுநாள் ஆசை. கூடிய சீக்கிரம் அது நிறை வேறும்னு நினைக்கறேன்'' என்றவரின் கண்களில் கனவுகள் விரிகின்றன.

''நடிகைகளோட சினிமா ஆயுள் என் பது கொஞ்ச காலம்தான். அதுக்குள்ள நம்ம இடத்தைப் பிடிச்சு, கொடிய நாட்டி யாகணும். அந்த விதத்துல எனக்கு சிம்ர னும், ஜோதிகாவும்தான் இன்ஸ்பிரேஷன். தமிழ் டைரக்டர்கள் ஹீரோவுக்குக் கதை தயார் பண்றது மாதிரி ஹீரோயின்களுக் கும் பண்ணணும். அப்பதான் விஜயசாந்தி மாதிரி நடிகைகள் நமக்குக் கிடைப் பாங்க'' என்ற தேஜாஸ்ரீயிடம்,

'டைரக்டர்கள் கன்னத்துல அறைய றது...' என்றால், முகம் சிவந்து போகிறது.

''அது ரொம்பத் தப்புங்க. சரியான கார ணத்தால அடிக்கப்படறதுக்கும் வேணும்னே அடிக்கறதுக்கும் வித்தியாசம் இருக்குங்க. இயக்குநர்களை நம்பித்தானே வெளியூரி லிருந்து தமிழ்நாட்டுக்கு வர்றோம். இங்க நீங்கதானே எங்களைப் பார்த்துக்கணும். நீங் களே கை நீட்டினா எப்படி? எங்க மனசையும் புரிஞ்சுக்குங்க ப்ளீஸ்!''

– ஆர்.முத்துராமலிங்கம்



'சேவாலயா' முரளிதரன்

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வசித்து வந்த காலம் அது. ஒரு ரயில் பயணத்தின்போது அவரது நண்பர் போலக், ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறார். 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற அந்தப் புத்தகத்தைப் புரிந்துகொள்வதே மிகக் கடினம். அப்படிப்பட்ட புத்தகத்தை, அந்த ரயில் பயணத்திலேயே படித்து முடித்துவிட்டார் காந்தி. அதன் சாரம் என்ன, அதை எப்படித் தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை உடனே புரிந்துகொண்டு, தான் இறங்க வேண்டிய ஊர் வந்ததும் அந்த ஊருக்குப் போய், 'போனிக்ஸ் பண்ணை' என்ற ஒரு குடியிருப்பை நிறுவி, புத்தகத்தில் தான் படித்துப் புரிந்துகொண்டதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்.

இதுதான் நமக்கும் மகாத்மா காந்திக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம். காந்தி சிறுவனாக இருந்தபோது அரிச்சந்திர நாடகம் பார்த்துவிட்டு, 'இனிமேல் வாழ்நாளில் பொய் பேசுவதே இல்லை' என்று முடிவு செய்தார்; அதன்படி நடந்தும் காட்டினார்! அதனால்தான் அவர் மகாத்மா! நாமோ அரிச்சந்திரனுக்காக 'ஐயோ பாவம்!' என்று அனுதாபப்பட்டுவிட்டு அடுத்த கதை கேட்கக் கிளம்பிவிடுகிறோம். காந்திஜி, தான் கேட்ட, படித்த நல்ல விஷயங்கள் எதுவாக இருந்தாலும், அதை தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி இருக்கிறார். அவரது வீட்டு வேலைக்காரப் பெண்மணி ரம்பா, 'பிரச்னை வரும்போது ராம நாமத்தைச் சொல்' என்று சொன்னதைத் தன் கடைசி மூச்சு வரை கடைப்பிடித்தார்!

பாதை வகுத்த பாரதி கவிதை!




* நம்மை வாழ்நாள் முழுவதும் தூங்கவிடாமல் செய்யும் இலட்சியம் நோக்கிய கனவு...



வையத் தலைமை கொள் 2


நாம் கேட்காத நல்ல விஷயங்களா? நாம் படிக்காத நல்ல புத்தகங்களா? ஏதாவது ஒரு நல்ல கருத்தை மையமாகக்கொண்டு, காந்திஜி உண்மையைப் பிடித்துக் கொண்டதுபோல், நம்மால் வாழ முடியுமானால், வையத் தலைமை கொள்ள முடியும். நம் மனதை வலிமை பெறச் செய்யும் பல நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. நம் புத்தியைக் கூர்மையாக்கும் பல நல்ல எழுத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன. நாம் வாழ்வில் பயம் என்பதே இல்லாமல் வாழ, பாரதியின் கவிதைகள் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், நாம் தினம் தினம் ஊர் வம்பு வளர்க்கும் பத்திரிகைகளைப் படித்து நேரத்தை வீணாக்குகிறோம். அந்தப் பத்திரிகைச் செய்திகள் குறித்து நண்பர்களுடன் விவாதம் வேறு! பொன்னான நேரத்தை இப்படிக் 'கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைக்கிறோம்!' 'ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம் நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!' என்று நம்மைப் பார்த்து பாரதி சொல்வதில் ஓர் அர்த்தம் இருக்க வேண்டாமா? கற்றது ஒழுகுவதற்கு முன்னால், எதைக் கற்க வேண்டும் என்பதையும் நாம் முடிவு செய்துகொள்வது நலம்.

ஏழாம் வகுப்புப் படிக்கும் ஒரு சிறுவன், தன்னுடன் படிக்கும் மாணவன் வீட்டுக்கு மாலை நேரங்களில் விளையாடச் செல்வது வழக்கம். அந்த மாணவனின் தந்தை ஒரு கதாசிரியர். எனவே, அவர்கள் வீட்டில் நிறைய புத்தகங்கள் இருக்கும். ஒரு நாள் சிறுவனின் கண்களில் பாரதியார் கவிதைகள் புத்தகம் பட்டது. அதைப் படிக்க வேண்டும் என்ற ஆவலில், இரவல் தருமாறு அந்த எழுத்தாளரிடம் கேட்க, ஒரே நாளில் திருப்பித் தந்துவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கொடுத்திருக்கிறார்.



அந்தச் சிறுவன் புத்தகத்துடன் வீடு திரும்பினான். நானூறு பக்கங்களுக்கு மேல் இருக்கும் ஒரு புத்தகத்தை, சிறுவன் ஒரே நாளில் படித்து முடிப்பது சாத்தியமா! இருந்தாலும், மறுநாள் பள்ளி விடுமுறை என்பதால், ஒரு நம்பிக்கையில் அந்தப் புத்தகத்தை எடுத்து வந்தான். மறுநாள் சரஸ்வதி பூஜை என்பதும், அன்று அவனது தாத்தா அவனைப் படிக்கவிடாது புத்தகங்களை பூஜையில் வைக்கச் சொல்வார் என்பதும் அவனுக்குத் தெரியாது.

மறுநாள் தாத்தா பூஜையில் அமர்ந்து, 'எல்லா புத்தகங்களையும் பூஜையில் வை' எனக் கட்டளையிட்டார். சிறுவன், 'பாரதியார் கவிதைகள்' புத்தகத்தை மட்டும் திருட்டுத்தனமாக மறைத்து வைத்துவிட்டு மற்ற பாடப் புத்தகங்களைக் கொடுத்தான். தாத்தா புத்தகங்களை வைத்துப் பூஜையை ஆரம்பிக்க, அடுத்த அறையில் சிறுவன் கவிதை நூலுடன் அமர்ந்தான். புத்தகத்தை முழுதும் படிக்க இயலாது என்பதை உணர்ந்தவனாய், ஏதோ ஒரு பக்கத்தைப் புரட்டிப் படிக்க ஆரம்பித்தான். அந்தப் பக்



கம் ஒரு கவிதையின் நடுவிலிருந்து தொடங்கியது. என்ன ஆச்சரியம்! அந்தப் பத்தி சரஸ்வதி பூஜையைப் பற்றியது. 'மந்திரத்தை முணுமுணுப்பதும், ஏட்டை

பாதி கவிதைக்கு இவ்வளவு பலம் இருக்குமா? கிட்டத்தட்ட வாழ்நாள் முழுவதும் செய்யக்கூடிய ஒரு பணிக்கு இந்தப் பாதி கவிதையே விதையாகும்!

வரிசையாக அடுக்குவதும், சந்தனத்தை, மலரை இடுதலும் சரஸ்வதி பூஜை அல்ல' என்று சொல்லியிருந்தது. சிறுவன் குழம்பிப் போனான். தாத்தாவை நம்புவதா, பாரதியை நம்புவதா? இது சரஸ்வதி பூஜை இல்லையென்றால் எது பூஜை என மேலே படித்தான். 'வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி என்றும், பள்ளி இல்லாத ஊரை கொளுத்திவிட வேண்டும் என்றும் அதுதான் சரஸ்வதியின் அன்பைப் பெற வழி என்றும் இருந்தது. ஆயிரம் அன்ன சத்திரம் வைப்பதைக் காட்டிலும், பதினாயிரம் கோயில்கள் கட்டுவதைக் காட்டிலும், ஓர் ஏழைக்குக் கல்வி அளிப்பது சிறந்தது என்ற கருத்து அன்று அந்தச் சிறுவன் மனத்தில் நன்றாகப் பதிந்தது. 'வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்' என்ற அந்தப் பாடலின் கடைசிப் பத்தியைத்தான் அன்று அந்தச் சிறுவன் படித்தான். அவ்வரிகள் அவனுள் சிந்தனைகளை எழுப்பிவிட்டன. தான் வளர்ந்து பெரியவனானவுடன் பாரதி சொன்ன சரஸ்வதி பூஜையைச் செய்ய வேண்டும் என்ற வெறி மனத்தில் குடிகொண்டது. ஏழைக்கு எழுத்தறிவிக்கும் நிறுவனம் ஒன்றை நிறுவிட வேண்டும். அதன் மூலம் பல வசதியற்ற ஏழை, அனாதை, கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி புகட்ட வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கு உந்து சக்தி பாரதி கவிதைதான்.

பாதி கவிதைக்கு இவ்வளவு பலம் இருக்குமா? கிட்டத்தட்ட வாழ்நாள் முழுவதும் செய்யக்கூடிய ஒரு பணிக்கு இந்தப் பாதி கவிதையே விதையாகுமெனில் அவருடைய அத்தனை கவிதைகளும் எத்தனை வலிமை தரும்! 'கனவு காணுங்கள்' என்று நம் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் சொன்னது, நாம் தூங்கும்போது காணும் கனவு அல்ல! 'நம்மை வாழ்நாள் முழுவதும் தூங்கவிடாமல் செய்யும் இலட்சியம் நோக்கிய கனவு' என்று ஒரு ரோட்டரி சங்கக் கூட்டத்தில் கேட்ட ஞாபகம். அப்படி வாழ்நாள் முழுவதும் தூங்கவிடாத ஒரு கனவை அந்தக் கவிதை அவனுக்குள் ஏற்படுத்தியது.

'ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்று துவங்கிய அந்தக் கனவு, இன்று ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி தரும் நிறுவனமாய் வளர்ந்து நிற்கிறது. பள்ளிக் கல்வி மட்டும் போதாது, பல்கலைக் கழகக் கல்வியும் இலவசமாய் அளிக்க வேண்டும் என்ற எதிர்காலக் கனவுடன் இயங்கி வருகிறது அந்த நிறுவனம்.

அந்தச் சிறுவன் நான்தான். அந்த நிறுவனம்தான் சேவாலயா.

(சுவாசிப்போம்)

● ச.நாகரத்தினம், வாவிபாளையம்

? நாற்பது ரூபாய்க்கு விற்ற சமையல் எண்ணெய் 66 ரூபாய்; 28 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு 42 ரூபாய்! இது கடந்த ஏழு மாதங்களில் மட்டும் நிகழ்ந்துள்ள விலைவாசி உயர்வுக்கு உதாரணம். யாரும் இதைப் பற்றிப் பேசுவதில்லையே!

! அதெப்படி பேசுவார்கள்? ரெப்ரோ ரேட், எஃப்.டி.ஐ., சென்ஸெக்ஸ், ஃபைனான்ஷியல் இன்க்லூஷன், எஸ்.எம்.ஈ. சரால், என்.பி.ஏ., என்.வி.டி. ஈ.எக்ஸ். என்றெல்லாம் உங்களுக்கும் எனக்கும் புரியாத பொருளாதார மொழியில் பேசிக் கொண்டிருக்கும் நிதியமைச்சருக்கு, கேவலம் விலைவாசி உயர்வு பற்றிப் பேச ஏது நேரம்?

● பொன்விழி, அன்னூர்

? வெள்ளையரை நாம் அடிமைப் படுத்த முடியுமா?

! சரியாப் போச்சு! இப்படி ஒரு விபரீத ஆசையா? யாரையும் நாம் அடிமைப் படுத்தவும் வேண்டாம்; யாருக்கும் அடிமை செய்யவும் வேண்டாம்.

● எச்.ஆன்டனி தமிழரசன், மும்பை

? கிரிக்கெட்டில், 'இந்தியாவின் சீனப் பெருஞ்சுவர்' என்று கூறப்பட்ட திராவிடை, ஒரு நாள் போட்டிகளிலிருந்து நீக்கியதற்குக் கிளம்பியுள்ள எதிர்ப்பு சரியா?

! டுவெண்டி - டுவெண்டி, ஒரு நாள் போட்டி ஆகியவற்றுக்குத் தேவை சுவர் அல்ல; பவர்! களைப்புற்ற கிரிக்கெட் வீரர்களுக்கு அவ்வப்போது ஓய்வளிப்பதும் புதிய திறமையாளர்களைப் பரீட்சித்துப் பார்ப்பதும் தவறேயில்லை. ஆனால், அதைப் பண்புடனும் குற்றச் சாட்டுக்கு இடமின்றியும் அழகாகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதில்லை என்பதுதான் வருத்தம்.

● வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை - 61

? எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் மனித வாழ்க்கை துன்பகரமாகவே காட்சி அளிக்கிறது. மனிதப் பிறவியே தண்டனை அனுபவிக்கத்தானா?



★ பிரில்லியன்ட் கேலிச் சித்திரங்கள்

★ இயலாமையின் பிரதிபலிப்பு


ராமதாஸுக்கு அட்வான்ஸ் வாழ்த்துச் சொல்கிறாரே கருணாநிதி?

! இல்லை; எதிர்நீச்சல் போடுவதற்கு. அதில் உள்ள வீரத்தை உணர்ந்து அனுபவிப்பதற்கு.

● **சிவ.இராமலிங்கம், தூத்துக்குடி**

? குதிரை பேரம் என்றால் என்ன?

! சந்தையில் விற்பவர் - வாங்குபவர் கரங்களைத் துணி போட்டு மூடிக் கொண்டு, விரல்களாலேயே பேரம் பேசி, ஆடு - மாடு, குதிரைகளை வாங்குவர். ரகசிய பேரம் என்பது பொருள். இப்போது எம்.எல்.ஏ.க்கள் அப்படி விலை பேசப்படும் அளவுக்கு நமது அரசியல் தரம் தாழ்ந்து போய்விட்டது.



● **ஆர்.அஜிதா, கம்பம்**

? பா.ஜ.க. வசம் ஆட்சியை ஒப்படைக்க மறுத்த குமாரசாமி, இப்போது பா.ஜ.க. ஆட்சி அமைக்க ஆதரவு தருவோம் என்று 'நேசக்கரம்' நீட்டுவது எதைக் காட்டுகிறது?

! அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; எதிரியுமில்லை என்று வழக்கமாக ஒரு வசனம் சொல்வார்கள். இனி அதனுடன் 'வெட்கமுமில்லை' என்பதையும் சேர்த்துக்கொள்ளலாம் என்பதையே காட்டுகிறது.

● **ஆர்.ராஜேஸ்வரி, எரகுடி** ❐

? சில சமூகங்களிடையே ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து, பதிவு செய்யப்பட்ட வழக்குகள், பசும்பொன் தேவர் நூற்றாண்டு விழாவுக்காக வாபஸ் பெறப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளது பற்றி...?

! வழக்குகளை இழுத்தடிக்காமல் துரிதமாக நடத்தி முடிப்பது நியாயம்; பதிவான வழக்குகளை நடத்தாமலே வாபஸ் பெறுவது அநியாயம்; அநீதி. இப்போதுகூட, தேவர் நூற்றாண்டு விழாவையொட்டியே வன்முறைகள் வெடித்திருக்கின்றன. ஈடுபட்ட அனைவரையுமே மன்னித்து, வழக்குப் பதிவு செய்யாமலே விட்டுவிடுவதா?

● **கி.துரைசாமி, மங்கலப்பட்டி**

? உலகில் கலப்படம் என்பது முதலில் பாலில்தானே ஆரம்பித்திருக்கும்? (செய்வதற்குச் சுலபம் - பால் + தண்ணீர்)

! கலப்படம் என்பது முதலில் மனித மனங்களில் நடந்திருக்கும். அதன் பிரதிபலிப்பாகவே பிற கலப்படங்கள்.

● **ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்**

? அரசியல் கார்ட்டூனிஸ்ட் தாணு மறைவு பற்றி...?

! பிரில்லியன்ட் கார்ட்டூனிஸ்ட். கல்கி பத்திரிகையின் அரசியல் பக்கங்கள் ராஜாஜியின் மேற்பார்வையில் உருவாகி வந்த சமயம், கார்ட்டூன்கள் வரைவதற்கு முன் ராஜாஜியிடம் சுவாரஸ்யமாக வாதம் புரிவார் தாணு. ராஜாஜியும் அதை உற்சாகமாக வரவேற்பார் என்பது தாணுவின் அறிவுக்கூர்மையை உணர்த்தும் விஷயம்.

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

ஆர். ராஜேஸ்வரி, எரகுடி

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

என்.பாலகிருஷ்ணன், மதுரை

பின்னர் பிரில்லியன்ட் டுடோரியல் தொடங்கி, கால மாறுதலுக்கு ஏற்ப அதை கம்ப்யூட்டர் பயிற்சி மையமாக உயர்த்தி, உழைப்பால் உயர்ந்து, நிறை வாழ்வு கண்டவர்.

● **சின்னஞ்சிறு கோபு, சீனிவாசபுரம்**

? 'தீபாவளி, மதம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகை' என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது பற்றி...?

! அது அங்கு வாழ்ந்து வரும் ஏராளமான இந்தியர்களின் திருப்திக்கு. வாழ்த்து கிடைக்கும்; போனஸ் கிடைக்காது!

● **ஜி.பாக்கியலட்சுமி, பாலக்காடு**

? அனைத்து மதத்தினருக்கும் திருமணப் பதிவைக் கட்டாயமாக்கும்படி மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதே?

! பெண்களின் பாதுகாப்புக்கு உதவக்கூடிய மிக நல்ல விஷயம். கட்டாயமாக்காமல் அவரவர் விருப்பப்படி விட்டுவிட வேண்டும் என்று இஸ்லாமிய அமைப்புகள் எதிர்க்க ஆரம்பித்திருப்பது ஆச்சர்யமில்லை, என்றாலும் வருத்தமளிப்பதாகவே இருக்கிறது.

● **மு.ரா.பாலாஜி, கோலார்**

? காவல்துறை - வக்கீல்கள் மோதல் போய் நீதிபதி - வக்கீல் மோதல்! தமிழ் நாட்டில் வழக்குரைஞர் துறை எங்கே போய் நிற்கும்?

! பொதுமக்கள் என்ற நீதிபதி முன்னர், குற்றவாளிக் கூண்டில் நிற்கும்.

● **க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி**

? பா.ம.க. ராமதாஸ் கட்சி ஆட்சிக்கு வந்து காவல் துறையைச் சரிசெய்ய அட்வான்ஸ் வாழ்த்துகளை முதல்வர் கூறியது எதைக் காட்டுகிறது?

! நக்கலாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு, தம் கீழே இயங்கும் காவல் துறையின் பின்னடைவை ஒப்புக்கொண்டுவிட்ட இயலாமையைச் சுட்டிக் காட்டுகிறது.

● **என். சண்முகம், சேலம் - 1**

? இலங்கை இராணுவத் தாக்குதலில் தமிழ்ச்செல்வன் பலியானது விடுதலைப் புலிகளுக்கு ஒரு பின்னடைவா?

! அவ்வாறு எண்ணித்தான் அந்தத் தாக்குதலை இலங்கை அரசு நிகழ்த்தியிருக்கிறது... ஆனால், உண்மையில் இது புலிகளின் ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்யும். புலி ஆதரவாளர்களிடையே அனுதாபம் பெருகும். மொத்தத்தில், இலங்கை அரசுக்கு எதிரான உணர்வுகளை விசிறி விடும்.

● **ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்**

? "அரசு விழாவில் இளைஞர்களைக் கெடுக்கும் வகையில் அசிங்கமான நடனங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இது யாருக்காகச் செய்யப்படுகிறது" என்று ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளாரே?

! போதாக்குறைக்கு, அதை அனைவரும் காண கலைஞர் டி.வி. ஒத்துழைக்கிறது! 'கலைஞர் என்று பட்டம் ஏற்றுக் கொண்டு கலாசார சீரழிவுக்கு இருவிதமாகவும் துணை போவதா?' என்றும் ராமதாஸ் வெளிப்படையாகவே கேட்டிருக்கலாம்.

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை** ★

? சுதந்திர இந்தியாவில் உயர் ஜாதியினரின் நிர்வாகம் காரணமாகவே ஊழல் பெருத்துவிட்டது என்று சீனியர் வக்கீல் ராம் ஜெத்மலானி கூறியுள்ள கருத்து சரியா?

! அவர் யார் சார்பில் வழக்காடுகிறாரோ, அதற்குச் சாதகமாகப் பேசுவார். அது அவர் கடமை. என்றாலும், அபத்தமான வாதங்கள் எடுபடாது. நீதிபதிகள் முட்டாள்கள் அல்ல. வழக்குரைஞர்கள் நீதிமன்ற வாதங்களைச் சட்டத்தின் நுணுக்கங்கள் அடிப்படையில் அமைக்க வேண்டுமே தவிர, அரசியல் பிரசார அடிப்படையில் அல்ல.

ஆசிரியர் பக்கம்

விவாகரத்து



வைபோகமே!

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் ஒரு கண்காட்சி நடத்தியிருக்கிறார்கள். முழுக்க முழுக்க விவாகரத்துத் தொடர்பான விஷயங்களுக்காக...! சட்ட நுணுக்கங்கள், சொத்துப் பகிர்வு முறைகள், மனோதத்துவ ரீதியான ஆலோசனைகள், மறுமணத்துக்குத் தயாராக வகுப்புகள்(!), விவாகரத்துக்குப் பின் குழந்தைகளைத் தனியே வளர்க்கக்கூடிய தாய் அல்லது தகப்பனுக்குப் பயிற்சி/வழிகாட்டல்... இத்தியாதி இத்தியாதி அடங்கிய இந்தக் கண்காட்சியில், ரோமன் கத்தோலிக்க சர்ச்சும் பங்கேற்று, விவாகரத்து அனாதைகளுக்கு வழிகாட்டல் வழங்கியிருக்கிறது!

சென்னை நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை வளர்கிற வேகத்தைப் பார்க்கிறபோது, வியன்னா கண்காட்சியைக் காட்டிலும் கோலாகலமான விவாகரத்துக் கண்காட்சி ஒன்று, விரைவில் நந்தம்பாக்கம் பொருட்காட்சித் திடலுக்கு வந்து சேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

விவாகரத்து என்பது இறுதித் தீர்வு என்கிற நிலைமை மாறி, இன்றைக்கு அதுவே முதலும் முடிவுமான தீர்வாகக் கருதப்படும் நிலை வந்துவிட்டது!

குடும்ப அமைப்பு என்கிற அழகான, பொருள் பொதிந்த கட்டுப்பாடுக்கு நாம் கொடுத்து வரும் மதிப்பு குறைந்து வருவதன் அடையாளமே இந்தப் போக்கு.

சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் எவ்வளவு வேகமாகவும் எத்தனை புரட்சிகரமாகவும் நடந்தபோதிலும், மனிதனின் ஆதாரப் பண்புகளும் மதிப்பீடுகளும் குலையாமல் காக்கக்கூடியது குடும்ப அமைப்புதான். ஆண் - பெண் பேதங்கள், பரஸ்பர ஆக்கிரமிப்பு முயற்சிகள், உறவுச் சிக்கல்கள் போன்ற சிடுக்குகளில் அவ்வமைப்பு கட்டுண்டு விடக்கூடாது என்பதால்தான், உலகமே ஒரு குடும்பம் (வசுதைவ குடும்பம்) என்று அன்பின் எல்லைகளை விஸ்தரித்துக் காட்டியது இந்தியப் பாரம்பரியம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று அரவணைத்தது தமிழ் மரபு. சுவதேசோ புவனத்ரயம் (மூவுலகங்களும் நமது தாய்நாடு) என்று ஆதிசங்கரர் விண்வெளியைக் கடந்து நேசம் பரப்பச் சொன்னார்.

இந்த வழிகாட்டல்களை நாம் உல்டாவாகப் புரிந்துகொண்டு விட்டதாகவே தோன்றுகிறது! அதனால்தான் உலகமயமாக்கலை மட்டும் ஏற்றுக்கொண்டு, குடும்ப விழுமியங்களைத் தொலைக்கத் தயாராகி விட்டோம். 'எம்.என்.ஸி. பணியிலுள்ள ஆறிலக்கச் சம்பளம் வாங்கும் சாஃப்ட்வேர் இன்ஜினியருக்கு...' என்று ஆரம்பிக்கிற மணமகன்/மணமகள் தேவை விளம்பரங்கள் இதைத்தானே உணர்த்துகின்றன!

திருமண பந்தத்தைப் பேணிக் காக்க அடிமைத்தனத்தில் உழன்றுகொண்டிருக்கக்கூடாது. சில திருமணங்கள் விபத்துகளாக முடியலாம். இவற்றிலிருந்து விடுவிக்கவே விவாகரத்து என்ற ஆபத்சகாயத்தைச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், வாழ்க்கையையே விபத்து போல் வாழ்பவர்கள், திருமண பந்தத்திலிருந்து மட்டும் தங்களை விடுவித்துக்கொள்வதால் எந்த ஆதாயமும் அடைய முடியாது! இதை நீதிமன்றம் கற்றுத் தராது. நமது நிதானமும் சிந்தனையும்தான் உணர்த்த முடியும். ○

Gurunathar Charanam

PRASHANTI

House of Silk Cottons



PRASHANTIயின்

Silk COTTONஉடன்

தீபாவளியை

கொண்டாடுங்கள்!!!

Discount upto

10%

till Nov 7th



PRASHANTI

16, 6th Cross St, C.I.T. Colony, (Behind Chettiar Hall)
Mylapore, Chennai - 4. Ph: 2499 1850/ 2499 7636

Also at PRASHANTI'S PARIPURNA
52, 4th Main, 17th Cross, Malleswaram,
Bangalore - 55. Ph: 2334 1632/ 98861 85951

Timing:
10 am to 8 pm

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

நகாசு எம்பாஸ் பட்டு.*

தொடுங்கள் உணருங்கள்
தன்நிகரற்ற தனித்தன்மையை
உணருங்கள்



83 வருட
பட்டுப் பாரம்பரியம்

RmKV
innovative silks

பனகல் பார்க்
சென்னை
போன் 044 28144445
வடக்கு ரத வீதி
திருநெல்வேலி
போன் 0462 2333105
www.rmkv.com

* technique patent applied for

subrata bhowmick design